உதயன்

24 பக்கங்கள்

யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 237 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 5, திங்கள் 21.07.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

தெளிவான வானிலை

காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04



தரைவழித் தாக்குதல் ஆரம்பம் 7



வன்கொடுமைக்கு எதிராகப் போர் 8



இனவெறியின் ஒருமுகமே 14



அமைதியான ஆசியாவுக்கான சிறு காலடி 15

# தீர்க்கமான முடிவொன்றை எடுக்க வேண்டும் இந்தியா

## இல்லாவிட்டால் ஆதரவளிக்கும் சக்திகளுடன் இணையும் நிலைக்கு தமிழர்கள் செல்வது தவிர்க்க முடியாது; சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 21

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியா தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும். சரியான கொள்கைத் திட்டமிடல்கள் இல்லாவிட்டால், தமிழ் மக்கள் தமது இருப்பையும் - பாதுகாப்பையும் - தனித்துவத்தையும் தக்க வைக்க, தமக்கே உரித்தான உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள - தமக்கு ஆதரவளிக்கும் சக்திகளுடன் இணைந்துசெயற்படும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்பதை இந்தியா புரிந்துகொள்ள வேண்டும். - இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார் ஈழ மக்கள் புரட் சிகர விடுதலை முன்னணி யின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அதன் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 34ஆவது சிறப்பு மாநாடு நேற்று நடைபெற்றது. 'வலுவான ஐக்கியத்தை நோக்கி' என்ற தொனிப் பொருளில் நடைபெற்ற அந்த மாநாட்டுக்குத் தலைமையுரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

### பிராந்திய நலன்

இலங்கையின் சர்வதேச முக்கியத்துவம், இந்து சமுத்திரத்தில் அதற்கு இருக்கக் கூடிய கேந்திர முக்கியத்துவம் மாத்திரமே. இந்து சமுத்திரத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்

22 ஆம் பக்கம் பார்க்க

## ஆணைக்குழு, நிபுணர்கள் சந்திப்பு அடுத்த வாரம்

யாழ்ப்பாணம், ஜுலை 21

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஆணைக் குழுவுக் கும், அதற்கு ஆலோசனை வழங்குவதற்கென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள மூவரடங்கிய சர்வதேச நிபுணர்கள் குழுவுக்கும் இடையே அடுத்த மாதம் முதல் வாரத்தில் முக்கிய சந்திப்பொன்று இடம் பெறவுள்ளது.

எதிர்கால விசாரணைத் திட்டம், விடயப்பரப்பு விரிவாக்கத்துக்கமைய முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கை, ஆலோசனைப் பொறிமுறை உட்பட மேலும் பல விடயங்

22 ஆம் பக்கம் பார்க்க

# மூன்று நாடுகளில் ஐ.நா. விசாரணை

கொழும்பு, ஜுலை 21

இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழு, விசாரணை அமர்வுகளை நடத்துவதற்கு ஜெனிவா, பாங்கொக் மற்றும் நியூயோர்க் ஆகிய மூன்று நகரங்களைத் தெரிவு செய்துள்ளது.

ஜெனிவா தகவல்களை மேற்கோள் காட்டி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஊடகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

ஐ.நா.விசாரணைக் குழுவுக்கு

22 ஆம் பக்கம் பார்க்க




# விசாரணைகள் நியாயமாக நடப்பதை உறுதி செய்வேன்


## ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு தலைவர் கூறுகிறார்

கொழும்பு, ஜுலை 21

நியாயமான முறையில் விசாரணைகள் நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவேன் என்று தெரிவித்துள்ளார் போர்க்குற்றங்கள் குறித்தும் விசாரிக்கப் பணிக்கப்பட்டுள்ள, காணாமற்போனோர் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்குஆலோசனைவழங்க, நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவின் தலைவரான, சேர் டெஸ்மன் டி சில்வா.

ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால், இறுதிப்போரில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதாபிமான சட்டமீறல்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேநேரத்தில் இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு, போர்க் குற்றங்கள் தொடர்பிலும் விசாரணை மேற்கொள்ளுமாறு அரசு பணிப்புரை விடுத்துள்ளது.

22 ஆம் பக்கம் பார்க்க



*சேர் டெஸ்மன் டி சில்வா*

உள்ளூர் பொறிமுறைகள் நம்பகத்தன்மை மிக்க சுயாதீன சுதந்திரமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கான சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தராதரங்களை கொண்டிருக்க வேண்டும் என ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவினர் சர்வதேச தரத்தில் பக்கச்சார்பற்ற முறையில் விசாரணைகளை முன்னெடுக்க உதவுவார்கள் என்று நம்புவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. பக்.2

## போரின் வடுக்கள் ஆறுவதற்கு நாளாகும்

*– ஜனாதிபதி*

கொழும்பு, ஜுலை 21

போரால்ஏற்பட்ட வடுக்கள்ஆறுவதற்கு இன்னமும் நீண்ட நாள்கள் தேவைப்படும் என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள போர்த்துக்கல் பிரதமருடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"போரின் வடுக்கள் ஆற நீண்ட நாள்களாகும். போர் காரணமாக இலங்கையின் தெற்கைப் போன்றே வடக்கிலும் பெருமளவு இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர்."- என்று அந்தச் சந்திப்பில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ற)

## எல் நினோவால் ஆபத்து

கொழும்பு, ஜுலை 21


எதிர்வரும் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களின் பின்னரான காலப்பகுதியில், எல் நினோ எனும் கடுமையான காற்றால் இலங்கை பாதிக்கப்படலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கையில் வடக்கு தவிர்ந்த ஏனைய அனைத்து பிரதே

22 ஆம் பக்கம் பார்க்க



கீரிமலையில் உள்ள தமது காணிகளை துப்புரவு செய்வதற்கு பொதுமக்கள் நேற்று முற்பட்டனர். ஆயினும் பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தியுள்ளனர். இதனையடுத்து, பொலிஸாருக்கு எதிராக, காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் பொதுமக்களால் முறைப்பாடு பதிவு செய் யப்பட்டுள்ளது. (விரிவான தகவல் 2 4ஆம் பக்கத்தில்)



## முஸ்லிம்கள் வெகு விரைவில் கூட்டமைப்புடன் கை கோர்ப்பர்

பக்.3

# வடக்கு அபிவிருத்திக்கான செயலணியின் பணிகள் முடிவு

## மீள்குடியமர்வு முழுமையாகாத நிலையிலேயே

கொழும்பு, ஜுலை 21

வடக்கின் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் இன்னமும் முழுமைப்படுத்தப்படாத நிலையில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான வடக்கின் அபிவிருத்திக்கான ஜனாதிபதி விசேட செயலணியின் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. அதற்குப் பதிலாக - ஜனாதிபதி விசேட செயலணியால் கையாளப்பட்ட விவகாரங்களைக் கவனிப்பதற்கு நல்லிணக்கத்துக்கான புதிய பிரிவு ஒன்று விரைவில் உருவாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் இறுதிக்கட்டத்தை எட்டியிருந்த, 2009 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி, வடக்கின் அபிவிருத்திக்கான ஜனாதிபதி விசேட செயலணி பஸில் ராஜபக்ஷ தலைமையில் உருவாக்கப்பட்டது. 19 பேர் கொண்ட இந்தச் செயலணி, வடக்கில் மீள்குடியமர்வு, புனரமைப்பு, பொருளாதார அபிவிருத்தி, சமூக உட்கட்டமைப்பு வசதிகள், உள்ளிட்டவற்றைக் கையாண்டு வந்தது.

இந்தநிலையில் தற்போது

22 ஆம் பக்கம் பார்க்க

# பிரபாகரனால் முடியாததை அரசு இன்று செய்கின்றது

## குற்றஞ்சாட்டுகின்றார் ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஜூலை 21
தமிழீழ விடுதலைப் புலிக ளின் தலைவர் பிரபாகரன் தேசிய ஐக்கியத்திற்கு தடை யேற்படுத்தி, நாட்டை இரண் டாக பிளவுபடுத்த முயற்சித் தார். எனினும் அவரது முயற்சி தோல்வியடைந்தது. இந்த நிலையில், சிறிய தரப்பினர் களின் செயற்பாடுகள் காரண மாக நாட்டின் பெரும்பான்மை பௌத்தர்களுக்கு அவமானம் ஏற்பட்டுள்ளது. இன்றைய மஹிந்த அரசு இனங்கள் மத்தியில் பிளவுகளை ஏற் படுத்தி வருகின்றது.- இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. கம்பளைப் பிரதேசத்தில் நடை பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற் றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"நாடாளுமன்றத் தேர்தலை யும் மாகாணசபைத் தேர்தல் களையும் ஒரே தினத்தில் நடத்த வேண்டும். இதன் மூலம் பணத்தை சேமிக்க முடி யும். இந்த ஆண்டில் இரண்டு மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன.

நிறைவேற்று அதிகார ஜனா திபதி முறைமையை இரத்துச் செய்வதால் அது பற்றி பேச வேண்டியதில்லை. ஏனைய தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவதனால் மக்களுக்கு தொல்லைகள் ஏற்படுவதனை தவிர்க்க முடியும்.

சிங்கள பௌத்தர்களை பாது காப்பதற்காக நாட்டில் வாழும் சகல மக்களையும் பாதுகாப் பது அவசியமானது. வேலுப் பிள்ளை பிரபாகரன் தேசிய ஐக்கியத்திற்கு தடையேற் படுத்தி, நாட்டை இரண்டாக பிளவுபடுத்த முயற்சித்தார். எனினும் அவரது முயற்சி தோல்வியடைந்தது. இந்த நிலையில், சிறிய தரப்பினர்க ளின் செயற்பாடுகள் காரண மாக நாட்டின் பெரும்பான்மை பௌத்தர்களுக்கு அவமானம் ஏற்பட்டுள்ளது. அதேவேளை சில பொய்யான விடயங்களை திருத்த அரசு முயற்சிக்க வில்லை"- என்று தெரிவித் துள்ளார். (ற)

# உள்ளக விசாரணையில் உலகத் தரம் வேண்டும்

## வலியுறுத்துகின்றது அமெரிக்கா

கொழும்பு, ஜூலை 21
ஜனாதிபதி ஆணைக்குழு முன் பாகச் சாட்சியமளித்த பலர், இராணுவத்தினரால் அச்சு றுத்தப்பட்டு - மிரட்டப்பட்டுள்ள னர் என்று தெரிவித்துள்ள அமெரிக்கா, இலங்கையின் உள்ளக விசாரணைப் பொறி முறை சர்வதேச தரமிக்க - நம்பகத்தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

காணாமற் போனோர் தொடர் பில் விசாரணை மேற்கொள் ளும் ஜனாதிபதி ஆணைக்குழு வுக்கு, விரிவுபடுத்தப்பட்ட விட யப்பரப்புக்கள் மூலம் போர்க் குற்றங்கள் குறித்தும் விசா ரணை மேற்கொள்வதற்குப் பணிக்கப்பட்டுள்ளது. அத்து டன் இந்த ஆணைக்குழு வுக்கு ஆலோசனை வழங்க மூன்று சர்வதேச நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த விடயங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அமெ ரிக்கா இவ்வாறு தெரிவித் துள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளர் ஒரு வர், ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில்,
"அர்த்தமுள்ள நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை மீறல் கள், இரு தரப்பாலும் இழைக் கப்பட்ட குற்றங்கள் உள்ளிட்ட மோதல்களால் ஏற்பட்ட இன் னும் தீர்க்கப்படாத பிரச்சினை களுக்குத் தீர்வு காண்பதை உறுதிப்படுத்தும் இலங்கை யின் உள்நாட்டுச் செயல்முறைக்கு அமெரிக்கா நீண்டகாலமா கவே ஆதரவு தெரிவித்து வருகிறது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுகள் குறித்து விசாரிப்ப தற்கான நம்பகமான விசார ணைகளை நாம் வரவேற்கி றோம்.

ஆணைக்குழு முன் சாட்சிய மளித்த பலர், பரந்தளவில் இலங்கைப் படையினரால் அச்சுறுத்தப்பட்டனர் என்றும், மிரட்டப்பட்டனர் என்றும், பல அறிக்கைகள் வெளியாகியுள்ளன. காணாமற் போனோர் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக் குழுவின், நம்பகத்தன்மை மற்றும், சுதந்திரம் தொடர் பான அனைத்துலக தர நிய மங்களை உறுதி செய்வதை, அதற்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவால், உதவ முடியும் என்று நாம் நம்புகிறோம்.

ஊடகவியலாளர்கள், மத சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள், சட்டத்தின் ஆட்சி பலவீனப்பட்டுள்ளமை, சட்ட விரோத செயல்களில் ஈடு படுவோர் தண்டிக்கப்படாமை என்பன, இலங்கையின் ஜன நாயக நடைமுறையின் பெரு மைகளை சீர்குலைக்கின்றன. மனித உரிமைகள், வெளிப் படைத்தன்மை, ஜனநாயக ஆட்சிக்கு நாடுகள் மதிப்பளிப் பது பூகோள பொருளாதார செழிப்புக்கு அவசியமானது. ஜனநாயகம், நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் இல்லாமல், இலங்கை மக்களுக்கு நிலை யான அமைதியோ செழிப்போ உருவாகாது"- என்று குறிப் பிட்டுள்ளார். (ற-5)

# யாழில் அதிகாரிகளுக்கு ஊடக செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 21
யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தலைமையகத் தினால் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட தொலைத்தொடர் புகள் மற்றும் ஊடகங்கள் பற்றி ஆறுநாள் செயலமர்வு கடந்த 19 ஆம் திகதி நிறைவு வெற்றது.

இந்த ஊடக செயலமர்வில் விரி வுரைகளை நடத்துவதற்கு யாழ். பல்கலைக்கழகத்தின் ஊடகத்துறை விரிவுரையாளர் அருட்தந்தை ரூபன் மரியம் பிள்ளை, யாழ்ப்பாணத்தின் புத்தி ஜீவிகள் மற்றும் இரா ணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிக சூரிய ஆகியோருடன் கொழும்பி லிருந்து வருகை தந்த ஊடக வியலாளர்கள் ஒத்துழைப்பு வழங்கினர்.

யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா செய லமர்வில் கலந்துகொண்ட அதி காரிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.



இலங்கைக்கு வந்துள்ள போர்த்துக்கல் பிரதமர் பெட்ரோ பஸஸ் கொஎல்ஹோ, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினார்.

# இலங்கை மீனவர் விடுவிப்பு

சென்னை, ஜூலை 21
இந்தியக் கடல் எல்லைக்குட் பட்ட பகுதியில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில், இந்திய கடலோர காவல் படை யினரால் கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 5 இலங்கை மீனவர்களும் இலங்கைக்கு திருப்பியனுப் பப்பட்டுள்ளனர்.

இவர்களை பாதுகாப்பான முறையில் இலங்கைக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு இந்திய கடலோர பாதுகாப்பு படையினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர் என்று இந்திய பொலிஸ் அத்தியட்சகர் சத்திய பாரத போய் தெரிவித்துள் ளார். விடுவிக்கப்பட்ட மீனவர் கள் விரைவில் இலங்கையை வந்தடைவர் என்றும் தெரிவிக் கப்படுகின்றது. (ற)

# இலங்கைக்கு எண்ணெய் விநியோகிக்கப்படவில்லை

## ஈரான் அரசு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21
இலங்கைக்கு எரிபொருள் விற்பனை செய்யப்படுகின் றது என்று வெளியாகிய தக வலை ஈரான் நிராகரித்துள் ளது.

இலங்கை மற்றும் தென்னா பிரிக்காவுக்கு ஈரான் எண் ணெய் வழங்கவில்லை என்று தேசிய ஈரான் எண்ணெய் நிறுவன வெளிவிவகார அதி காரி தெரிவித்துள்ளார்.

ஈரானிடமிருந்து நேரடியாக எரிபொருளைப் பெற்றுக் கொள் ளாது வேறு மூன்றாம் நாடொன் றின் ஊடாக இலங்கை ஈரா னிய எரிபொருள்களை இறக்கு மதி செய்வதாகத் தகவல் வெளியானது. ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளா தாரத் தடையை தவிர்க்கும் நோக்கில் இவ்வாறு மூன்றாம் நாடொன்றிடமிருந்து இலங்கை எரிபொருள் இறக்குமதி செய் யப்படுவதாகக் குறிப்பிடப்பட்டி ருந்தது.

> ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை தவிர்க்கும் நோக்கில் மூன்றாம் நாடொன்றிடமிருந்து இலங்கை எரிபொருள் இறக்குமதி செய்கின்றது என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

அதுகுறித்துக் கருத்துத் தெரி விக்கும்போதே ஈரான் இவ் வாறு மறுப்புத் தெரிவித்துள் ளது. அதேவேளை, இலங்கை மாற்று வழிகளைப் பயன் படுத்தி ஈரானிடமிருந்து எரி பொருளைப் பெற்றுக்கொள்வ தாக வெளியான செய்தியை இலங்கை அரசும் முன்னர் நிராகரித்திருந்தது. (ற)

# எரிகாயத்துடன் சடலம் மீட்பு

கொழும்பு, ஜூலை 21
அனுராதபுரம் அசிரிக்கம பகுதி யில் எரிகாயங்களுடன் உயிரி ழந்திருந்த சிவில் பாதுகாப்பு படை வீரரின் சடலம் மீட்கப் பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென் றுக் கொண்டிருந்தபோது அடை யாளம் தெரியாத சிலர் அவரை கொலை செய்து சடலத்திற்கு தீ வைத்திருக்கலாம் என சந் தேகிக்கப்படுகின்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்ச கர் அஜித் ரோஹண தெரி வித்துள்ளார்.

அனுராதபுரம் அசிரிக்கம பகு தியைச் சேர்ந்த 39 வயதான சப்ரி மொஹமட் இஷாக் என்ற சிவில் பாதுகாப்பு படை வீரரே சடலமாக மீட்கப்பட்டுள்ள ளார். (ற)

# தேர்தல் என்று கூறினாலே எதிர்க்கட்சிக்கு கால் நடுங்கும்

## அமைச்சர் டி.பீ.ஏக்கநாயக்கா கூறுகின்றார்



> ஐக்கிய தேசியக் கட்சி இன்று கொழும்பில் இருந்துகொண்டு ஊடகங்கள் மூலம் நாட்டு மக் களுக்கு அறிக்கையை மட்டும் விடும் ஒரு கட்சியாகி விட்டது.

கொழும்பு, ஜூலை 21
1994ஆம் ஆண்டில் இருந்து நாம் 20 வருடங்களாக சகல தேர் தல்களிலும் வெற்றிபெற்று வரு கின்றோம். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியைத் தழுவி பொதுமக்களின் வெறுப் புக்கு ஆளாகிறது. இதன் கார ணமாக தேர்தல் என்றாலே எதிர்க்கட்சிக்கு கால்நடுங்க ஆரம் பித்து விடும் - இவ்வாறு தெரி வித்துள்ளார் கலாசார அலுவல் கள் அமைச்சர் டி.பீ.ஏக்கநாயக்கா.

கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற் றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ஐக்கிய தேசியக் கட்சியினர் பல்வேறு திட்டங்களை மேற் கொண்டனர். அதில் ஒன்றும் பலிக்கவில்லை. இறுதியாக சிறிகொதாவில் கூடி ஆயிரக் கணக்கான பொதுமக்களை தயார்ப்படுத்தி அவர்களுக்கு சம் பளம் கொடுத்து ஊர் ஊராக அனுப்பினர். எங்காவது புதிய கட்டடம் இருந்தால் அல்லது ஏதாவது சொத்து ஒன்று கை மாறினால் யாராவது ராஜபக்ஷ குடும்பத்தின் பெயரைக் கூறி, இது இன்னாரது சொத்து என்ற தாரக மந்திரத்தைக் கூறுவது தான் அவர்களது வேலை.

ஐக்கிய தேசியக் கட்சி இன்று கொழும்பில் இருந்துகொண்டு ஊடகங்கள் மூலம் நாட்டு மக் களுக்கு அறிக்கையை மட்டும் விடும் ஒரு கட்சியாகி விட்டது.

இன்று இலங்கையில் உள்ள 23 தொலைக்காட்சி நிறுவனங் களும் 49 வானொலிகளும் 189 பத்திரிகை நிறுவனங்க ளும் 220 இணையத் தளங்க ளும் அரசுக்கு எதிராக பிரசா ரம் செய்கின்றன.

காலையிலிருந்து மாலைவரை, சனிக்கிழமை முதல் வெள்ளிக் கிழமை வரை சதா இப்படியே அரசுக்கு எதிராக பிரசாரம் செய்கின்றன. லேக்ஹவுஸ் நிறுவனமும் ரூபவாஹினி, ஐ.டி.என், லக்ஹண்ட ஆகி யவை மட்டுமே அரசு சார் பான செய்திகளை வெளியிடுகி ன்றன"- என்று தெரிவித்துள் ளார் அவர். (ற)

# உதயன்

விலை ரூபா யாழ். 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 05 திங்கட்கிழமை (21.07.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 237


# முஸ்லிம்கள் வெகு விரைவில் கூட்டமைப்புடன் கை கோர்ப்பர்

## தமிழருக்கு எதிரான அரசுடன் இணைந்திருப்பது சரியா என்றும் சம்பந்தன் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூலை 21

**மாகாணசபை முறைமையை ஒழித்து அந்த அதிகாரங்களையும் தங்கள் கைக்குள் எடுத்துக்கொள்ள நினைக்கும் அரசுடன் ஒட்டிக்கொண்டு முஸ்லிம்கள் அரசியல் செய்வது முறையற்றது என்று நேரடியாகக் குற்றஞ்சாட்டினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். தங்கள் நிலைமை உணர்ந்து அவர்கள் வெகுவிரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கரம் சேர்ப்பர் என்றும் அவர் தெரிவித்தார்.**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹசன் அலி முன்பாகவே இந்தக்கேள்வியைஅவர்எழுப்பினார். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 34 ஆவது சிறப்பு மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வு வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே சம்பந்தன் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2001 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரையில் நாங்கள் ஐக்கியமாகச் செயற்பட்டு வருகின்றோம். இனியும் ஐக்கியமாகச் செயற்படுவோம். மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்து, கிடைக்கின்ற ஜனநாயகச் சந்தர்ப்பங்களில் எல்லாம் எங்களுக்கு வாக்களித்திருக்கின்றார்கள். அந்த மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக நடக்க வேண்டிய கடப்பாடு எங்களுக்கு இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பல்வேறு கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. கட்சிகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அவற்றை நாம் பேசித்தீர்த்து ஒற்றுமைப் பாதையில் செயற்பட்டு வந்திருக்கின்றோம். நாம் அந்தப் பாதையிலிருந்துதவறமாட்டோம்.

இலங்கை அரசை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுமாறு, சர்வதேச சமூகம் வலியுறுத்தி வருகின்றது. இதற்குக் காரணம், எமது மக்கள் எங்களுக்கு தந்த அங்கீகாரமே.

இந்த நாட்டில் நாங்கள் எவரையும்எதிர்க்கவில்லை. பெரும்பான்மையினத்தவர்கள் எங்கள் நண்பர்கள். இன்று ஆட்சியிலிருப்பவர்கள், பெரும் பான்மையின மக்கள் மத்தியில் துவேஷத்தை கிளப்புகின்றார்கள். அந்தச் சதி வலைக்கள் நாம் சிக்கிவிடக்கூடாது. பெரும்பான்மை சிங்களவருடன் இணைந்து நாங்கள் எங்கள் பிரச்சினையைத் தீர்த் துக் கொள்ள வேண்டும். நாங்கள் நாட்டைப் பிரிக்கும் படியாக கேட்கவில்லை. பூர்வீகமாக வாழ்ந்து வந்த பிரதேசத்தின் அடிப்படையில் இறைமையின் அடிப்படையில், அதிகாரத்தைப் பகிரும் படி கேட்கின்றோம். எமது மக்களுக்கு அவர்களின் இறைமையின் அடிப்படையில் அதிகாரம் பகிரப்பட வேண்டும். இதுதான் எமது நிலைப்பாடு.

நாங்கள் நிதானமாக - பக்குவமாக செயற்பட வேண்டிய காலத்தில் இருக்கின்றோம். எங்கள் மக்களுக்கு உரியனவற்றைக் கேட்கின்றோம்.

எங்களின் அர்ப்பணிப்புக் காரணமாக, எங்கள் இளைஞர்களின் தியாகம் காரணமாக 1987 ஆம் ஆண்டில் இந்த மாகாணசபை கிடைத்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில். தமிழ் பேசும் மக்கள் பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு கிடைத்த மாகாணசபை முறைமையை இல்லா தொழிக்க வேண்டும் என்று செயற்படுபவர்களுடன் சேர்ந்து முஸ்லிம்கள் ஆட்சி நடத்துவது சரியா? முஸ்லிம் மக்களின் விருப்பத்துக்கு மாறாக முஸ்லிம் தலைமை செயற்பட்டு வருகின்றது. இதை அவர்கள் உணரும் காலம் வந்துவிட்டது. எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முஸ்லிம்களும் கைகோர்த்துச் செயற்படுவார்கள் - என்றார். (ஐ-5)

## தமிழக மீனவர் தொழிலை புறக்கணிக்க தீர்மானம்

இராமநாதபுரம், ஜூலை 21

இலங்கை சிறைகளிலுள்ள மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

தடைக்காலம் முடிந்து கடலுக்குச் சென்ற தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை தொடர்ந்து தாக்கியும், கைது செய்தும் வருகிறது. கைது செய்யப்பட்ட மீனர்வர்களை விடுவிக்க உறவினர்கள் மற்றும்

(22 ஆம் பக்கம் பார்க்க)



வடக்கு விவசாய அமைச்சும் காரைநகர் பிரதேச சபையும் இணைந்து காரைநகர் ஊரிக் கிராமத்தில் நேற்று குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தன.

## மட்டு., திருமலையில் மூன்று சடலங்கள் மீட்பு

மட்டக்களப்பு, ஜூலை 21

மட்டக்களப்பு; திருகோணமலைப் பகுதிகளில் வெவ்வேறாக மூன்று பேர் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

மட்டக்களப்பு, தாளங்குடா பகுதியிலுள்ள முந்திரிகைக் காட்டிலிருந்து இளைஞர் ஒருவர் நேற்று மதியம் சடலமாக மீட்கப்பட்டார்.

தாளங்குடா சமுர்த்தி வங்கி வீதியைச் சேர்ந்த நல்லரத்தினம் உதயகுமார் (வயது - 22) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று காலை 9 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டவர் திரும்பி வரவில்லை என்றும் தேடிச் சென்றபோது அவர் சடலமாகக் காணப்பட்டார் என்று அவரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேபோன்று மட்டக்களப்பு பொதுச்சந்தைப் பகுதியில் ஆணொருவரின் சடலம் நேற்று முற்பகல் 10 மணியளவில் மீட்கப்பட்டது என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, கரவெட்டியைச் சேர்ந்த முத்துப்பிள்ளை கணபதிப்பிள்ளை (வயது-53 ) என்ப

(22 ஆம் பக்கம் பார்க்க)

இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடி தண்ணீர்

## உணவுக்கும் குடிதண்ணீருக்கும் கையேந்த வைக்க சதித் திட்டம்

மாற்று வழிமுறைகளே உகந்தது என்கிறார் ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், ஜூலை.21

தீவகம்முழுவதும் சுத்தமான குடிதண்ணீர் தேவையான அளவு விநியோகிக்கும் நிரந்தரமான திட்டத்தை வடக்கு மாகாண சபை அதன் ஆட்சிக் காலம் முடிவடைவதற்குள் வகுத்து நிறைவேற்றும். கிளிநொச்சி மாவட்டத்தின் உணவு உற்பத்தியை நிர்மூலமாக்கி உணவுக்காகவும், தண்ணீருக்காகவும் அரசிடம் கையேந்த வைப்பதற்காகவே, இரணைமடுத் திட்டம் கையிலெடுக்கப்பட்டுள்ளது. வடக்கின் குடிதண்ணீர் விநியோகத்துக்கு வேறு மாற்றுத்திட்டங்கள் இருந்தும் இரணைமடுத் திட்டத்தை மட்டுமே ஒரே தீர்வாக அரசும் அதன் ஆதரவாளர்க

(22 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் விடுதலை வேட்கை முஸ்லிம் மக்களிடத்தில் இல்லை

இவ்வாறு தெரிவித்தார் ஹசன் அலி

யாழ்ப்பாணம், ஜூலை 21

தமிழர்களாகிய உங்களிடத்திலிருக்கின்ற விடுதலை வேட்கை எங்களிடத்தில் இல்லை. எமது சமூகம் பலவீனமாகவே இருக்கிறது. இந்தக் குறைபாடுகளுடன் நாம் தொடர்ந்தும் பயணிக்க முடியாது. எனவே தமிழர்களும் முஸ்லிம்களும் ஓர் அணியில் திரண்டால் மட்டுமே இனவாத அரசை விரட்ட முடியும். இவ்வாறு தெரிவித்தார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹசன் அலி.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 34 ஆவது மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாங்கள் நிர்ப்பந்தம் காரண

(22 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பிடிபட்ட மாடுகள் கமக்கார அமைப்பிடம்

தென்மராட்சி, ஜுலை 21

சாவகச்சேரி கல்வயல் பகுதியில் பயிரழிவுகளை மேற்கொண்ட இரண்டு மாடுகள் விவசாயிகளால் பிடிக்கப்பட்டு கல்வயல் கமக்கார அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த மாடுகளை உரிமை கோரிப் பெற்றுக் கொள்ளுமாறு அமைப்பின் செயலாளர் நா. வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஒ-9)


**காணி விற்பனைக்கு**

கொடிகாமம் சந்தி, கண்டி வீதிக்கு 300 மீற்றர் தூரத்திலுள்ள 25 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. (43393)(7.6.3)

தொடர்பு : 071 440 6373

**காணி விற்பனைக்குண்டு**

உடுவில் றோட் பெரியபுலம் மானிப்பாயில் 2 பரப்பு 1.6குழி காணி விற்பனைக்குண்டு. (50170)(7.6.3)

தொடர்பு : 077 190 5262


## காணாமற் போன பசு கேபிள் வளையத்துடன் திரும்பி வந்தது

வரணி, ஜுலை 21

மேய்ச்சலுக்குப் போய் திரும்பி வராத நிலையில் காணாமற்போன பசுமாடு ஒன்று 5 தினாங்களுக்குப் பின் கழுத்தில் கேபிள் கம்பி வளையத்துடன் திரும்பியுள்ள சம்பவம் வரணி வடக்கில் இடம்பெற்றுள்ளது.

இது பற்றிக் கூறப்படுவதாவது; குறித்த பசுமாடு கூட்டு மாடுகளுடன் மேய்ச்சலுக்கு காட்டுப் பகுதிக்குச் சென்றிருந்த வேளை அன்றைய தினம் திரும்பி வரவில்லை. கன்று வீட்டில் கட்டப்பட்டிருந்த நிலையில் தாய்ப்பசு திரும்பி வராததை அவதானித்த உரிமையாளர் பல இடங்களிலும் தேடியும் காணாமற்போன நிலையில் இந்தப் பசுமாடு 5 தினாங்களுக்குப் பின் திரும்பி வந்துள்ளது. குறித்த பசுமாடு காட்டுப் பகுதியில் கேபிள் கம்பியால் தடம் வைத்துப் பிடித்திருந்த நிலையில் கேபிளை அறுத்துக் கொண்டு இந்தப் பசுமாடு தப்பி வந்திருக்கலாம் என கூறப்பட்டது.

இதே சமயம் கடந்த காலங்களில் மேலும் 3 பசுமாடுகள் இவ்வாறு காணாமற் போய் உள்ளதாக குறித்த கால்நடை உரிமையாளர் தகவல் தெரிவித்தார். (ஒ-122)

## கட்டுத்துவக்கு வைத்திருந்த கச்சாய்வாசிக்கு பிணை

தென்மராட்சி, ஜுலை 21

கட்டுத்துவக்கு வைத்திருந்த கச்சாய் வாசியை ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்றால் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த நபருக்கு ஏற்கனவே இவ்வாறான வழக்கு நீதிமன்றில் உள்ளதால் அதற்கு தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 ஆள்பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

கச்சாயைச் சேர்ந்த நபர் கட்டுத்துவக்கு வைத்திருந்தத்தாக கடந்த வருடம் கொடிகாமம் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அதேநபர் இந்த வருடமும் கட்டுத்துவக்கு வைத்திருந்ததாக கடந்த ஏப்ரல் மாதம் கொடிகாமம் பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

இந்த வழக்குகள் வெள்ளிக்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ஒரு வழக்கில் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையிலும் மற்றைய வழக்கில் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இருஆள்பிணையிலும் செல்ல நீதிமன்றில் அனுமதிவழங்கப்பட்டது. (வ-9)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



18.07.2014 வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தின் (UWU) 4 ஆவது பட்டமளிப்பு விழாவில்"Bachelor of Science in Computer Science and Technology" (B.Sc Spl. in Computer Science and Technology) பட்டம் பெற்ற எமது செல்வப் புதல்வன்

**புண்ணியராஜா வசிகரன்**

Best Wishes

அவர்களை அகமகிழ்ந்து ஆசீர்வதித்து வாழ்த்துவதுடன், மேன்மேலும் பல பட்டங்களைப் பெற்று சாதனை படைக்க இறையருளை வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா,
தங்கை, தம்பிமார்.

இல.207,
சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

(50168)(4.6)


## அதிபர் கூட்டம்

தென்மராட்சி, ஜுலை 21

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-9)

## கொலைச் சம்பவம் தொடர்பில் மேலும் இளைஞர் ஒருவர் கைது

தென்மராட்சி, ஜுலை 21

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வளாகத்தில் இடம் பெற்ற படுகொலை தொடர்பாக மேலும் ஓர் இளைஞரைப் பொலிஸார் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

இந்த இளைஞரை நாளை வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இந்தப் படுகொலை தொடர்பாக ஏற்கனவே ஐந்து பேர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை இரவு மருத்துவமனை வளாகத்தில் வைத்து உதயகுமார் அன்பழகன் என்னும் இளைஞர் கூரான ஆயுதத்தால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தப் படுகொலை தொடர்பாகக் கொலையாளிகளைக் கைதுசெய்யக் கோரி இறந்தவரின் பெற்றோர், உறவினர்களால் ஆர்ப்பாட்டம் நடத்தி இரு தினங்களில் கொலையுடன் தொடர்புடைய 2 பேரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-9)


## கேள்வி அறிவித்தல்

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை(PSDG)

மாந்தைகிழக்கு, பிரதேசசபை பாண்டியன்குளம் நட்டாங்கண்டல், வட மாகாணம்.

பூவரசங்குளம் குடியிருப்பு வீதி ஒப்பந்த இல: NP/MU/MEPS/PSDG/W/01/2014

01. வடமாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின்கீழ் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட திட்டத்திற்குமான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, மாந்தை கிழக்கு, பிரதேசசபை. தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வீதிபுனரமைப்பு வேலைக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டட அமைப்பு மற்றும் வீதிக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர் மாந்தைகிழக்குபிரதேசசபை, பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் (தொலைபேசி: 024 324 3663 e.mail – manthaieastps@yahoo.com ) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப. 2.00 மணிவரை 12.08.2014 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர் மாந்தைகிழக்குபிரதேசசபை, பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் எனும் இடத்திலிருந்து 21.07.2014ஆம் திகதியிலிருந்து 12.08.2014 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 1500/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர் மாந்தைகிழக்குபிரதேசசபை, பாண்டியன்குளம் நட்டாங்கண்டல் எனும் முகவரிக்கு 12.08.2014 ஆம் திகதி பி.ப. 02.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்
09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு – **28.10.2014**) நாள்கள் வரை செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை (மில்.ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/MU/MEPS/PSDG/W/01/2014 | பூவரசங்குளம் குடியிருப்பு வீதி அமைத்தல் | 8.37 | 3 மாதங்கள் | C 7 அல்லது அதற்குமேல் | 84000.00 | 25.11.2014 |

11) கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் தவிசாளர் மாந்தைகிழக்கு பிரதேசசபை, பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் அலுவலக கட்டடத்தில் **04.08.2014** அன்று பி.ப. 02.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தச்செலவில் கலந்து கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**மாந்தைகிழக்கு பிரதேசசபை.**
**பாண்டியன்குளம்,**
**நட்டாங்கண்டல்.**
**21.07.2014**

(ச.15450) (45.6.3)

**துயர் பகிர்கின்றோம்**

எமது கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும் செ.பிரகாஷ் அவர்களின் அன்புத்தந்தை

**மாணிக்கம் செல்வராசா**

18.07.2014 அன்று காலமானதையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

(50169)(7.6.3)

**காணி விற்பனைக்கு**

காரைநகர் கொட்டடியில் உள்ள நெற்பரப்பு நான்கு (நெற். பர. 4) விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் கொடுக்கலாம். (50072)(4.6.3)

தொடர்பு: 077 341 0826

**காணி விற்பனைக்கு**

நெல்லியடியில், கொடிகாம வீதி கரவெட்டி வடக்கில், நெல்லியடி தேசிய சேமிப்பு வங்கியில் இருந்து 200 யார் தூரத்தில் கரவெட்டி வடக்கு, பிரதேச சபை முன் பள்ளிக்கு அருகில் உள்ள ஒழுங்கையில் பிரதான வீதியில் இருந்து 150 அடி தூரத்தில் நான்கு பக்கமும் புதிதாக கட்டப்பட்ட சுற்று மதிலுடன் 58 அடி அகலம் கொண்டதுமான 1¾ பரப்புக் காணி வரை படத்துடன் விற்பனைக்கு உண்டு. (சி/15480)(7.6.3)

விலை பரப்பு 15 இலட்சம்

தொடர்பு : 077 026 7711

**J.C.B (பைக்கோ) வாடகைக்கு**



குறிப்பு :
போக்குவரத்துக் கூலி அறவிடப்பட மாட்டாது.

தொடர்பு: 021 224 1466 (யாழ்ப்பாணம்)
077 771 2482 (சுன்னாகம்)
077 984 7285 (பருத்தித்துறை)

**புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்**
(50093)(4.6.3) 207, K.K.S.வீதி, சுன்னாகம்.

# தொழில் முயற்சியாளருக்கு வடக்கில் முதன்முறையாக சர்வதேச தர விருது

யாழ்ப்பாணம், ஜூலை 21
வட மாகாணத்தில் முதல் தடவையாக தொழில் முயற்சியாளர்களுக்கான சர்வதேசதரத்திலான விருதை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வழங்குவதற்கு வர்த்தக தொழில்துறை மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.
இதற்கான விண்ணப்பிக்கும் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக வர்த்தகத் தொழில்துறை மன்றம் அறிவித்துள்ளது.
சிறந்த தொழில் முயற்சியாளர்களுக்கான அங்கீகாரமும், கௌரவித்தலும், தொழில் முயற்சியாளரை மேலும் ஊக்குவித்தலும் வடமாகாண மொத்த உற்பத்தி அதிகரிப்பில் உந்துசக்தி வழங்குதல், தொழில் முயற்சியாளர்களை அவர்களது துறைகளில் உயர் நிலை அடைவதற்கு ஊக்கப்படுத்தல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் இந்த விருது வழங்கப்படவுள்ளது.
வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய 5 மாவட்டங்களையும் உள்ளடக்கிச் சிறந்த தொழில் முயற்சியாளர்களுக்கு 19 இற்கும் மேற்பட்ட விருதுகள் வழங்கப்படவுள்ளன.
கைத்தொழில் உற்பத்தி, பொறியியல் சேவை, சுற்றுலாத் துறை, கல்வி, தகவல் தொழில்நுட்பம், அச்சுப்பதிப் புத்துறை, விவசாயம் மற்றும் சேவை துறை போன்றவற்றை உள்ளடக்கியதாக இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.
5மில்லியனுக்குக் குறைவான முதலீடுகளைப் பயன்படுத்தி 5 இற்கு உட்பட்ட தொழிலாளர்களுடன் இயங்கும் நிறுவனங்களுக்கு நுண்ணியது எனும் அடிப்படையிலும், 5மில் லியன் தொடக்கம் 10 மில்லியன் வரையான முதலீடுகளைப் பயன் படுத்தி 5 தொடக்கம் 20 வரையான தொழிலாளர்களைக் கொண்டு இயங்கும் நிறுவனங்களுக்கு சிறியது எனும் அடிப்படையிலும், 10மில்லியன் தொடக்கம்; 50 மில்லியன் வரையான முத லீடுகளைப் பயன்படுத்தி 20 தொடக்கம் 50 வரையான தொழிலாளர்களைக் கொண்டு இயங்கும் நிறுவனங்களுக்கு நடுத்தரம் எனும் அடிப்படையிலும், 500 மில்லியனுக்கும் அதிகமான முதலீடு களைப் பயன்படுத்தி 50 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு இயங்கும் நிறுவனங்களுக்கு பெரியது எனும் அடிப்படையிலும் விருதுகள் வழங்கப்படவுள்ளன.
வட மாகாண ரீதியாக அதி சிறந்த தொழில்முயற்சியாளர் விருது ஒன்று எனும் அடிப்படையிலும், சிறந்த தொழில் முயற்சியாளருக்கான 12 விருதுகளும் வழங்கப்படவுள்ளன.
இதனைவிட விசேட விருதுகளாக சுற்றுச்சூழலை மாசுபடுத்தாமல் இயங்கும் தொழில் நிலையங்கள், சக்தியை சிக்கனமாகப் பாவிக்கும் நிறுவனங்கள், பெறுமதி மிக்க உற்பத்திகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள், புதிய நவீனத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் உட்பட்ட தெரிவுகளின் அடிப்படையில் இந்த விருதுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
வட மாகாணத்தைச் சேர்ந்த பதிவுசெய்யப்பட்ட தனியார் துறைதொழில் நிறுவனங்கள், பிரதேச செயலகம் அல்லது கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் சட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்டிருத்தல் அவசியம். இத்தகைய நிறுவனங்கள் இந்த விருதுக்கு தகுதியுடையன. வட மாகாணத்தில் கிளைகளைக் கொண்டுள்ள தேசிய நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுத்துறை நிறுவனங்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது.
யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறைமன்றம், கிளிநொச்சி மாவட்ட வணிக, கைத்தொழில் வேளாண் ஒன்றியம், வவுனியா மாவட்ட வர்த்தக, கைத்தொழில் விவசாய சம்மேளனம், முல்லைத் தீவு மாவட்ட வணிக,கைத்தொழில் வேளாண் ஒன்றியம், மன் னார் மாவட்ட வர்த்தககைத் தொழில் விவசாய சம்மேளனம் ஆகிய இடங்களில் விண் ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிக்கு முன் னர் அனுப்பி வைக்க வேண் டும்.
விருது வழங்கும் நிகழ்வுக்கு குறைந்தது ஒரு வாரத்துக்கு முன்னர் வெற்றியாளர்கள் அறிவிக்கப்படுவார்கள். விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாண வர்த்தக தொழில் துறைமன்றமும் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் தேசிய தொழில் முயற்சி அதிகார சபையும் இணைந்து இந்த விருதை வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. (வ-14)



சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. படைப்பிரிவில் இணைந்து கொண்ட மாணவிகளுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும் கல்லூரி மாணவியின் நிதி உதவியுடன் கொள்வனவு செய்யப்பட்ட சீருடைகள் கையளிப்பும் நிகழ்வில் இடம்பெற்றன. (வ-9)

## இன்று கொடியேற்றம்

நெல்லியடி, ஜூலை 21
கரணவாய் வடக்கு, நவிண்டில் சிவகாமி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று திங்கட் கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.
எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தேர்த்திருவிழாவும், மறு நாள் புதன்கிழமை தீர்த்தோற்சவமும் வியாழனன்று பூங்காவனமும் இடம்பெறும். (ஒ)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த வகை III பாடசாலையான எழுதுமட்டுவாழ் கரம்பகம் அ.த.க.பாடசாலை அதிபர் பதவிக்கு தகைமையுள்ளவர்களிடமிருந்து வலயக் கல்வி அலுவலகத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்கவிரும்புவோர்வலயக் கல்வி அலுவலக நிர்வாகப் பிரிவில் உரிய படிவத்தைப் பெற்று ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அலலது பதிவுத் தபால் மூலமாகவோ சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ஒ-9)

## ஈச்சங்குளம் விபத்தில் மூவர் படுகாயம்

வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 3 பேர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் வெள்ளிக் கிழமை நடைபெற்றுள்ளது.
ஈச்சங்குளத்திலிருந்து வவுனியாவுக்கு பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பாடசாலை சேவையில் ஈடுபடும் பஸ்ஸும் வவுனியாவிலிருந்து ஈச்சங்குளம் நோக்கிச் சென்ற பயணிகள் பஸ்ஸுமே மோதிக் கொண்டன.
இதில் நடராஜா தெய்வேந்திரன் (வயது-37), குகராஜா தர்மினி (வயது-27), சுந்தரலிங்கம் டனுசிகா (வயது-13) ஆகியோர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்கள் உடனடியாக வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். விபத்துக் குள்ளான இரு பஸ்களும் பலத்த சேதமடைந்தன. இந்த விபத்து தொடர்பான விசாரணை களை ஈச்சங்குளம் பொலிஸார் மேற் கொண்டனர். (ஒ-421)

## மோ.சைக்கிள் சாரதிகள் நால்வருக்கு அபராதம்

வடமராட்சி, ஜூலை 21
சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப்பத்திரம், ஹெல்மெட் இன்றி நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குள் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்திச் சென்ற நால்வருக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் 4ஆயி ரத்து 250 ரூபாவை அபராத மாக விதித்துள்ளது.
நெல்லியடி பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் வீதி ஒழுங்குமுறைகளைப் பல்வேறு இடங்களில் பரிசோதனைகளை மேற்கொண்ட போது போக்குவரத்து ஒழுங்குகளை மீறிய குறித்த நால்வரும் அகப்பட்டுக் கொண்டனர். குறித்த நால்வர் மீதும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் நெல்லியடிப் பொலிஸார் தனித்தனியாக வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தனர்.
பருத்தித்துறை மாவட்ட நீதிவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. விசாரணையின்போது மோட்டார் சைக்கிள் சாரதிகள் நால்வரும் தமது குற்றங்களைஒப்புக்கொண்டனர்.
இதன் அடிப்படையில் சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற ஒருவருக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும் மற்றையவருக்கு, ஆயிரம் ரூபாவும், காப்புறுப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிளை செலுத்திய மூன் றாவது நபருக்கு 500 ரூபாவும், ஹெல்மெட் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நான் காவது நபருக்கு 250 ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது. (வ-173)

## வில்லூன்றியில் ஆடி அமாவாசை

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆடி அமாவாசை நிகழ்வுகள் எதிர்வரும் சனிக்கிழமை வழமைபோல் நடைபெறவுள்ளது. வில்லூன்றி விநாயகராலயத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசைகளும் காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும். காலை 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்றபின் பொது மக்கள் அமா வாசை தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்மாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## அம்புலன்ஸ் இன்றி நோயாளர் சிரமம்

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்திய சாலையில் பாவனையிலிருந்து வந்த அம்புலன்ஸ் நயினாதீவு வைத்தியசாலைக்கு சென்று பல நாள்களாகியும் இதுவரையில் திருப்பிக் கொடுக்கப் படவில்லை.
இதனால் இந்த வைத்தியசாலைக்கு வருகை வரும் அவசர கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். (ஒ-100)

GATEWAY CfiCT
VACANCIES
We are on the lookout for confident and committed individuals with the necessary qualifications for immediate recruitment

1. **English Lecturer (Full Time / Part Time)**
   *The ideal candidate should be competent graduate/trained teachers to teach the subject indicated. Experience in the field of studies at a reputed institution is considered essential. A Degree/Diploma in Education and/or Professional qualification/s will be an added advantage.*
2. **Computer Lecturers & Instructors (Full Time / Part Time)**
   *Ideal candidates should be confident and enthusiastic with an internationally recognized IT related Diploma. A Degree/Diploma in Education and/or Professional qualification/s and Previous teaching experience will be an added advantage*

Successful applicants could look forward to a rewarding career with excellent prospects including relevant training. Please send your complete CV to the following address indicating the position applied for, including names and contact details of two non - related referees.

Manager / HR
New Gateway Tech (pvt) Ltd.
337, Kasthuriyar Road, Jaffna
(சி.15476)(6)
E - Mail : gatewayjfn@sltnet.lk

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி கண்மணி கிறிஸ்தியன்
புதுக்குடியிருப்பு மத்தியஸ்த சபை உறுப்பினராகவும்,
மு/ உடையார்கட்டு மகா வித்தியாலய சிரேஷ்ட
ஆசிரியையாகவும் உள்ள திருமதி கண்மணி கிறிஸ்தியன்
அவர்கள் 26.06.2014 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட
நீதிவான் உயர்திரு மா.கணேசராசா அவர்கள் முன்னிலையில்
சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து
கொண்டமையை முன்னிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் நலன்புரிசங்கம்
மு/உடையார்கட்டு மகாவித்தியாலயம்.

இடமாற்றத்தை முன்னிட்டு.....
யாழ். நகரம் காணாத மிக மிக மலிவு விற்பனை!
இருப்பகற்றலை முன்னிட்டு சில தினங்கள் மட்டுமே



- பட்டு சாறிகள் - 2250/=
- சல்வார் - 800/=
- இந்தியன் ஸ்கேட் - 300/=
- இந்தியன் ரொப் - 750/=
- சேட் - 250/=
- ஜீன்ஸ் - 650/=

மேலும் அனைத்து ஆடைகள் மற்றும் பான்சி பொருள்கள், சிறுவர்களுக்கான விளையாட்டு பொருள்கள் அனைத்தும் குறித்த விலையிலிருந்து பாதி விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்
114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 221 9393

## லிபியாவிலிருந்த இலங்கையர்கள் நாடு திரும்பினர்



கோப்புப்படம்

கொழும்பு, ஜூலை 21
லிபியாவில் ஏற்பட்டுள்ள மோதல் நிலையைத் தொடர்ந்து பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த இலங்கை பிரஜைகள் 14 பேர் மீண்டும் தாய் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.
அவர்கள் நேற்று அதிகாலை அழைத்துவரப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக அதிகாரி மங்கல ரந்தெனிய தெரிவித்தார்.
லிபியாவில் ஏற்பட்டுள்ள மோதலைத் தொடர்ந்து அவர்கள் 14 பேரும் இலங்கை வரும்வரை பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். (வ)

# ஆப்கன் பிரஜைகளை நாடு கடத்தும் நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 21
ஆப்கானிஸ்தான் புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இலங்கையில் புகலிடம் கோரிய ஆப்கானிஸ்தான் பிரஜைகள் இவ்வாறு நாடு கடத்தப்படவுள்ளதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.
சுய விருப்பின் அடிப்படையில் ஐந்து ஆப்கானிஸ்தான் பிரஜைகள் நாட்டுக்கு அனுப்பி வைத்ததாகத் தெரிவித்துள்ளார்.
எதிர்வரும் வாரங்களில் அதிகளவான ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் பிரஜைகள் இலங்கையிலிருந்து நாடு கடத்தப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



சூலானந்த பெரேரா

பெரும் எண்ணிக்கையிலான புகலிடக் கோரிக்கையாளர்கள் பொருளாதார நலன்களை அடிப்படையாகக் கொண்டவர்கள் என குடிவரவு திணைக்களத்தின் மற்றுமொரு அதிகாரி தெரிவித்துள்ளார்.
புகலிடம் கோருவதற்காக விண்ணப்பித்துக் காத்திருப்பது பயனற்றது என்றும், பிள்ளைகளின் கல்வியை வீணடிப்பதாகவும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு தெளிவுபடுத்தியதனைத் தொடர்ந்து அவர்கள் நாட்டுக்குச் செல்ல விருப்பம் வெளியிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.
இதேவேளை, புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படுவது தொடர்பில் எவ்வித தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை என்று ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (வ)



குளவி கொட்டி தாக்கத்துக்குள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டோர்.

## குளவி கொட்டி 15 பேர் மருத்துவமனையில்

கொழும்பு, ஜூலை 21
பொகவந்தலாவை நகரத்தில் இருந்து அறநெறி வகுப்பு முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த சிறுவர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.
இந்த சம்பவம் நேற்று பிற்பகல் 1.45 மணி அளவில் இடம்பெற்றுள்ளது.
இதில் கிலானி மற்றும் தெரேசியா தோட்டத்தைச் சேர்ந்தவர்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.
பாதிக்கப்பட்டவர்களில் ஒன்பது சிறுவர்கள் ஒரு பெண், ஐந்து ஆண்கள் மொத்தம் 15 பேர் அடங்குவர்.
குளவி கொட்டுக்கு இலக்கானவர்கள் பொகவந்தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொக வந்தலாவ வைத்திய சாலைக்கு பொறுப்பானவைத்தியஅதிகாரிஎ.எஸ்.கே ஜயசூரிய தெரி வித்தார். (வ)

## அரச சேவையில் தற்போது 17 இலட்சம் பேர் பணியில்

### உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை.21
அரச சேவையில் தற்போது 17இலட்சம் பேர் உள்ளனர். புதிதாக 52,000 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது' என்று பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜே.செனவிரத்ன தெரிவித்தார்.
கண்டி, மஹய்யாவையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற கூட்டம் ஒன்றில், கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



செனவிரத்ன

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,
'இன்று நாட்டைப் பற்றியும் அரசைப் பற்றியும் எதிர்க்கட்சிகள் மிக மோசமாக விமர்சிக்கின்றன. தவறான பரப்புரை ஊடாக நாட்டு மக்களை பிழையாக வழி நடத்துகின் றனர். எனவே அரசு என்ற வகையில் மக்களுக்கு தெளிவு படுத்துவது எமது பொறுப்பாகும்.
ஒருகாலத்தில் இளைஞர்கள் தொழில் இன்றி அலைந்தனர். அரச ஊழியர்களின் எண்ணிக்கையை ஆறு இலட்சமாகக் குறைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்தது.
ஆனால் இன்று 17 இலட்சம் பேர் அரச ஊழியர்களாக உள்ளனர். தொழில் இல்லாப் பிரச்சினை ஐந்து சதவீதமாக குறைந்துள்ளது. 52,000 பட்டதாரிகளுக்கு இதுவரை எமது அரசு தொழில் வழங்கியுள்ளது.-என்றார். (வ)

## மண்சரிவை தடுப்பதற்கு விசேட வேலைத்திட்டம்

கொழும்பு, ஜூலை 21
நாட்டிலுள்ள அனைத்து பிரதான வீதிகளை அண் மித்த பகுதிகளில் ஏற்படும் மண் சரிவைச் தடுத்துக் கொள்வதற்கான வேலைத் திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்த தேசிய கட்டட ஆய்வுநிலையம் திட்டமிட்டுள்ளது.
உலக வங்கியின் நிதி உதவியுடன் ஜெய்க்கா நிறுவனத்துடன் இணைந்து இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிலையத்தின் பணிப்பாளர் ஆ.சிறி கருணாவர்தன தெரிவித்துள்ளார்.
நீர்த்தேக்கங்களின் அணைக்கட்டுகள் உடைகின்றமை மற்றும் மண்சரிவு எச்சரிக்கை நிலவுகின்ற வீதிகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
வேலைத்திட்டத்தினூடாக தொடர்ச்சியாக மண்சரிவு ஏற்படுகின்ற மஹியங்கனை 18 ஆம் வளைவு மற்றும் ஹக்கல ஆகிய பகுதிகள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் கூறி யுள்ளார். (வ)

## பெர்னாண்டோபுள்ளே கொலை வழக்கு: குற்றப் பத்திரிகை தாக்கல்

கொழும்பு, ஜூலை 21
முன்னாள் பெருந்தெருக்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே படுகொலை வழக்குடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
கம்பஹா உயர் நீதிமன்றில் சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி கம்பஹா வெலிவேரிய பிரதேசத்தில் நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியொன்றை ஆரம்பித்து வைக்கச் சென்றிருந்த போது அமைச்சர் மீது தற்கொலைக் குண்டுத் தாக்கல் நடத்தப்பட்டது.
இந்தத் தாக்குதலில் அமைச்சர் உள்ளிட்ட 16 பேர் கொல்லப்பட்டதுடன், 84 பேர் காயமடைந்திருந்தனர்.
சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட மா அதிபர் திணைக்களம் 31 குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளது.
கம்பஹா பிராந்தியத்துக்கு பொறுப்பாக செயற்பட்ட முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர் லக்ஸ்மன் குரே, செல்வராஜ் கிருபாகரன் மற்றும் தம்பையா பிரகாஸ் ஆகியோருக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
இந்த வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி மீளவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது. (ஒ)

இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



அன்னைமடியில்
09 ★ 10 ★ 1974
இறைவன் அடியில்
12 ★ 08 ★ 2012
திதி:ஆடிமாத அபர்பக்க தசமி (21.07.2014)
திருமதி வைதேகி சிவசெந்திநாதன்
(முகாமைத்துவ உதவியாளர், நிலஅளவைத் திணைக்களம், திருகோணமலை)
வளமான வாழ்வில் எம்முடன்
இதமாக வாழ்ந்து வான் சென்றாய்!
காலன் உனை அழைத்தான் உன்
காலம் முடிந்ததென்று
காலம் இரண்டாண்டுகள் கடந்தது வைதேகி
என்றென்றும் எம் வாழ்வில் உன் நினைவு அகலாது!
தெய்வத் திருவடியைச் சேர்ந்த உன் ஆத்மா
நிறைவான சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
கரம்பைக்குறிச்சி மேற்கு,
வரணி.
T.P:071 835 8139 (சி/15462)(4.6)
குடும்பத்தினர்.
உன் கணவர், பிள்ளைகள்,
தாய், தந்தை, சகோதரன்
மற்றும் உற்றார், உறவினர்கள்.

கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி பிரதேச சபையின்
பிரதம முகாமைத்துவ உதவியாளர்
திருமதி கு.யோகேஸ்வரி
அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி தங்கமுத்து (நாகம்மா) நாகநாதி
அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா
சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.
தலைவர், செயலாளர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
சாவகச்சேரி பிரதேசசபை, ஊழியர் நலன்புரிசங்கம்.

31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சிங்கராயர்
ஞானப்பிரகாசம்
(வாசையா)
மலர்வு
28.12.1931
உதிர்வு
21.06.2014
அன்பின் பண்பின் பாசத்தின் கருணையின் உறைவிடமே..
கோபம் என்பதை அறியாத ஆசையோடு இன்சொல்
பேசும் கொடை வள்ளலே...
எங்கள் வாழ்வை உயர்த்தி நிறைவான வாழ்வை தந்து
நீங்கள் நிரந்தரமாய் பிரிந்தது ஏன்
அப்பா! உங்கள் சிரித்த முகம் எங்கள் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை நிதமும் வேண்டுகின்றோம்.
இவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (21.07.2014) திங்கட்கிழமை
மு.ப.11.00 மணிக்கு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்
கொடுத்து தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வழிபாட்டிலும்
மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
1/2, புது வீதி, கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (50161)(4.6.3)
குடும்பத்தினர்.



இஸ்ரேல் எறிகணைத் தாக்குதலில் தனது குழந்தையை இழந்து கதறும் பலஸ்தீனத் தந்தை ஒருவர்.

# தரைவழித் தாக்குதலை ஆரம்பித்தது இஸ்ரேல்

## போர் நிறுத்தம் ஏற்படுத்த காஸா விரைகின்றார் ஐ.நா. பொதுச் செயலர் பான்-கீ மூன்

காஸா, ஜூலை 21

பலஸ்தீனத்தின் காஸா பிராந்தியத்தின் மீது தரை வழித் தாக்குதல்களையும் ஆரம்பித்துள்ளது இஸ்ரேல் இராணுவம். ஆயிரக்கணக்கான இஸ்ரேலிய இராணுவத்தினர் காஸாவுக்கு நுழைய ஆரம்பித்துள்ளனர். அவர்களுக்குத் துணையாக நவீன டாங்கிகளும், பீரங்கிகளும் தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளன.

இஸ்ரேலிய இராணுவம் தரைவழித் தாக்குதல்களை ஆரம்பித்த ஒரே நாளில் 24 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 337 ஆக அதிகரித்துள்ளது.

தரைவழித் தாக்குதல் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, "காஸா பிராந்தியத்தில் இருந்து இஸ்ரேலுக்கு வரும் சுரங்கப் பாதையைக் குறிவைத்தே இஸ்ரேலிய இராணுவம் தாக்குதலை நடத்துகின்றது"- என்று தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள ஹமாஸ் இயக்கம், இஸ்ரேல் இதற்காகப் பெரும் விலை கொடுக்க வேண்டும் என்று எச்சரித்துள்ளது.

அந்த நிலையில், இஸ்ரேலுக்கும் ஹமாஸ் இயக்கத்துக்கும் இடையே போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்காக ஐ.நா. பொதுச் செயலர் காஸா செல்லவுள்ளார்.

இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள ஐ.நா. அரசியல் விவகாரத் துறைத் தலைவர் ஜெஃப்ரி பெல்ட்மேன்,

"இஸ்ரேலியர்கள் மற்றும் பலஸ்தீனர்கள் இடையே போர் நிறுத்தம் கொண்டு வர உதவுவதற்காக பான் கீ மூன், விரைவில் அந்தப் பிராந்தியத்துக்குச் செல்லவுள்ளார். தனது பாதுகாப்புக்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இஸ்ரேலுக்கு உரிமை உள்ளது. காஸாவில் இருந்து தொடர்ந்து இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவது கடும் கண்டனத்துக்குரியது. இஸ்ரேலின் கடும் பதிலடியால் நாங்கள் கவலையடைந்துள்ளோம்" - என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, காஸா மீது இஸ்ரேல் நடத்தும் கண்மூடித்தனமான தாக்குதல்களால் இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 40 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இஸ்ரேலின் தாக்குதல்களால் ஆயிரக்கணக்கான வீடுகள் தரைமட்டமாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)



காஸாவுக்குள் நுழையும் இஸ்ரேலிய டாங்கிகள்

இஸ்ரேல் தரைவழித் தாக்குதலை ஆரம்பித்த ஒரே நாளில் பலஸ்தீனியர்கள் 24 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக் கணக்கான இஸ்ரேல் துருப்புகள் காஸாவுக்குள் நுழைந்துள்ளன. காஸாவை விட்டு இடம்பெயர்ந்துள்ள மக்களின் எண்ணிக்கை தற்போது 40 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

# விழுந்த விமானத்தின் தடயங்கள் மறைப்பு

## குற்றஞ்சாட்டுகின்றது உக்ரைன்

கீவ், ஜூலை 21

உக்ரைன் கிளர்ச்சியாளர்களால் சுட்டு வீழ்த்தப்பட்ட மலேசிய விமானம் விழுந்த இடத்தில் உள்ள தடயங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ளது உக்ரைன் அரசு.

நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாம் நகரில் இருந்து மலேசிய தலைநகர் கோலாலம்பூருக்கு கடந்த 17ஆம் திகதி பயணித்த மலேசிய பயணிகள் விமானமாக எம்.எச்-17 ரஷ்ய எல்லையில் ஏவுகணையால் சுட்டு வீழ்த்தப்பட்டது. அதில் பயணித்த 298 பேரும் உயிரிழந்தனர். விமானம் விழுந்த இடத்திலிருந்து சுமார் 200 கி.மீ. சுற்றளவில் பயணிகளின் உடல்கள், விமானத்தின் பாகங்கள் சிதறி உள்ளன. குறித்த பகுதி உக்ரைன் அரசுக்கு எதிராக போரில் ஈடுபட்டு வரும் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது.

அந்த இடத்தை உக்ரைன் அரசைச் சேர்ந்தவர்கள் பார்வையிட்ட பின்னர், அரசு விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்குறித்தவாறு கூறப்பட்டுள்ளது.

"தற்போது நடத்திருப்பது சர்வதேச குற்றமாகும். அதனால் ரஷ்ய அரசு உதவியுடன் கிளர்ச்சியாளர்கள் விமானம் விழுந்து கிடக்கும் பகுதியில் தடயங்களை அழித்து வருகின்றனர். இதுவரை 38 உடல்களை அவர்கள் அப்புறப்படுத்தி உள்ளனர்.

அவற்றை, கிளர்ச்சியாளர்கள் பிடியில் உள்ள டோனெட்ஸ்க் நகருக்கு கொண்டு சென்று தீவைத்து எரித்துள்ளனர். விமான சிதறல்களையும் அவர்கள் அப்புறப்படுத்தி வருகின்றனர்"- என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆயினும் இதுகுறித்து ரஷ்யாவோ அல்லது உக்ரைன் கிளர்ச்சியாளர்களோ எதுவித கருத்துக்களும் தெரிவிக்கவில்லை. (ற)



வீதியோரத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் உயிரிழந்தவர்களின் உடல்கள்

# ஷகிராவின் சாதனை



நியூயோர்க், ஜூலை 21

கொலம்பியாவின் பிரபல பொப் பாடகியான ஷகிரா சத்தமில்லாது சாதனை படைத்துள்ளார். அதற்காக அவர் பாடல் பாடி சாதனை படைத்துவிட்டார் என்று எண்ணி விடாதீர்கள். ஷகிரா பதிவிட்டுள்ள பேஸ்புக் பதிவு ஒன்றுக்கு 100 மில்லியன் விருப்பங்கள் பெற்றுச் சாதனை படைத்துள்ளார் அவர். இது பேஸ்புக் வரலாற்றில் ஒரு சாதனையாகும்.

சர்வதேச அளவில் ஒருவரின் பதிவுக்கு, இவ்வளவு விருப்பங்கள் கிடைக்கப் பெற்றிருப்பது இதுவே முதல் முறை என்று பீபிள்ஸ் சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த சாதனை தொடர்பில் ஷகிரா கருத்து வெளியிடுகையில்,

"இதனை தான் எதிர்பார்க்கவில்லை என்றும் இதனால் மகிழ்ச்சியாக உள்ளது. இந்த சாதனை பிறரால் முறியடிப்பதற்கு கடினமான சாதனை. நிகழ்ச்சி மேடைக்கும், பார்வையாளர்களுக்கும் இடையே இணைப்புப் பாலமாக பேஸ்புக் விளங்குகின்றது"- என்று தெரிவித்துள்ளார்.

ஷகிராவின் புதிய சாதனைக்காக, பேஸ்புக் நிறுவனர் மார்க் ஜூக்கர்பெர்க் வாழ்த்து தெரிவித்துள்ளார். (ற)

# பாக்தாத்தில் குண்டுவெடிப்பு

## 27 பேர் உயிரிழப்பு

பாக்தாத், ஜூலை 21

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நேற்றுமுன்தினம் நடந்த தொடர் குண்டு வெடிப்பில் 27 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஷியா பிரிவினர் வசிக்கும் அபு தாஷிர் பகுதியில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடி மீது நடந்த தற்கொலைப் படைத் தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர். 19 பேர் காயமடைந்தனர். அதன்பின்னர் பத்து நிமிடங்கள் கழித்து நகரின் பய்யா, ஜிஹாத், காஸிமியா ஆகிய பகுதிகளில் நிகழ்ந்த மூன்று குண்டுவெடிப்புகளில் 15 பேர் உயிரிழந்தனர். 42 பேர் காயமடைந்தனர். அதேவேளை காஸிமியா பகுதியில் பஸ் நிறுத்தம் அருகே காரில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் மூவர் கொல்லப்பட்டனர். ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மொசூலை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர். இந்நிலையிலேயே பாக்தாத்தில் தொடர் குண்டு வெடிப்பு நடந்துள்ளது. (ற)

# மண்டேலா என் நாயகன்

## பராக் ஒபாமா கூறுகின்றார்


நியூயோர்க், ஜூலை 21

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தனிப்பட்ட முறையில் தனது நாயகன் என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.

நெல்சன் மண்டேலாவின் 96ஆவது பிறந்த நாள் விழா அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. அதில் கலந்துகொண்ட போதே ஒபாமா இவ்வாறு கூறியுள்ளார்.

"நெல்சன் மண்டேலா, தனிப்பட்ட முறையில் எனது நாயகன். இந்த உலகில் செல்வாக்கு மிகுந்த, தைரியமான மற்றும் கௌரவமான மனிதர்களில் மண்டேலாவும் ஒருவர்."- என்று அவர் தெரிவித்துள்ளார்.

1918ஆம் ஆண்டு பிறந்த நெல்சன் மண்டேலா நுரையீரல் புற்றுநோய் காரணமாக கடந்த ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் திகதி உயிரிழந்தார். (ற)



இந்தியாவின் பெங்களூரில் பாடசாலைச் சிறுமி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. கடந்த சனிக்கிழமை திரண்ட பெருந்திரளான மக்கள், குற்றவாளிகளைக் கைது செய்யுமாறு கோரிப் பெரும் போராட்டம் நடத்தினர். அதனால் பெங்களூர் நகரம் ஸ்தம்பித்தது. அங்குள்ள பிரபல தனியார் பாடசாலையில் கல்வி கற்றுவரும் குறித்த சிறுமி, வகுப்பறையில் ஒழுங்கீனமாக இருந்ததால், பாடசாலை உடற்பயிற்சி அறையில் சென்று இருக்குமாறு தண்டனை வழங்கியுள்ளார். மாணவர்களுக்கு உடற்பயிற்சி வழங்கும் இருவர் அங்கு சிறுமியை வன்கொடுமைக்கு உள்ளாக்கியுள்ளனர். (ற)

# ரூபா 21,000 கோடிக்கு இராணுவ தளபாடங்கள்

## இந்திய இராணுவ அமைச்சகம் வழங்கியது ஒப்புதல்

புதுடில்லி, ஜூலை 21

இந்திய இராணுவத்துக்கு 21 ஆயிரம் கோடி ரூபா (இந்திய நாணய) மதிப்பில் அதி நவீன இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு அந்த நாட்டுப் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் வழங்கியது.

அத்துடன் விமானப் படைக்குத் தேவையான பொருள்களை எடுத்துச் செல்வதற்குப் பயன்படுத்தப்படும் போக்குவரத்து விமானங்களை இந்தியாவைச் சேர்ந்த தனியார் நிறுவனங்கள் மூலம் தயாரிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சராக அருண் ஜெட்லி பொறுப்பேற்ற பின்னர், முதன்முறையாக அவரது தலைமையில் பாதுகாப்பு அமைச்சக ஆயுதக் கொள்முதல் சபை நேற்றுமுன்தினம் புதுடில்லியில் கூடியது.

அதன்போது முப்படைகளுக்கும் தேவையான இராணுவத் தளபாடங்கள் கொள்வனவு செய்வது தொடர்பில் பல்வேறு திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற் றில் சிலவற்றுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

அதன்படி ரூபா 21 ஆயிரம் கோடிக்கு, 'துருவ்' ஹெலிகொப்டர்கள், ரோந்துக் கப்பல்கள் எனப் பல்வேறு நவீன இராணுவத் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. (ற)

# இளமை இந்தியா

புதுடில்லி, ஜூலை 21

இந்தியா அதிகளவிலான இளைஞர்களைக் கொண்டிருக்கின்றது என்றும், அதனால் இந்தியா மிகவும் இளமையாகத் திகழ்கின்றது என்றும் ஐ.நா. ஆய்வொன்று கூறுகின்றது.

ஐ.நா. சபை அண்மையில் அனைத்து நாடுகளிலும் மேற்கொண்ட ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த ஆய்வின்படி, 18 மேற்காசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவில் இளைஞர்களின் எண்ணிக்கை சரிசமமாக உள்ளது. இந்தியாவில் மக்களில் மூவரில் ஒருவர் இளைஞராக இருக்கின்றனர்.

இவர்களில் 10 முதல் 19 வயதுடையவர்கள் 253 மில்லியனாகவும், 15 முதல் 24 வயதுடையோர் எண்ணிக்கை 231 மில்லியனாகவும் உள்ளனர்.

இளைஞர்கள் பெரும்பாலானோர் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர். கர்நாடகா, ஆந்திரா, ஒரிசா, மேற்கு வங்காளம் போன்ற மாநில இளைஞர்கள் 85-95 சதவீதம் வரையில் கல்வி அறிவு பெற்றுள்ளனர்.

தமிழகத்தை பொறுத்த வரையில் கடந்த 10 ஆண்டுகளாக இளைஞர்களின் எண்ணிக்கை அதிக சதவீத அளவை கொண்டுள்ளது. இளைஞர்கள் கிராமப்புறங்களில் 72 சதவீதத்தினரும், நகர்புறங்களில் 68 சதவீதத்தினரும் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# டில்லியில் ஆட்சி அமைக்க தயாராக இருக்கின்றோம்

## பா.ஜ.க. தெரிவிப்பு

புதுடில்லி, ஜூலை 21

புதுடில்லியில் ஆட்சி அமைப்பதற்குத் தயாராக இருக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார் அந்த மாநில பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் சதீஷ் உபாத்யாய்.



மத்திய உள்துறை அமைச்சர் ராஜ் நாத்சிங்கை சதீஷ் உபாத்யாய் தலைமை யிலான கட்சி நிர்வாகிகள் நேற்றுக் காலை சந்தித்து ஆலோசனை நடத்தினர். அதன்பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

புதுடில்லியில் ஆட்சியமைக்கும் விவகாரத்தில், கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை ராஜ்நாத் சிங்கிடம் விளக்கினேன்.

கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த சதீஷ் உபாத்யாய், புதுடில்லியில் ஆட்சியமைக்க பாரதிய ஜனதா கட்சி தயாராக இருக்கின்றது. ஆனால் ஆட்சியமைப்பதற்கான அழைப்பு எதுவும் துணை நிலை ஆளுநரிடமிருந்து வரவில்லை. அதேநேரத்தில், புதிதாக தேர்தலை சந்திக்கவும் நாம் தயாராக இருக்கின்றோம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# இஸ்ரேலை கண்டித்து காஷ்மீரில் போராட்டம்

## துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் சாவு

ஸ்ரீநகர், ஜூலை 21

பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதலைக் கண்டித்து காஷ்மீரில் நடத்தப்பட்ட போராட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். காஸா மீது இஸ்ரேல் கண்மூடித் தனமான தாக்குதலை நடத்தி வருகிறது.

விமா னங்கள் மூலம் குண்டுகளை வீசி வந்த இஸ்ரேல் இராணுவம், தற்போது தரை வழி தாக்குதலிலும் ஈடுபட்டுள்ளது. இதுவரை காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 3,337 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில், இஸ்ரேலின் தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து காஷ்மீரின் குல்காம் மாவட்டம், குவாய்மோ நகரில் ஒரு குழுவினர் திடீர் ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர். அவர்களை மத்திய ரிசர்வ் படை பொலி ஸார் தடியடி நடத்தி விரட்டியடித்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸார் மீது கற்களை வீசினர். இதைத் தொடர்ந்து ரிசர்வ் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர் என்று கூறப்படுகிறது.

இந்த சம்பவத்தில் மிஷ்ரி போராவைச் சேர்ந்த சுகைல்



போராட்டத்தின் போது ஏற்பட்ட வன்முறை

அகமது என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். ஒருவர் காயமடைந்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த சம்பவத்தால் அங்கு பதற்றம் நிலவி வருகிறது. (ற)

# 'காதல்'. தண்டபாணி மாரடைப்பால் சாவு

சென்னை, ஜூலை 21

'காதல்' படத்தில் வில்லனாக நடித்து பிரபலமான தண்டபாணி சென்னையில் நேற்று திடீரென மாரடைப்பால் உயிழுந்துள்ளார்.

பாலாஜி சக்திவேல் இயக்கத்தில் உருவான 'காதல்' படத்தில் வில்லன் வேடத்தில் நடித்தவர் தண்டபாணி (வயது -61). அந்தப் படத்தின் மூலம் பிரபலமான அவர், 'காதல்' தண்டபாணி என்று அழைக்கப்பட்டார்.

உனக்கும் எனக்கும், இங்கிலீஷ்காரன், சித்திரம் பேசுதடி, வட்டாரம், முனி, மலைக் கோட்டை, வேலாயுதம், மருதமலை உள்ளிட்ட பல படங்களில் நடித்திருக்கிறார். கடைசியாக 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்' படத்தில் சத்யராஜிற்கு நண்பராக நடித்திருந்தார்



தண்டபாணி.

இந்த நிலையில், காதல் தண்டபாணிக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. உடனடியாக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்றுக் காலை உயிரிழந்தார். அவருடைய மறைவுக்கு திரையுலக பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். (ற)

# தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்

## அமைச்சர் வீரவன்ஸவும் கூறுகிறார்

கொழும்பு.ஜூன் 21
தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நிர்மாணப் பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.




உதயனின் சகோதர பத்திரிகையான 'சுடர்ஒளி'க்கு வழங்கிய விசேட செவ்வியின்போதே அவர் மேற்கண்ட வாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டுக்குள் ஒற்றுமையொன்று ஏற்பட வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சி னைக்கு தீர்வு காணப்பட வேண்டும்.
இதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப் போடு அல்ல பிரபாகரன் போன்றோருடன் கூட பேச்சு நடத்தத் தயாராகவே நாம் இருக்கிறோம்.
ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்னமும் தமிழர் மனங்களில் சிங்கள துவேசத்தையே வளர்த்துக் கொண்டு வருகின்றனர்.
இதுபோன்ற இனவாதத்தை வளர்த்தால் மாத்திரமே அவர்களுக்கு கொழும்பு, இந்தியாவில் இருந்து கொண்டும் அரசியல் நடத்த முடியும். இதற்குத் தூதரகங்களும் ஒத்துழைக்கின்றன.
ஆனால், எமது நிலைப்பாடு அதுவல்ல. எமக்கு மீண்டும் தமிழ் - சிங்கள - முஸ்லிம்கள் ஒன்றாக வாழ்ந்த, 1983 கறுப்பு ஜூலைக்கு முந்தைய அந்தப் பழைய யுகம் மலரவேண்டும். இதுபோன்ற நாட்டுக்கு நல்லது ஒன்று ஏற்படவேண்டுமெனில் எத்தரப்பினருடனும் பேச்சு நடத்த நாம் தயார் - என்றார். (ஒ)

# சொத்தை பறிகொடுத்தோருக்கு காலவிதிப்பு திருத்தப் பிரேரணை

## நாடாளுமன்றில் வியாழனன்று விவாதம்

கொழும்பு.ஜூன் 21
காலவிதிப்பு திருத்தப் பிரேரணை ஒன்று எதிர்வரும் 24 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.
இந்த திருத்தம், கடந்த 30 வருட காலத்தில் போரின் போது இடம்பெயர்ந்தவர்களின் காணிகள் உட்பட்ட சொத்துக்கள் பலாத்காரமாக கைவிடப்படும் போது அவற்றை மீள் கோருவதைநோக்காககொண்டு முன்வைக்கப்பட வுள்ளது.
இடம்பெயர்ந்த போது கைவிடப்பட்ட சொத்துக்களை மீள் கோர முடியாதவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் இந்த திருத்தம் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இதன்படி சுமார் 10 வருடங்கள் வரையில் எந்த வித கோரிக்கைகளும் இன்றி தமது சொத்துக்களை பறி கொடுத்தவர்கள் சொத்துக்களுக்கான உரிமைகளை பெற்றுக் கொள்ள வழிவகுக்கும்.
எனினும் இந்த திருத்தம் 1983 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி முதல் 2012 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கே செல்லுப்படியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# ஜனாதிபதி பறக்க விடுகிறார் பட்டம்



சமூக ஒருமைப்பாட்டு வாரத்தை முன்னிட்டு தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் கொழும்பு காலி முகத்திடலில் ஏற்பாடு செய்யப்பட்ட பட்டம் விடும் விழா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை நடைபெற்றது.
இந்த நிகழ்வில் மஹிந்த ராஜபக்ஷ விடுகிறார் பட்டம். அருகில் தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாடு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும் காணப்படுகிறார். (ஒ)

# வரையறுக்கப்பட்ட கருக்கலைப்பை சட்டரீதியாக்க அரசு தீர்மானம்

பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வந்த விவாதங்க ளின் பின்னர் வரையறுக்கப் பட்ட கருக்கலைப்பை சட்டரீதி யாக்குவது என்று இலங்கை அரசு தீர்மானித்துள் ளது.
சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சின் தரப்புகளை கோடிட்டு கொழும்பின் ஊடகம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட் டுள்ளது.
இந்தநிலையில் வரையறுக்கப்பட்ட கருக்கலைப்பை சட்டரீதியாக்குவது தொடர்பான பொறிமுறையை உருவாக்குவது தொடர்பில் கலந்தாய்வுக்குழு தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சு தரப்புக்கள் தெரிவித்துள்ளன.
பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட மற்றும் அதற்கு ஒப்பான செயல்களால் கரு உண்டாகும் போது அதனை கலைப்பதற்கான பரிந்துரையை கலந்தாய்வுக்குழு முன்கொணர்ந்துள்ளது.
இலங்கையை பொறுத்த வரை கருக்கலைப்பு சட்ட ரீதியற்ற செயலாகும். எனினும் பல நிலையங்கள் கருக்கலைப்புக்களை உரிய நியமங்கள் இன்றி மேற்கொள்கின்றன.
ஐக்கிய நாடுகளின் பிரசுரங்களின்படி கருக்கலைப்பானது, 97 வீத நாடுகளில் பெண்களின் உயிர்களை காப்பாற்றும் நோக்கத்திலேயே செய்யப்படுகின்றன.
இந்தநிலையில், கருக்கலைப்பானது 49 வீத நாடுகளில் பொருளாதார மற்றும் சமூக காரணங்களுக்காக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
34 வீதம் மாத்திரமே பெண்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# இலங்கை ஐஸ்கிறீமிலும் டிசிடி கண்டுபிடிப்பு

கொழும்பு.ஜூலை 21
டிசிடி அல்லது டைசைனைட்யேமைட் பதார்த்தம் அடங்கிய ஐஸ்கிறீம் இலங்கையின் சந்தையில் விற்பனை செய்யப்படுவதாக தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அமைச்சர், கொழும்பில் கடந்த பொசன் போயா தினத்தன்று விநியோகிக்கப்பட்ட ஐஸ்கிறீமில் டிசிடி இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.
ஐடிஐ நிறுவகத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது ஐஸ்கிறீமில் பயன்படுத்தப்படும் பாலில் இந்த டிசிடி பதார்த்தம் கலந்துள்ளமை தெரியவந்துள்ளது என்று அமைச்சர் கூறினார்.
டிசிடி இலங்கையில் இல்லை என்று அரசு அறிவித்துள்ள நிலையிலேயே இந்தத் தகவலை அமைச்சர் வெளியிட்டுள்ளார். (ஒ)

# வெலிஓயாவில் சிவில் பாதுகாப்பு படையணி மத்திய நிலையம்

## திறந்து வைத்தார் கோத்தா

கொழும்பு.ஜூன் 21
வெலிஓயா (மணலாறு) பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிவில் பாதுகாப்பு படையணியின் மத்திய நிலையத்தை பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைத்தார்.
போர்க்காலத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட வெலிஓயா பிரதேச மீனவர் நலன்புரி நிலையம் புனரமைக்கப்பட்டு இந்த மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.
கட்டளை அதிகாரிக்கான உத்தியோகபூர்வ இல்லம், பொது நல வர்த்தக நிலையம், மகளிருக்கான இல்லங்கள், கேட்போர் கூடங்கள் மற்றும் பௌத்த வணக்கஸ்தலங்கள் என்பனவற்றை உள்ளடக்கி இந்த மத்திய நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.



நினைவுப் படிகத்தைத் திறந்து வைக்கிறார் கோத்தபாய

இந்த வைபவத்துக்கு சிவில் பாதுகாப்பு படையணியின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட் மிரல் ஆனந்த பீரிஸ் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். (ஒ)

# தேரர்களையும் அவதானிக்கிறது சர்வதேசம்

கொழும்பு.ஜூன் 21
இந்த நாட்டு தேரர்களின் செயற்பாடுகள் தொடர்பில் சர்வதேசம் தற்போது உன்னிப்பாக அவதானித்து வருவதாக பேராசிரியர் சரத் அமுனுகம தெரிவித்தார்.
ஆர்ப்பாட்டம், எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாது, தேரர்களில் கடமை பௌத்த தர்மத்தை பாதுகாப்பதே என அவர் குறிப்பிட்டார்.
கண்டி கலகெதற பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு பேசும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இந்நாட்டு விகாரை களில் வசிக்கும் தேரர்கள் பௌத்த தர்மத்தை பாதுகாப்பதற்காக மிகவும் அவதானமாகவுள்ளதாக சரத் அமுனுகம கூறினார்.
மாலைதீவு, மலேசியா மற்றும் இந்தோனேஷியா நாடுகள் முன்னர் பௌத்த நாடாகவே காணப்பட்டன. எனினும் தற்கால தேரர்களின் நடவடிக்கை காரணமாக அந்நாடுகளில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஒ)


# தபால் க்கட்டணம் உயர்வு

கொழும்பு.ஜூன் 21
இலங்கையில் தபால் கட்டணங்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியில் அதிகரிக்கப்படவுள்ளன. இதன்படி சாதாரண தபால்களுக்கான முத்திரை கட்டணம் 5 ரூபாவில் இருந்து 10 ரூபாவாக அதிகரிக்கவுள்ளது.
வியாபார கடிதங்களுக்கான கட்டணம் 5 ரூபாவில் இருந்து 15 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது என்று தபால் மா அதிபர் ரோஹன அபேசிங்க தெரிவித்துள்ளார்.
கடந்த 6 வருடங்களாக தபால் கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை. எனவே தற்போது இந்த அதிகரிப்பை மேற்கொள்ள தீர்மானித்ததாக அபேசிங்க குறிப்பிட்டுள்ளார்.
இதன்படி பொதிகளுக்கான தபால் கட்டணங்கள்( 500 கிராம்) 90 ரூபாவாக இருக்கும். தபால் பைகளுக்கான கட்டணங்கள் 5,000 ரூபாவில் இருந்து 7,500 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளன. (ஒ)

# பதவி விலகுகிறார் ஹரின் பெர்னாண்டோ



கொழும்பு.ஜூன் 21
ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து ஓகஸ்ட் 5ஆம் திகதி விலகவுள்ளதாக அறிவித்துள்ளார். ஊவா மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் நோக்கில் அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.
ஹரின் பெர்னாண்டோ ஐ.தே.கவின் ஊவா மாகாணசபை முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுகிறார். (ஒ)




## புதிய ரோபோவை அறிமுகம் செய்யும் ஹொண்டா

இயந்திரவியல் சாதன உற்பத்தியில் முன்னணியில் திகழும் ஜப்பான் நிறுவனமான ஹொண்டா Asimo ரோபோவை அறிமுகம் செய்ய வுள்ளது. இந்த வகை ரோபோவை ஹொண்டா நிறுவனம் முதன் முதலில் 2000 ஆண்டின் பிற்பகுதியில் அறிமுகம் செய்திருந்தது.

அதன்பின்னர் 2003 ஆம் ஆண்டில் ஐரோப்பிய நாடுகளில் அறிமுகம் செய்திருந்தது.

தற்போது புதிய வசதிகளை உள்ளடக்கியதாக உருவாக் கப்பட்டுள்ள இந்த ரோபோவை மீண்டும் ஐரோப்பிய நாடுகளிலேயே அறிமுகம் செய்ய வுள்ளது. இதுவரை உருவாக்கப்பட்ட புவிஷ்துலி வகை ரோபோக்களில் இதுவே அதிகமான மதிநுட்டம் கொண்டதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## அழிந்து வரும் அரக்குப் பூச்சி சேலத்தில் கண்டுபிடிப்பு

அழிந்து வரும் அரியவகை அரக்குப் பூச்சிகள், சேலத்தில் இருப்பதை விஞ்ஞானி கள் கண்டுபிடித்துள்ளனர். ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் மத்திய அரசின் இயற்கை பிசின் மற்றும் கோந்து ஆராய்ச்சி நிலையம் உள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றி வரும் விஞ்ஞானிகள் மோகன சுந்தரம், வைபவ்டி.லோகட் ஆகியோர் அழிந்து வரும் அரிய உயிரினமான அரக்கு பூச்சி குறித்து ஆய்வு செய்து வருகின்றனர்.

அவர்களது ஆய்வில் தமிழகத்தில் இந்த வகை பூச்சிகள் இருப்பது தெரியவந்துள்ளது. ஆதையடுத்து தமிழகம் வந்த இருவரும் கோவை, மேட்டுபாளையம், ஈரோடு, சத்தியமங்கலம், சேலம், ஏற்காடு உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான மரங்களை ஆய்வு செய்தனர். இதன் தொடர்ச்சியாக சேலம் புதிய பஸ் நிலையம் அங்கம்மாள் பகுதியில் உள்ள சில மரங்களிலும் ஆய்வு நடத்தினர். அப்போது அந்த மரங்களில் அரக்குப்பூச்சி இருப்பது தெரியவந்தது.


இதுகுறித்து விஞ்ஞானிகள் மோகனசுந்தரம், வைபவ்.டி.லோகட் ஆகியோர் கூறியதாவது:- தனது உடலில் சுரக்கும் திரவத்தை தனக்கே அரணாக்கி கொண்டு, அதற்குள் வாழ்வது தான் அரக்கு பூச்சியின் சிறப்பு. இந்த அரக்கு திரவம், உணவுப் பொருள்களை பதப்படுத்தி வைப்பதற்கும், மருந்து பொருளாகவும் பயன்படுகிறது. ஆபரணங்களின் பளபளப்பு மங்காமல் இருப்பதற்கும் பயன்படுகிறது. ஜார்கண்ட், சட்டீஸ்கர், ஒடிசா, மேற்கு வங்காளம் போன்ற இடங்களில் வசிக்கும் மக்கள், இதை ஒரு தொழிலாகவே செய்து வருகின்றனர். 1930ம் ஆண்டு வாக்கில் சேலம், ஓசூர் பகுதிகளிலும் இந்த தொழில் நடந்துள்ளது. தற்போது சேலத்தில் அரக்கு பூச்சிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால், மீண்டும் இந்த தொழிலுக்கு புத்துயிர் கிடைக்கும் என்று நம்புகிறோம். இவ்வாறு விஞ்ஞானிகள் கூறினர்.

## மனிதக் கை விரல்கள்

மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவன விஞ்ஞானிகள் ரோபோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சென்சரின் உதவியுடன் இயங்கும் மனிதக் கை விரல்களை உருவாக்கியுள்ளனர். இந்த விரல்களை எமது அன்றாட நடவடிக்கைகளின் போது பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மனிதனின் கையுடன் பொருத்தப்படும் இந்த செயற்கை கைவிரல்கள் சென்சாரின் உதவியுடன் ஏனைய விரல்களில் நிலையறிந்து கொள்ளக்கூடியனவாக இருக்கின்றன. இதன் மூலம் சகல விதமான பொருள்களையும் இலகுவாகக் கையாள்வதற்கு இந்த செயற்கை விரல்கள் உதவி புரியும்.

இந்த கைவிரல்களை இயற்கையான விரல்களை செயற்படுத்துவது போன்றே செயற்படுத்த முடியும் என்றும் இதற்காக கட்டளைகளை இடவேண்டிய தேவையோ இல்லை என்று விஞ்ஞானிகள் குழுவில் இடம்பெற்ற பேராசிரியர் ஒருவர் தெரிவித்தார்.




## உயிரியல் முறையில் தயாராகும் பேஸ்மேக்கர்

இதயத்தில் காணப்படும் பேஸ்மேக்கரில் ஏற்படும் பாதிப்புக்களால் வேகம் குறைவாக இதயம் துடித்தல், வழமைக்கு மாறாக செயற்படுதல் போன்ற பிரச்சினைகள் எழும்.

இந்தப் பிரச்சினைகளில் இருந்து விடுதலை பெறுவதற்கு இலத்திரனியல் முறையில் உருவாக்கப்பட்ட பேஸ்மேக்கர் சாதனம் பயன்படுத்தப்பட்டுவந்தது.

எனினும், தற்போது உயிரியல் முறையைப் பயன்படுத்தி பேஸ்மேக்கரை உருவாக்கவுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் பக்கவிளைவுகள் இல்லாதிருப்பதுடன் ஒரே நாளில் பேஸ்மேக்கரைத் தயாரித்து வழங்க முடியும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.



## மந்திரப் பொருளாக வழிபட்ட 9,000 வருடங்கள் பழைமையான விண்கல்

மந்திரப் பொருளாக மக்கள் வழிபட்டுவந்த 9,000 வருடங்கள் பழைமையான விண்கல் ஒன்று போலந்து தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் அண்மையில் மீட்கப்பட்டுள்ளது.


போலந்து மற்றும் ஜேர்மனியின் எல்லைப் பகுதியில் உள்ள வரலாற்று முக்கியதுவமிக்க போமெரனியா பிராந்தி யத்திலேயே இந்த விண்கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிராந்தியத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட கற்கால மனிதர்கள் வாழ்ந்த குகை ஒன்றை தோண்டும்போது அங்கிருந்த சிறிய கூடாரம் ஒன்றில் இந்தக்கல் கண்டெடுக் கப்பட்டுள்ளது.

மேற்கு போலந்திலுள்ள தொல்பொருள் மற்றும் மனிதவியல் நிறுவனத்தில் தொல்பொருள் ஆய்வாளர்களே இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளனர். இது வேறு ஒரு உலகத்தில் இருந்து வந்த கல் என அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அறிந்திருந்ததுடன் அதனை வழிபடவும் செய்துள்ளனர் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த விண்கல்லுடன் விண்கல்லால் உருவாக்கப்பட்ட தாயத்துகள் உள்ளிட்ட மேலும் பல பொருள்களும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பறக்கும் அரிய வகை டைனோசர் கண்டுபிடிப்பு

பல கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த டைனோசர் இனத்தில் பல வகைகள் உண்டு என்று தொல்லியல் மற்றும் உயிரியல் ஆய்வாளர்கள் நிரூபித்துள்ளனர்.

தற்போது, முன்னங்கால் மற்றும் பின்னங்கால்களில் சிறகுகள் முளைத்த பன்னிரண்டரை கோடி ஆண்டுகளுக்கு முற்பட்ட, பறக்கும் சக்தி படைத்திருந்த அரிய வகை டைனோசர் இனத்தின் படிமத்தை ஆய்வா ளர்கள் கண்டு பிடித்துள்ளனர். இதன் உடலில் அமைந்திருந்த வால் பகுதியைப் பார்த்து வியந்த அவர்கள், இந்த அரிய வகை டைனோசர் வேகமாக பறந்து வரும் வேளை யில் பத்திரமாக தரையிறங்குவதற்கு வசதியாக இந்த வால் 'பரசூட்' போல் பயன்பட்டிருக்கக் கூடும் என்றும் கருத்து தெரிவித்துள்ளனர்.



# பெண் என்பவள் அடிமையின் சின்னமல்ல



பூங்கொடி

இல்லறத்தின் தூணாக விளங்கும் பெண்கள் இன்று எத்தனையோ துன்பங்களுக்கும் இன்னல்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

ஆணாதிக்கம் மேலோங்கி விசேடமாக வறுமைக்குட்பட்ட பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகள் இன்று அதிகரித்துக் காணப்படுகின்றது.

காலாகாலமாக பெண் அடிமைப்படுத்தப்பட்டு குறிப்பிட்ட துறைசார்ந்த இடங்களில் ஆண்களிடமிருந்து ஒதுக்கி வைக்கப்படுவதும் நாம் அறிந்ததே. நவீனமடைந்துவரும் காலத்தில் கூட பெண் அடிமைப்படுத்தப்பட்டு வருகின்றாள் என்பதை மறுப்பதற்கு இல்லை. பெண்ணினத்துக்கு இன்னமும் முழுமையான சுதந்திரம் கிடைக்கவில்லை என்றே கூற வேண்டும்.

இந்த அடிமை நிலையைப் போக்க எத்தனையோ பெண் விடுதலை வீரர்களும், சமுதாயச் சிற்பிகளும், கவிஞர்களும் அரசியல் தலைவர்களும் பலகாலமாகப் போராடி வருகின்றனர். ஆனால் இன்றும் இந்த அடிமைத்தனம் தொடர்கிறது. என்பது வேதனைக்குரிய விடயமாகும். பாரதியார்கூட நாட்டின் ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்களின் நிலையையும் வேதனையையும் கண்டு பெண்விடுதலைக்காக எழுச்சி மிகுந்த பாடல்களைப் பாடியுள்ளார். அந்தப் பாடல்கள் இன்றும் பெண்களின் உரிமையை பறைசாற்றும் வண்ணம் அமைந்துள்ளன. அவை இன்றும் மனித உள்ளங்களைத் தொட்டு நிற்கின்றன. ஆனால் எது எவ்வாறாயினும் பெண்ணின் அடிமைத்தனம் இன்றும் நமது சமுதாயத்தில் நிலைகொண்டுதான் இருக்கின்றது. இதற்குப் பெண்கள் தொடர்பான தவறான புரிந்துணர்வு, மூடநம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் என்பவையே காரணமாகியிருக்கின்றன. நமது முன்னோர்கள் பாரம்பரியம், பண்பாடு என்கின்ற பெயரில் பெண்கள் இப்படித்தான் இருக்கவேண்டும், இப்படி இருந்தால்தான் அவள் பெண் என சித்தரித்துள்ளனர். புராணங்களில்கூட பெண் என்பவள் தன் சுயஉணர்வுகளை விடத் தன் குடும்பம், குழந்தைகள், உறவுகள் எனத் தியாக உணர்வோடு வாழும் புனிதர்கள்போலக் காட்டப்பட்டு இருக்கிறார்கள்.

இன்றைய காலத்தை எடுத்துக்கொண்டால் பெண்கள் உரிமை, அவர்களின் பாதுகாப்பு எனப் பல விடயங்கள் தொடர்பில் பலராலும் பேசப்பட்டாலும் பெண்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் அடக்கப்படுவதும் ஆபாசப் பொருளாகப் பார்க்கப்படுவதும் வீடுகளிலும், பொது இடங்களிலும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுவதும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. பெண்கள் ஆண்களால் துன்புறுத்தப்படுவதோடு பெண்களைப் பெண்களே இழிவுபடுத்தும் நிலையும் காணப் படுகின்றது. இதன் காரணமாக மனமுடைந்து தனது தைரியத்தை இழக்கும் பெண்கள் பலர் இன்று இருக்கின்றார்கள்.

பெண் எவ்வளவுதான் உழைத்து முன்னேறினாலும் குடும்பத்தில் , சமூகத்தில், சமுதாயத்தில் அவளுக்கு மறைமுக இரண்டாம்பட்ச நிலைதான் கிடைக்கிறது. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் உலகளவில் அதிகரித்த வண்ணமே உள்ளன. படிக்கின்ற, பணிபுரிகின்ற பெண்களில் ஐம்பது சதவீதமானவர்களுக்கு அத்துமீறல்கள் இடம்பெறுகின்றன என்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

ஊடகங்களை எடுத்து நோக்கினாலும் நாள் ஒன்றுக்கு பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப்படாமல் வெளிவருவதில்லை. இன்று பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பல கோணங்களில் வியாபித்திருப்பதைக் காணலாம்.

அண்மையில் 11 வயதுச் சிறுமி மீது 11 நாள்கள் கடற்படையினர் 7 பேர் வன்புணர்வு புரிந்த செய்தி நமது நெஞ்சை உருக்குகின்றது. பாடசாலைக்கு கல்வி கற்பதற்குச் சென்ற சிறுமியை ஆசைவார்த்தை காட்டி மோசம் செய்த கயவரைத் தூக்கிலிட்டுக் கொல்ல வேண்டும். இதனை நமது சட்டத்துறை செய்யுமா?

இதை நாம் நோக்கும் போது பெண்கள், சின்னஞ்சிறுசிறுமிகள் மீது பாலியல் கொடுமைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன என்பது தெரியவருகின்றது. அத்துடன் நமது பெண்களும் ஒன்றை நன்கு புரிதல் வேண்டும். சிறுவர்களுக்கு ஏற்படும் பாலியல் பிரச்சினைகளின்போது அந்த குறிப்பிட்ட சிறுவர்கள் உடனடியாக வந்து தங்கள் பெற்றோரிடமோ அல்லது நெருங்கிய உறவினர்களிடமோ அல்லது கல்வி கற்கும் பாடசாலை அதிபர், ஆசிரியையிடமோ தனக்கு நேர்ந்த கொடுமையைச் செல்ல வேண்டும். இதனால் பெரும்பாலும் மேலதிகமாக ஏற்படும் பிரச்சினைகளை நாம் தீர்த்துக் கொள்ளலாம். இவர்களுக்குத் தெரிந்தால் பிரச்சினை, பயம் என்று இருந்தால் தங்களுடைய எதிர்காலத்தை தாங்களே அழிக்க வேண்டி நேரிடலாம். இதற்கு இன்னுமொரு முக்கிய காரணியாகப் பெற்றோர் பிள்ளைகளிடத்தில் ஆசிரியர் மாணவர்களிடத்தில் ஒரு நல்லுறவு பேணப்பட வேண்டும். பெண்களும் நம்மைப் போன்ற மனிதர்கள் தான் என்று ஆண்கள் யோசிக்க வேண்டும். அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களுக்கு உரிமைகள் உண்டு என உணர்ந்து உரிமைகளை வழங்க முன்வர வேண்டும். அத்துடன் பெண்களை மதிக்கத் தெரிந்திருக்க வேண்டும். நல்ல குடும்பம், நல்ல சமுதாயம், சிறந்த பொருளாதாரம் ஏன் நாட்டின் வளர்ச்சிக்கே பெண் உரிமையானவள். நல்ல சமுதாயத்தை உருவாக்குவதில் தலைவியாக விளங்கக் கூடியவள். அவளை நாம் எப்பொழுதும் மதிக்க வேண்டும். பெண் அடிமைச் சின்னமல்ல நாட்டின் சின்னம், வளர்ச்சியின் சின்னம் பெண் என்பவள் கடவுள் இல்லை அதற்காக அவள் அடிமையும் இல்லை. தன்னைப் போன்று அவளும் ஓர் உயிர் என்பதை ஒவ்வொரு ஆணும் உணர வேண்டும்.

மகாத்மா காந்திகூட எப்போது எமது நாட்டில் பெண்கள் நள்ளிரவிலும் நடமாடக்கூடிய சூழ்நிலை உருவாகின்றதோ அப்போதே உண்மையான சுதந்திரம் உருவாகும் என்றார். ஆனால் அதற்கு இன்னும் காலம் இருக்கிறது. அல்லது கிடைக்காமலும் போகலாம்.

மனித வரலாற்று விருத்தியில் ஆண் - பெண் உறவு பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். ஆரோக்கியமான சமூகவிருத்தியில் பெண்களின் இருப்பு அவர்களின் தலைமைத்துவம், அவர்களின் சேவை என்பன அபிவிருத்திச் சுட்டியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அத்துடன் பெண்கள் தமது இருப்பு, பாதுகாப்பு, சுதந்திரம் தொடர்பில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அதிலும் எமது நாட்டில் வாழும் பெண்கள் தினமும் சவால்கள் நிறைந்த வாழ்வையே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். குறிப்பாகப் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகச் செல்லும் பெண்கள் மற்றும் தொழில் இன்றியும் பொருளாதார வசதி இன்றியும் உள்ள பெண்கள் எனப் பலர் வாழ்வதற்காக வாழ்க்கைப் போராட்டத்தைத் தினம் தினம் எதிர்கொண்டவர்களாகவே வாழ்கின்றனர். இவர்களின் வாழ்வு வளம்பெற வேண்டுமாயின் மனித மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வதோடு எதிர்கால சவால்களுக்கும் முகங்கொடுக்கக்கூடிய வகையில் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டியதும் காலத்தின் தேவையாக உள்ளது.

---



# குழந்தைகள் பாலியல் கொடுமைகளுக்கு ஆளாகாமல் தவிர்க்க அறிவுரை

தமிழ்நிலா

பாலியல் பற்றிய அடிப்படைக் கல்வியை தங்களது குழந்தைகளுக்கு அளிக்க வேண்டியது ஒவ்வொரு தாய்மார்களின் கடமை. ஏனென்றால், வெளியாள்கள் குழந்தைகளுடைய அறியாமையைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். உதாரணமாக, வீட்டிலுள்ள சாரதி, வீட்டு வேலைக்காரர்கள், வெளியிலுள்ள தெரிந்தவர்கள், வீட்டுக்கு வருகின்ற உறவினர்கள் போன்றவர்களிடமிருந்து தான் குழந்தைகளுக்கு பாலியல் தொல்லைகள் ஏற்படுகின்றன. அதனால் குழந்தைகளைக் கவனமாக பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

தவறான காரியம் செய்பவர்களிடம் இருந்து எவ்வாறு சிக்காமல் இருப்பது என்று குழந்தைகளுக்குப் புரியவைக்க வேண்டியது பெற்றோர்கள்தான். குழந்தைகள் பாலியல் கொடுமைகளுக்கு ஆளாகாமல் இருக்க, குழந்தைகளுடைய சந்தேகங்களைப் பெற்றோர்களே அவர்களுக்கு முன்கூட்டியே புரிய வைப்பதே நல்லது.

அதைப் பற்றிய தேவையான விவரங்களை குழந்தைகளுக்குத் தெரியப்படுத்திக் கொள்வதில் பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டும். பெற்றோர்கள் குழந்தைகளுடைய சந்தேகங்களை அலட்சியப்படுத்தி ஒதுங்குவது நல்லதல்ல. அவர்களுடைய வயதுக்கேற்ற சந்தேகங்களுக்கு பதில் அளிக்கலாம்.

யாரையும் உடம்பில் தொடக்கூடாத இடங்களில் தொடுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று குழந்தைகளுக்கு முன்கூட்டியே புரிய வைக்க வேண்டும். தங்களது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக, எமக்குப் பிடித்த உணவு, கைத்தொலைபேசி போன்ற பொருள்களை பழக்கமில்லாதவர்கள் பரிசாகத் தருவார்கள் என்று குழந்தைகள் புரிந்து வைத்திருக்க வேண்டும். குழந்தையின் கையில் வீட்டுக்குத் தெரியாத எந்த ஒரு பொருளைப் பார்த்தாலும், அது எங்கிருந்து கிடைத்தது என்று பெற்றோர்கள் கேட்க வேண்டும். தங்களது குழந்தையின் நண்பர்கள் யாரெல்லாம் என்று பெற்றோர்கள் அறிந்திருக்க வேண்டும்.

ஒருவர் தன்னிடம் மோசமாக நடந்துகொண்டால், அதை நேராக எம்மிடம் சொல்ல குழந்தைகள் தயங்குவார்கள். இதனால், குழந்தைகளுக்கு பல மாற்றங்கள் மனதளவிலும் உடலளவிலும் உண்டாகின்றன. அதை அவர்கள் தங்களது வழக்கத்துக்கு மாறான செய்கைகளால்தான் வெளிப்படுத்துகிறார்கள்.

அந்த நேரங்களில் குழந்தைகள் பேசுவதை குறைத்துக் கொள்வார்கள்; சுறுசுறுப்பில்லாமல் இருப்பார்கள்; காரணமில்லாமல் அதிர்ச்சி அடைவது, சாப்பிடுவதில் வெறுப்பு, இப்படி குழந்தைகளுடைய நடவடிக்கைகள் வித்தியாசமாக இருந்தால், அதற்கான காரணம் என்னவென்று தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். வீட்டில் பெற்றோர்களுடனோ, பெரியவர்களுடனோ தங்களுடைய எல்லா விடயங்களும் பகிர்ந்து கொள்வதற்கான சுதந்திரம் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும்.



மன்னார் முசலி பிரதேச செயலர் பிரிவிலுள்ள 20 குடும்பத்தினருக்கு தமிழர் ஒற்றுமை அபிவிருத்திக் குழுமத்தினர் சார்பில் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் வாழ்வாதார உதவிகளை வழங்குகின்றார். அருகில் பங்குத் தந்தை டெனி கலிற்றஸ் மற்றும் முத்தலிப்புத்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலய அதிபர் ஆகியோர் காணப்படுகின்றனர். (க-86)

# கழுதைகளை பராமரிக்கும் செயற்றிட்டம் மன்னாரில்





மன்னார், ஜூலை 21

மன்னார் நகர சபைக்கு உட்பட்ட கழுதைகளைப் பராமரிக்கும் செயற்றிட்டம் பிரிட்யிங் லங்கா தனியார் நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் நகரசபைக்குட்பட்ட பகுதியில் சுமார் 482 கழுதைகளும் மன்னாரின் ஏனைய இடங்களில் சுமார் 200 கழுதைகளும் என சுமார் 682 கழுதைகள் இருப்பதாகத் தற்போது இனங்கானப்பட்டுள்ளது.

கழுதைகள் பற்றி மன்னார் அரச உத்தியோகத்தரின் சுற்றுச்சூழல் குழுவினருடனும் மன்னார் நகர சபையினருடனும் கலந்தாலோசித்த மைக்கு அமைவாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மன்னாரில் மனநலன் குன்றிய பிள்ளைகளின் நலன் கருதி இந்தியா மற்றும் பாகிஸ்தானில் அமைந்துள்ள ஐக்கிய இராச்சியத்தின் கழுதைகள் சரணாலயத்தின் துணைக் காரியாலயங்களும் இந்தத் திட்டத்துக்கு உதவ முன் வந்தன. இதனடிப்படையில் இந்தியாவின் கழுதைகள் சரணாலயக் குழுவானது தமது தரிசிப்பை மன்னாருக்கு மேற்கொண்டு இந்தத்திட்டம் தொடர்பாக கலந்தாலோசித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தத்திட்டத்தின் முதற்கட்டமாக மன்னார் நகரசபைக் குட்பட்ட கழுதைகளை படிப்படியாக ஓர் இடத்துக்கு மாற்றி சிகிச்சை மற்றும் பயிற்சிகளை அளிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய மன்னார் புதுக்குடியிருப்பு கிராமத்தில் ஓர் ஏக்கர் நிலம் பெறப்பட்டு துப்புரவாக்கும் திட்டமும், சிகிச்சை நிலையம் அமைக்கும் பணிகளும் ஆரம்பமாகவுள்ளன.

இங்கு பயிற்றுவிக்கப்படும் சில கழுதைகள் மன்னார் மாற்றாற்றல் நிறுவனத்தில் கல்வி கற்று வருகின்ற மனநலன் குன்றிய பிள்ளைகளின் நலன் கருதி பயன்படுத்தப்படவுள்ளன. இந்தத் திட்டத்துக்காக கழுதைகள் மூலமான மருத்துவமையம் ஒன்று முருங்கன் கிராமத்தில் அமைந்துள்ள மன்னார் மாற்றாற்றல் நிலையத்துக்கு சொந்தமான காணியில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

மன்னார் கழுதைகளின் சிறப்பு பற்றியும் அவைகளை கையாளும் முறைகள் பற்றியும் சில செயலமர்வுகளும், விழிப்புணர்வு கருத்தரங்குகளும் பாடசாலைமட்டத்தில் ஏற்கனவே நடத்தப்பட்டும் மீண்டும் நடத்தப்படவும் உள்ளன.

இந்தியாவிலிருந்து வருகை தந்த கழுதைகள் சரணாலயக் குழுவினரால் கழுதைகளை கையாளும் முறை தொடர்பான செயல்மர்வுகள் நடத்தப்பட்டதை தொடர்ந்து மன்னார் பிரதேசத்தின் உப்புக்குளம், சாந்திபுரம் மற்றும் ஆஸ்பத்திரி வீதி ஆகிய இடங்களில் சில குடும்பங்கள் கழுதைகளை வளர்க்கவும், பராமரிக்கவும் தொடங்கியுள்ளன.

இவ்வாறு பல வருடகால சிறப்பும் பாரம்பரியமும் நிறைந்த கழுதைகளின் நலன் தொடர்பாக சிந்தித்து அவற்றை முன்னேற்றவென மன்னார் கழுதைகளின் நலன்புரி சங்கம் ஒன்று அமைக்கப்பட்டு மாதாந்த ஒன்று கூடலும் செயற்பாடுகளும் மன்னார் மாற்றாற்றல் நிறுவனத்தில் நடைபெற்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-14)

## பஸ் சேவைக்கு கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை21

முத்துஐயன்கட்டுக்கான பஸ் சேவையைத் தொடர்ந்தும் முத்துஐயன் கட்டு வரை நடத்துமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். இந்த பஸ் சேவை காலை வேளைகளில் முத்துஐயன்கட்டிலிருந்து இடம் பெறுகின்றது. ஆனால் பிற்பகல் சேவையில் ஈடுபடும் பஸ்கள் இடது கரைச் சந்தி வரைக்குமே செயற்படுகின்றன.

எனவே காலையில் பஸ் சேவை ஆரம்பிக்கும் இடம் வரைக்கும் பிற்பகல் வேளையிலும் சேவைகளை நடத்துமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

## மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிப் பொருள்கள்

முல்லைத்தீவு, ஜூலை21

முல்லைத்தீவு மாவட்டடம் விசுவமடுவில் மாற்றுத் திறனாளிகளுக்கு கடந்த 15 ஆம் திகதி உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

செயற்கை உறுப்புக்கள் தொழில் நுட்ப நிறுவனத்தின் செயலாளர் மைக்கல் தியாகராசா தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் அந்த நிறுவனத்தினால் 22 பேருக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இதில் 20 பேருக்கு உலர் உணவுப் பொதிகளும், இரண்டு மாணவர்களான மாற்றுத் திறனாளிகளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகள வில் உதவிகள் வழங்கப்பட வேண்டுமென இந்த நிகழ்வில் வலியுறுத்தப் பட்டது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.தசர தன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (க-18)

# காலபோகத்தில் பாதிப்புற்ற விவசாயிகளுக்கு நட்டஈடு

## மன்னாரில் 30 லட்சம் ரூபா வழங்கப்பட்டது



இலங்கை கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபைத் தலைவர் ஆரிய திலக தகாநாயக்க, கமத்தொழில் காப்புறுதிச் சபைப் பணிப்பாளர் நாயகம் பண்புக வீரசிங்க, கமத்தொழில் செயற்பாட்டுப் பணிப்பாளர் சுனில் வீரசிங்க, கமத்தொழில் பிரதிப் பணிப்பாளர் காமினி அமரதுங்க, மன்னார் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் பா.தேவரதன், வங்கி அதிகாரிகள் ஆகியோர் நிகழ்வின் போது அமர்ந்திருக்கின்றனர். (க)

மன்னாரில் கடந்த காலபோகத்தின் போது பாதிப்படைந்த 50 விவசாயிகளுக்கு நட்டஈடாக 30 லட்சம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் கடந்த பெரும் போகத்தில் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கும் வைபவம் கடந்த புதன்கிழமை மன்னார் பரப்புக்கடந்தான் பகுதியில் நடைபெற்றது.

இதில் பாதிப்படைந்த 50 பேருக்கு 30 லட்சம் ரூபா பெறுமதியான நட்டஈட்டுத் தொகைகள் காசோலைகளாக வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்ட விவசாய காப்புறுதி உதவிப் பணிப்பாளர் ரி.எம்.றிஸ்வி தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் இலங்கை கமத்தொழில் மற்றும்கமநலகாப்புறுதி சபைத் தலைவர் ஆரியதிலக தகாநாயக்க, கமத்தொழில் காப்புறுதிச் சபைப் பணிப்பாளர் நாயகம் பண்புக வீரசிங்க, கமத்தொழில் செயற்பாட்டுப் பணிப்பாளர் சுனில் வீரசிங்க, கமத்தொழில் பிரதிப் பணிப்பாளர் காமினி அமரதுங்க, மன்னார் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் பா.தேவரதன், வங்கி அதிகாரிகள் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு நட்ட ஈட்டுக்கான காசோலைகளை வழங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில் திடீர் விபத்தில் சிக்கி மரணித்த விவசாயி ஒருவரின் குடும்பத்தினருக்கும் நட்ட ஈடு வழங்கப்பட்டது. (க)

# ஒலுமடுவில் நிலக்கடலைச் செய்கை பெரு வெற்றியைத் தந்துள்ளது

## கூறுகிறார் விவசாயப் போதனாசிரியர்



வவுனியா, ஜூன் 21

ஒலுமடு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் உள்ள சிறு குளங்களின் கீழ் 45 ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட நிலக்கடலைச் செய்கை பெரு வெற்றியை அளித்துள்ளதாக ஒலுமடு விவசாயப் போதனாசிரியர் அ.கபிலன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

வயல் நிலங்களில் செய்கை பண்ணப்பட்ட மாற்றுப் பயிரான நிலக் கடலையில் விவசாயிகளுக்கு அதிக இலாபத்தை ஈட்டக் கூடியதாக விளைச்சல் கிடைத்துள்ளது.

முல்லை மாவட்டத்தில் நிலக் கடலைச் செய்கையை விஸ்தரிக்க வேண்டுமென்பதே எமது நோக்கமாகும். என்றார்.

கடந்த 7 ஆம் திகதி ஒலுமடு விவசாயப் போதனாசிரியர் அ.கபிலன் தலைமையில் வயல் விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதி விவசாயப் பணிப்பாளர் (தலைமைப் பீடம்) திருமதி ஜெகநாதன், பிரதி விவசாயப் பணிப்பாளர் ரி.யோகேஸ்வரன், எவ்.ஐ.ஓ. நிறுவன உத்தியோகத்தர்கள், முல்லை மாவட்ட கமநலச் சேவை உதவி ஆணையாளர் பெருமளவிலான விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை-இந்த வருடம் சிறு குளங்களின் கீழ் மாற்றுப் பயிரான நிலக் கடலைச் செய்கையில் ஈடுபட்டு அதிக வருவாயைப் பெற்றுக் கொண்டோம், இனி வருங்காலங்களில் மாற்றுப் பயிர்ச் செய்கைகளில் நாம் ஈடுபடுவதற்கு நிலக் கடலைச் செய்கை உந்து சக்தியாக மாறியுள்ளதாக நிலக்கடலைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

அவர்கள் தொடர்ந்து தெரிவிக்கையில்:-

கடந்த காலங்களில் நெல் அறுவடை முடிந்ததும் வயல் நிலங்கள் வெறுமனே சுமார் 6 மாத காலம் இருந்தன. இந்த வருடம் மாற்றுப் பயிர்ச் செய்கையை எமது விவசாயப் பகுதியினர் அறிமுகப்படுத்தினர்.

எமது விவசாயப் போதனாசிரியரும் அவ்வப்போது அறிவுரைகளையும் வழங்கி ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்.

அதன் பயனாக எமது செய்கை சிறந்த பயனைத் தந்ததுடன் வயல் நிலங்களுக்கு அதன் இலை குலைகள் உரமாகியுள்ளன. களைகளையும் கட்டுப்படுத்த முடிந்தது. இனிமேல் நாம் மாற்றுப் பயிர்களை வயல் நிலங்களில் செய்கை பண்ணவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (க-500)

## பாதுகாப்பற்ற வடிகால்வாய் தவறி வீழ்ந்தார் இளைஞன்



மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் கழிவு வாய்க்காலுக்குள் தவறி வீழ்ந்த நிலையில்

யாழ்ப்பாணம், ஜூலை 21
மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் பருத்தித்துறை வீதியில் கோப்பாய் சந்திக்கு அருகில் உள்ள வடிகால்வாயில் தவறி விழுந்து தலையில் காயமடைந்தார். மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது. பிரதான வீதியோரமாக அமைக்கப்பட்ட குறித்த வடிகால்வாய்க்கு மேல் பாதுகாப்பு மூடி அமைக்கப்படாததால் வீதியோரம் பயணிக்கும் மக்கள் ஆபத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேற்படி விபத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 6 மணியளவில் இடம்பெற்றது. (வ-17)

# நுளம்புகளின் உற்பத்தி மையங்களாக யாழ்.நகரில் கழிவு நீர் வாய்க்கால்கள்

## முறையான சுகாதாரத் திட்டமிடல் நடவடிக்கை அவசியம்

யாழ்ப்பாணம், ஜூலை 21
யாழ்.நகரில் உள்ள பிரதான கழிவு நீர்கால்வாய்கள் பெரும்பாலும் கழிவு நீரோட்டம் தடைப்பட்ட நிலையில் தேங்கி நின்று நுளம்புகளின் உற்பத்தி மையங்களாகக் காணப்படுகின்றன.

யாழ்.ஆரியகுளப் பகுதியிலிருந்து சென்று யாழ்.ஆஸ்பத்திரி கழிவு நீரையும் எடுத்துக்கொண்டு கடலுக்குச் செல்லும் பிரதான கழிவுநீர் கால்வாய், யாழ். நவீன சந்தையூடாக முனீஸ்வரன் வீதி, புல்லுக்குளத்தின் அருகாகச் செல்லும் பிரதான கால்வாய் மற்றும் கொட்டடி பண்ணைப் பகுதியூடாகச் செல்லும் பிரதான கால்வாய் போன்றவை நீண்ட காலமாக சீரான பராமரிப்பின்றி அடைபட்டுக் காணப்படுகின்றன.



நீரோட்டம் தடைப்பட்ட கழிவு நீர்க் கால்வாய்

நீண்ட பல வருடங்களாக தூர் எடுக்கப்படாமையால் ஆங்காங்கே மண் திட்டுக்கள் ஏற்பட்டு நீரோட்டம் தடைப்பட்டுள்ளது. இதனால் தற்போதைய வெப்ப காலத்தில் கூட கழிவு நீர் நிறைந்து தேங்கி நிற்கிறது. அந்தத் தேக்கத்தில் குடம்பிகளும் புழுக்களும் ஓடித்திரிவதைக் காண முடிவதுடன் துர்நாற்றமும் வீசுகின்றது.

இத்தகைய நிலைகளால் நகரப் பகுதி வர்த்தக நிலையங்கள், வைத்தியசாலைக்குச் செல்வோர் குடியிருப்பாளர்கள் பல சுகாதார அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்.நகரப்பகுதியின் கழிவு நீர் மற்றும் வடிகாலமைப்புக்கள் சிறந்த சுகாதாரத் திட்டமிடலுடன் சுத்தம் செய்யப்பட்டு மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

யாழ்.குடாநாட்டில் டெங்கு தீவிரமாகப் பரவி வருகிறது என்று ஊடகங்கள் மூலம் அறிக்கை விடும் சுகாதாரத்துறையுடன் தொடர்புடையவர்கள் ,இது குறித்தும்கவனம்எடுக்கவேண்டும் என்றும் பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ஒ-135)



கெருடாவில் இந்துத் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற கண்காட்சியில் பெருமளவான மாணவர்கள் கண்காட்சியை பார்வையிட்டனர். பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி ஏஸ். சிறிராமச்சந்திரன் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். (வ-108)

## ரூ. 203 மில். செலவில் அபிவிருத்தி சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள்

தென்மராட்சி, ஜூலை 21
சாவகச்சேரி நகரசபையில் கடந்த மூன்று ஆண்டு காலப் பகுதியில் (2011,2012, 2013) 203.08 மில்லியன் ரூபா செலவில் நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார்.

சபை நிதி மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்ட நிதி ஆகியவற்றைக் கொண்டு இந்த வேலைத் திட்டங்கள் சிறப்புற செய்து முடிக்கப்பட்டுள்ளதாகவும்- 2011 ஆம் ஆண்டு சபை பதவியேற்ற பின்னர் கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டில் 27.383 மில்லியன் ரூபாவும் 2012 ஆம் ஆண்டில் 45.377 மில்லியன் ரூபாவும், 2013ஆம் ஆண்டில் 130.32 மில்லியன் ரூபாவும் அபிவிருத்திப் பணிக்கு செலவிடப்பட்டதாகவும் தமது பணிக்கு ஒத்துழைப்பு நல்கிய வரியிறுப்பாளர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அறிவித்துள்ளார். (வ-9)

## மேய்ச்சல் தரைகளாக மாறியுள்ள குடாநாட்டு குளங்கள், நீர்நிலைகள்



குளக்கரையில் மேய்ச்சலிடும் கால்நடை

யாழ்ப்பாணம், ஜூலை 21
யாழ்.குடாநாட்டில் தொடர்ந்து கொண்டிருக்கும் கடும் வறட்சி காரணமாக பெரும்பாலான குளங்கள் மற்றும் நீர்நிலைகள் நீரின்றி கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்களாக மாறியுள்ளன.

கடந்த வருடம் போதிய பருவ மழையின்மை, சித்திரை மாத சிறுமாரியின்மை காரணமாக நிலத்தடி நீர் விரைவாக வற்றி நீர்நிலைகள் வறண்டு காணப்படுகின்றன.

அத்துடன் கிணறுகளின் நீர் மட்டம் குறைந்து செல்வதனால் மக்கள் தமது தேவைகளுக்கு போதுமான நீரைப் பெற்றுக் கொள்ள முடியாது பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக கால்நடைகள் நீர் அருந்துவதற்காக நீரற்ற குளங்களை நாடி ஏமாற்றத்துடன் அலைந்து திரிவதுடன், கடல் நீரைக் கூட பருகும் நிலை ஏற்பட்டுள்ளது. (ஒ-135)

## மாவைக் கந்தனின் திருக்கார்த்திகை உற்சவம் இன்று

மாவைக் கந்தனின் வருடாந்த உற்சவம் கடந்த 2 ஆம் திகதி புதன்கிழமையன்று காம்யோற்சவத்துடன் ஆரம்பமாகி இன்று திங்கட்கிழமை அவனின் சிறப்பான திருவிழாவாகிய திருக்கார்த்திகை உற்சவம் நடைபெறுகின்றது. இன்று பக்தர்கள் அடியவர்கள் மாவைக் கந்தனுக்கு விரும்பிய மாவிளக்கு ஏற்றி நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவார்கள். கோயில் முழுவதும் மாவிளக்கு ஒளியால் பிரகாசிக்கும். திருக்கார்த்திகையில்தான் பக்தர்கள் அவனருள் வேண்டி காவடி எடுத்து நேர்த்திக்கடனை நிறைவேற்றுவார்கள். இன்று காலை 5 மணிக்கு உஷாக்கால பூசையுடன் உற்சவம் ஆரம்பமாகி பிற்பகல் 2.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து கார்த்திகைக் குமரனின் திருவீதியுலா இடம்பெறும். (ஒ)

# இளைஞருக்கு ஏற்படும் உடல், உள தாக்கத்தை ஆற்றுப்படுத்த நிலையம்

## சாவகச்சேரி மருத்துவமனையில் ஆரம்பிக்க முடிவு

தென்மராட்சி, ஜூலை 21
மக்களின் கோரிக்கையை ஏற்று இளைஞர்களுக்கான உடல், உள தாக்கம் தொடர்பான ஆற்றுப்படுத்தல் நிலையத்தை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளது சாவகச்சேரி மருத்துவமனை மருத்துவர் குழாம்.

பிரதேச இளைஞர்கள் தவறான வழி நடத்தல்கள் காரணமாக பல்வேறு தவறான செயற்பாடுகளில் ஈடுபடுவதை விரும்பாத சிலர் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து தொழில்களின்றி காணப்படும் இளைஞர்கள் தமது உடல், உள மாற்றங்கள் தொடர்பான தவறான வழிகாட்டுதல்களுக்கு உள்ளாகி தீய பழக்கங்களுக்கு அடிமையாகின்றனர்.

சாவகச்சேரி மருத்துவமனையில் இளவயது பெண்களுக்கு பருவமாற்றம் தொடர்பாக ஏற்படும் தாக்கங்களுக்கு ஆற்றுப்படுத்தும் நிலையம் மூலம் கிளினிக் நடத்துவது போல் தீய பழக்கங்களால் சீரழிந்து செல்லும் இளைஞர் சமுதாயத்தையும் நல்வழிப்படுத்தக் கூடிய ஆற்றுப்படுத்தும் நிலையத்தை ஆரம்பிக்குமாறு பிரதேச நலன் விரும்பிகள் மருத்துவமனை நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக மருத்துவமனை நிர்வாகம் மருத்துவமனையில் கடமையாற்றும் பொது மருத்துவ நிபுணர்கள், உளவள மருத்துவ நிபுணர் மற்றும் ஏனைய மருத்துவர்களுடன் கலந்துரையாடியதை அடுத்து மருத்துவமனையில் இளைஞர்களுக்கான ஆற்றுப்படுத்தும் நிலையத்தை ஆரம்பிப்பது என்றும் நிலையத்துக்கு சிகிச்சை பெற வருவோரை நோயாளியாகக் கருதாமல் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்கத்தைக் கண்டறிந்து அதற்கான வழிமுறைகளைச் சொல்லும் ஆலோசனை நிலையமாக செயற்படுத்துவது என்றும் முடிவு செய்துள்ளனர்.

நிலையத்துக்கான ஏற்பாடுகள் மேற்கொண்ட பின்னர் விவரங்கள் அறிவிக்கப்படும் என்றும் மருத்துவமனை செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)

# பாவனையற்ற கிணறுகளில் நுளம்பு அழிக்கும் மீன்களை வளர்க்குமாறு சுகாதாரப் பகுதி அறிவுறுத்து

தென்மராட்சிப் பிரதேசத்தில் பாவனையற்றுக் காணப்படும் கிணறுகளிலும் குடியிருப்புக்களில் மோட்டார் மூலம் தண்ணீர் எடுக்கும் கிணறுகளிலும் டெங்கு நுளம்பு உற்பத்தியை அழிக்கும் மீன்களை வளர்க்குமாறு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் அறிவித்துள்ளனர்.

பராமரிப்பு இன்றிப் பற்றைகளாகக் காணப்படும் காணிகளில் பாவனையின்றி காணப்படும் கிணறுகள் மற்றும் நீர் நிலைகள் ஆகியவற்றிலும் குடியிருப்புக்காணிகளில் மோட்டார்கள் மூலம் நீர் எடுக்கும் கிணறுகளிலும் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய வாய்ப்புகள் உள்ளன. இவ்வாறான நீர் நிலையில் நுளம்பு உற்பத்தியாகாமல் தடுக்கும் மீன்வகைகள் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மூலம் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறான நீர் நிலைகளைக் கொண்ட காணி உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் மீன் குஞ்சுகளைப் பெற்று நீர் நிலைகளில் விடுமாறும், டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்றிட்டங்களில் இவ்வாறான நீர் நிலைகளில் மீன் வளர்க்கப்படாதவிடத்து காணி உரிமையாளர் அல்லது பராமரிப்பாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்களாக இனங்காணப்பட்டு சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்ட காணிகளை துப்புரவு செய்யுமாறும் தவறின் அவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (து-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஒரே விடயம், ஒரே காலம் விசாரணைகள் இரண்டு

இலங்கையில் நடந்து முடிந்த 30 ஆண்டுகாலப் போரின் இறுதிக்காலகட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றை இப்போது இரண்டு குழுக்கள் ஏக காலத்தில் விசாரிக்கப் போகின்றன.

ஒன்று ஏற்கெனவே ஐ.நா. மனித உரிமை சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக மனித உரிமை ஆணையாளரால் நியமிக்கப்பட்ட குழு. அந்தக் குழுவில் ஆணையாளர் பணிமனையைச் சேர்ந்த பல்வேறு துறைகளைச் சார்ந்த வல்லுநர் 12 பேர் உள்ளனர். அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கென சர்வதேச அளவில் புகழும் இந்த மாதிரி விசாரணைகளில் அனுபவமும் கொண்டு மூன்று நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நிபுணர்கள் நியமனத்துடன் அந்தக் குழுவின் விசாரணைகள் வெளிநாட்டிலேயே ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. அந்தக் குழுவினர்கள் இலங்கைக்கு வந்து விசாரணைகளை மேற்கொள்ள இலங்கை அரசு கண்டிப்பாக மறுத்துள்ளமையால் அதன் விசாரணை பல வெளிநாடுகளில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏறக்குறைய 10 மாதங்களில் அந்தக் குழுவின் முடிவு அறிவிக்கப்பட்டுவிடும் என்று தெரிகின்றது.

இந்த நிலையில் சமீபகாலம்வரை இலங்கை இராணுவத்தினர் போரின்போது பொதுமக்கள் எவருக்குமே உயிரிழப்பை ஏற்படுத்தியதில்லையென்று அடித்துக் கூறி வந்துள்ள இலங்கை அரசு– ஐ.நா. மனித உரிமை சபையின் தீர்மானத்துக்கமைவாக உள்ளக விசாரணைக் குழுவை அமைப்பதிலும் அசமந்தம் காட்டி வந்த இந்த அரசு –மனித உரிமைகள் சபை பல தடவைகளிலும் விடுத்த அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்து வந்த அரசு இப்போது ஏற்கெனவே தன்னால் நியமிக்கப்பட்டு போர்க் காலத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணையில் ஈடுபட்டு வரும் ஆணைக்குழுவின் விசாரணை பரப்பு வீச்சை திடீரென அதிகரித்து அதற்கு ஆலோசனை கூறுவதற்கென சர்வதேச நிபுணர்கள் மூவரையும் நியமித்துள்ளது. ஆணைக்குழுவினர் கோரும்போது அவ்வப்போது வேறு நிபுணர்களும் நியமிக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதுவானாலும் அரசு நியமித்த குழு ஏற்கெனவே காணாமற் போனவர்கள் தொடர்பாக வடக்கிலும் கிழக்கிலுமாக ஏராளமான விசாரணைகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றது. இப்பொழுது அதன் வேலைப்பளு அதிகரித்திருப்பதால் அதன் விசாரணை முடிவு வெளிவர வெகுகாலம் எடுக்கலாம்.

ஆனால் இந்த நிபுணர்கள் தெரிவிக்கும் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் அரசின் முடிவாகவே இருக்கும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், தகவல் தொடர்புத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல கூறியிருப்பதைப் பார்க்கையில் இது வெறும் கண் துடைப்பு அல்லது வேறு ஏதோ உள்நோக்கத்துடன் செய்யப்படுகிறது என்றே எண்ணத் தோன்றுகின்றது. நிபுணர்கள் கூறும் ஆலோசனைகள் அரசுக்கு ஏற்றாற் போல் அமைய வேண்டும் என்பதுதானே இதன் பொருள். அவ்வாறாயின் நிபுணர்கள் நியமிக்கப்படுவதன் அர்த்தம் என்ன? இது 2008ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டு இடைநடுவில் காணாமற் போன சர்வதேச சுயாதீன மதிப்பார்ந்த பிரமுகர் குழு போன்றுதான் முடியப்போகிறது என்றும் சிலர் சுட்டிக் காட்டுகிறார்கள்.

அது போக மனித உரிமைக் குழுவுக்கு சாட்சியம் வழங்குபவர்கள் இலங்கை அரசினால் கண்காணிக்கப்படுவார்கள் என்ற அச்சுறுத்தல் இன்னமும் அப்படியே இருக்கும் நிலையில், இந்தக் குழுவுக்கு சாட்சியமளிப்பவர்கள் மாத்திரம் கண்காணிக்கப்பட மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? அதற்கான ஏற்பாடு எதுவும் செய்யப்படுவதைக் காணோம். பொதுவில் பார்த்தால் மனித உரிமை சபையின் விசாரணை முடிவு முன்னதாகவே வந்தாலும் அதனைப் புறந்தள்ளி தனது குழுவின் முடிவை எதிர்பார்ப்பதாக காலத்தைக் கடத்துவதற்கு இது ஒரு வாய்ப்பாகவும் இருக்கலாம்.

ஏற்கெனவே கிடப்பில் போடப்பட்டுவிட்ட பல விசாரணைகள், ஆணைக்குழுக்களின் அறிக்கைகளுக்கு நடந்த அதே கதி இந்த விசாரணை முடிவுக்கும் நடக்காதென்பதற்கு என்ன உறுதி? அரசின் உயர்மட்டத்திலிருந்து இது குறித்து உறுதிப்பாடொன்றை பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல இதில் அக்கறையுள்ள அனைவருமே எதிர்பார்ப்பார்கள்.

# இனவெறியின் ஒருமுகமே

## கம்பஹா சம்பவம்

சேரலாதன்

இலங்கையிலே சிறுபான்மை இன மக்கள் எந்த அளவுக்கு மதிக்கப்படுகின்றார்கள் என்பதற்கு கம்பஹாவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்களுக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றே போதுமானது. அதுவும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினரால் மாவட்டங்களுக்கு இடையே நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியின்போதே இந்த அவமானகரமான அனுபவத்தை யாழ். வீரர்கள் எதிர்கொண்டனர். அம்பாந்தோட்டை அணியைச் சேர்ந்தவர்கள் மோசமான வார்த்தைகளால் திட்டியும், கல்வீசித் தாக்குதல் நடத்தியும் தமது இன வெறியை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் இவர்களின் இந்த அநாகரிகமான செயலைக் கட்டுப்படுத்துவதற்கான துணிவும், அதிகாரமும் போட்டியை ஒழுங்கு செய்தவர்களுக்கும், நடத்தியவர்களுக்கும் இருந்ததாகத் தெரியவில்லை. இந்த நாட்டின் அதிகாரம் படைத்தவரின் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களைக் கண்டிப்பதற்கோ தடுப்பதற்கோ எவருக்கும் துணிவு வராமல் இருந்திருக்கலாம்.

இந்த நாட்டின் நாகரிகம் இந்த அளவுக்கு கீழ் மட்டத்துக்குச் சென்றுள்ளதை எவருமே பொறுத்துக்கொண்டிருக்க மாட்டார்கள். ஆனால் இங்கு வாழும் சிறுபான்மையினத்தவர்களின் தலைவிதி போலும் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டிய நிலையில்தான் அவர்கள் காணப்படுகின்றனர். ஆனால் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த இளைஞர்களின் மனங்களிலும் இனவெறி என்ற அந்தக் கொடியகுணம் பரப்பப்பட்டுள்ளமை எதிர்காலத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்திவிடப் போகின்றது.

தென்னிலங்கை அரசியல்வாதிகளின் இனவெறிப் பிரசங்கங்கள் சிறுபான்மை இனத் தமிழர்கள் குருதியைச் சிந்துவதற்கு வழிவகுத்தன. அது இன்னமும் தொடர்வதுதான் இந்த நாட்டின் சாபக்கேடாகவுள்ளது.

இலங்கை அந்நியரிடமிருந்து சுதந்திரமடைந்து சுமார் 65 ஆண்டுகள் கழிந்துவிட்டன. இனங்களுக்கிடையில் ஒற்றுமையையும், இணக்கப்பாட்டையும் ஏற்படுத்தி நாட்டை நல்லதொரு நிலைக்குக் கொண்டு வருவதற்கு இந்தக் காலப்பகுதி போதுமானது. அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டிருந்தால் இந்த நாடு உலக அரங்கில் முதன்மை பெற்றிருக்கும் ஆனால் நிலைமை தலை கீழாக மாறிக் காணப்படுகின்றது. இதற்கு இன வார்த்தைக் கிளப்பி வரும் அரசியல்வாதிகள் உள்ளிட்டோர் பதில் கூறியே ஆகவேண்டும்.

தென்னிலங்கையரின் இனவெறிப் பிரசங்கங்கள் சிறுபான்மை இனத் தமிழர்கள் குருதியைச் சிந்துவதற்கு வழிவகுத்தன. அது இன்னமும் தொடர்வதுதான் இந்த நாட்டின் சாபக்கேடாகவுள்ளது. இலங்கை அந்நியரிடமிருந்து சுதந்திரமடைந்து சுமார் 65 ஆண்டுகள் கழிந்து விட்டன. இனங்களுக்கிடையில் ஒற்றுமையையும், இணக்கப்பாட்டையும் ஏற்படுத்தி நாட்டை நல்லதொரு நிலைக்குக் கொண்டு வருவதற்கு இந்தக் காலப்பகுதி போதுமானது.

சின்னஞ்சிறிய சிங்கப்பூரில் சீன மொழி பேசும் மக்களே அதிகளவில் வாழ்கின்றனர். ஆனால் சீன நாட்டின் செல்வாக்கு அங்கு இல்லவே இல்லை. மேலும் சகல இன மக்களுக்கும் அங்கு பூரண சுதந்திரமும், ஜனநாயக உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன. அந்த நாட்டின் வெற்றியின் இரகசியமே அதுதான். தமிழர்கள் ஜனாதிபதியாகவும், வெளிவிவகார அமைச்சராகவும் நியமிக்கப்பட்டமை அந்த நாட்டின் இன ஒற்றுமையைப் பறைசாற்றி நிற்கின்றன. இதன் காரணமாகவே சகல மக்களும் அந்த நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று உழைத்துப் பாடுபடுகின்றனர். இது எமது நாடு, நாம் அங்கு வாழும் குடிமக்கள் என்ற உணர்வு அங்குள்ள மக்களிடம் குடிகொண்டுள்ளன. இன, மொழி, மத பேதமில்லாத அந்தச் சின்னஞ்சிறிய நாடு இன்று உலகின் முன்னால் தலை நிமிர்ந்து நிற்கின்றது. ஆனால் நாம் எந்த நிலையில் நிற்கின்றோம் என்பதை ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அளுத்கம மற்றும் பேருவளைப் பிரதேசங்களில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற சம்பவங்களை மூடி மறைக்கும் செயற்பாடுகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. தமது தனிப்பட்ட வாழ்க்கையில் மட்டுமே அக்கறை செலுத்தும் முஸ்லிம் தலைமைகளும் இதற்குத் துணை போவதைக் காண முடிகின்றது. இத்தகைய தலைமைகள் இருக்கும்வரை இனவாதிகளின் கரங்கள் ஓய்ந்துவிடப் போவதில்லை.

இதேவேளை கம்பஹாவில் இடம்பெற்ற அந்தச் சம்பவத்தை எவருமே சிறிய தொன்றாகக் கருதிவிட முடியாது. ஏனென்றால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீரர்கள் தாமாகவே அங்கு சென்றவர்களல்ல. அரசின் சார்பில் கிடைத்த அழைப்பின் பேரிலேயே அங்கு சென்று போட்டிகளில் கலந்துகொண்டனர். இவர்களைப் பாதுகாப்பதும், பராமரிப்பதும் போட்டி ஏற்பாட்டாளர்களின் முக்கிய கடமைகளாகும். ஆனால் அங்கு ஒன்றுமே இடம்பெறவில்லை. யாழ். வீரர்களுக்கு நேர்ந்த அவலத்தையும், அவமானத்தையும் வெறுமனே வேடிக்கை பார்க்கவே அவர்களால் முடிந்தது. இதைவிட அவமானம் வேறெதுவும் இருக்கவே முடியாது. அம்பாந்தோட்டையிலிருந்து வந்தவர்கள் கம்பஹாவில் இவ்வாறு நடந்து கொண்டதைப் பார்க்கும்போது போட்டி இடம்பெற்ற இடம் அம்பாந்தோட்டையாக இருந்தால் நிலைமை எவ்வாறு இருந்திருக்குமென்பதை எண்ணிப் பார்க்கவே நெஞ்சம் பதைபதைக்கிறது.

இந்த நாட்டின் நாடாளுமன்றத்தின் எண்ணிக்கையின் அடிப்படையில் எல்லாமே நடந்து முடிவதைப் போன்று இனங்களைப் பொறுத்தவரையில் நடந்து கொள்ள முடியாது. இங்கு வாழும் ஒவ்வொரு குடிமகனும் இலங்கை நாட்டின் பிரசை என்ற உரிமையைக் கொண்டுள்ளான். இதில் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதமே கிடையா[illegible] தேர்தல்கள் இடம்பெறும் போதுகூட சக[illegible] மக்களுக்கும் சம உரிமையே வழங்கப்படுகின்றது. இவ்வாறிருக்க தேவையில்லாத காரணங்களைக் கூறி சிறுபான்மையின மக்களின் மனங்களை நோகடிப்பது எந்த வகையிலும் நியாயமானதல்ல.

குறிப்பாக அம்பாந்தோட்டை என்றதுமே ஜனாதிபதியின் குடும்பத்தினரே எமது மனக் கண்ணில் தெரிகின்றனர். அம்பாந்தோட்டையில் நடக்கும் எந்த விடயமாக இருந்தாலும் அது ஜனாதிபதிக்குப் பாதிப்பையோ அல்லது பெருமையையோ ஏற்படுத்திவிடக் கூடியது. அந்த வகையில் பார்க்கும் போது கம்பஹாவில் இடம்பெற்ற சம்பம் நிச்சயமாக அவருக்குப் பெருமையைக் கொடுக்கமாட்டாது. ஆகவே இனிமேலாவது இத்தகைய இழிவான சம்பவங்கள் இடம்பெறாத வகையில் சம்பந்தப்பட்டவர்கள் பார்த்[illegible] கொள்ள வேண்டும்.

இன்று போரின் பின்னரான காலப் பகுதியில்கூட தமிழர்கள் நிம்மதியாக வாழ்வதாகத் தெரியவில்லை. இன ரீதியாக நெருக்குதல்கள் அவர்கள் மீது திணிக்கப்பட்டு வருவதைக் காண முடிகின்றது. குறிப்பாக அதிகளவிலான படையினரின் பிரசன்னம் அந்த மக்களின் அமைதியான வாழ்வுக்கு இடைஞ்சலை ஏற்படுத்துவதாகவே தெரிகின்றது. மேலும் காணி அபகரிப்பில் படையினர் ஈடுபடுவதானது மக்களைப் பெரிதும் பாதித்து வருகின்றது.

மேலும் பெண்கள் மீதான துஷ்பிரயோகங்களும் அதிகளவில் இடம்பெறுகின்றமை பெரும் அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளன. அண்மையில் காரைநகரில் சிறுமிகள் மீதான வன்புணர்வுச் சம்பவங்களுக்கு படையினரே காரணமென விரல்கள் சுட்டி நிற்கின்றமை பேரதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது. ஆனால் வழக்கம் போலவே இந்தச் சம்பவங்களும் மூடி மறைக்கப்பட்டு விடும் என்பதில் சந்தேகமே தேவையில்லை.

இந்த நாட்டு மக்கள் பெரும்பான்மை இனத்தவர், சிறுபான்மை இனத்தவர் என்று வேறுபடுத்திப் பார்த்துக்கொண்டு இருக்கும்வரை உண்மையான அபிவிருத்தியை இங்கு எதிர்பார்க்கவே முடியாது. முதலில் மக்களின் மனங்களில் அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும். அதன் பின்னர் நாட்டின் அபிவிருத்தி தொடர்பாகச் சிந்திக்கலாம். இதை விடுத்து வேறு பாதையில் பயணத்தைத் தொடர்ந்தால் உண்மை யான இலக்கை ஒருபோதுமே எட்ட முடியாது என்பது தான் யதார்த்தம்.


# அமைதியான ஆசியாவுக்கான சிறு காலடி

ஜெராம்

அண்டை நாடுகளுக்கு இடையிலான பிரச்சினைகள்தான் காலம் காலமாக உலக அமைதிக்குப் பேராபத்தாக இருந்து வந்திருக்கின்றன. தற்காலப் புவியரசியலும் அதற்கு விதி விலக்கல்ல. இஸ்ரேல்-பாலஸ்தீனம், உக்ரைன்-ரஷ்யா, தென்கொரியா-வட கொரியா, இந்தியா-பாகிஸ்தான், இந்தியா- சீனா என்று சொல்லிக்கொண்டே போகலாம். இந்த நாடுகளின் தலைவர்கள் சந்தித்துக்கொள்வது மிகமிக அரிதாகத்தான் நிகழும். அப்படிச் சந்தித்துக்கொள்ளும்போது நட்புறவோடு அவர்கள் உரையாடிக்கொள்வது பெரும் அதிசயம். எனவேதான், பிரிக்ஸ் அமைப்பு நாடுகளின் மாநாட்டுக்காக பிரேசிலுக்குச் சென்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும், சீன அதிபர் ஜின்பிங்கும் சந்தித்தது சமாதான நடவடிக்கைகளின் முன்னோட்டமாகப் பார்க்கப்படுகிறது. மோடியும் ஜின்பிங்கும் சுமார் 80 நிமிடங்கள் இருதரப்பு உறவுகள் குறித்து வெளிப்படையாகப் பேசியிருக்கிறார்கள்.

மோடியின் முந்தைய நிர்வாகச் சிறப்புகளை ஜின்பிங்கும், ஜின்பிங்கின் அக்கறை மிகுந்த அணுகுமுறையை மோடியும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். இதன் தொடர்ச்சியாக, வரும் நவம்பர் மாதம் சீனாவுக்கு வர வேண்டும் என்றும், ஆசிய-பசிபிக் நாடுகளின் மாநாட்டில் பார்வையாளராகப் பங்கேற்க வேண்டும் என்றும் ஜின்பிங் மோடிக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

இந்த அழைப்பைப் பரிசீலிப்பதாக மோடி தரப்பில் பதில் தரப்பட்டுள்ளது. அதே சமயம், செப்டம்பர் மாதம் தான் இந்தியா வருவதை உறுதிப்படுத்தியிருக்கிறார் ஜின்பிங்.



இரு நாடுகளுக்கும் இடையில் ஆண்டுக் கணக்காக நீடித்துவரும் எல்லைப் பிரச்சினைகள்தான் இந்தச் சந்திப்பின் மையம். எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாகப் பேசி இதைத் தீர்க்கலாம் என்று ஜின்பிங் கூறியிருக்கிறார். தீர்வு ஏற்படும்வரை எல்லையில் அத்துமீறலோ பதற்றமோ ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று மோடி வலியுறுத்தியிருக்கிறார்.

கைலாச-மானசரோவர் யாத்திரைக்கு இமாசலப் பிரதேசம் வழியாகச் செல்வதற்கு அனுமதியும் கோரப்பட்டிருக்கிறது. அதைப் பரிசீலிப்பதாக சீன அதிபர் ஆமோதித்திருக்கிறார்.

இந்தச் சந்திப்பில் பொருளாதாரமும் முக்கிய இடத்தை வகித்தது. இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகப் பற்றுவரவில் சீனா ஏற்றுமதி செய்வது அதிகமாகவும் இறக்குமதி செய்துகொள்வது குறைவாக இருப்பதையும் சுமார் ரூ.1,75,000 கோடிக்குத் துண்டுவிழுவதையும் மோடி சுட்டிக்காட்டியிருக்கிறார். இதைச் சரிசெய்வதாக சீன அதிபர் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இந்தியாவில் புதிய சாலைகளை அமைக்கவும் அடித்தளக் கட்டமைப்புகளை ஏற்படுத்தவும் சீனா முதலீடு செய்யலாம் என்று யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஆசிய நாடுகளில் அடித்தளக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காகத் தொடங்கப்படவுள்ள புதிய வங்கிக்கு இந்தியா தொடக்க கால உறுப்பினராகவும், அதன் நிறுவனர்களில் ஒருவராகவும் இருக்க வேண்டும் என்றும் அழைத்திருக்கிறார் சீன அதிபர். மேலும், 2001-ல் ஆரம்பிக்கப்பட்ட -ஷாங்காய் கூட்டுறவு நிறுவனம் என்ற அமைப்பில் இந்தியா சேர்ந்துகொள்ள வேண்டும் என்று ஜின்பிங் கோரிக்கை விடுத்திருக்கிறார். இந்தியாவும் சீனாவும் இந்த அளவுக்கு நெருங்கிவந்திருப்பது இந்த மாநாட்டுக்குக் கிடைத்த பெரும் வெற்றி என்றே சொல்ல வேண்டும்!

இரு பெரும் நாடுகளான சீனாவும் இந்தியாவும் பரஸ்பரம் பொருளாதார ஒத்துழைப்பை வளர்த்துக்கொண்டு சமரசத்தை ஏற்படுத்திக் கொண்டால், ஆசியக் கண்டத்துக்குப் பெரும் நிம்மதி ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே, அமைதியான ஆசியா என்ற இலக்கை நோக்கிய சிறு காலடியாக இந்தப் பேச்சுவார்த்தை அமையுமென்றால், நிச்சயம் நாம் அதை வரவேற்கலாம்.

# யாழ்.சமுதாயமும் இரண்டாம் மொழி சிங்களமும்

நர்மதா திலகராஜன்,
வவுனியா

மும்மொழித் தீவாகிய இலங்கையில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகள் பயன்படுத்தப்பட்டு வருவதைக் காணலாம். இவற்றுள் தாய்மொழி அந்தஸ்தைப் பெற்று மொழிகளாகத் தமிழ் மற்றும் சிங்கள மொழிகள் திகழ்கின்றன. இந்த இரண்டு மொழிகளைப் பேசும் சமுதாயங்களது இணைப்பு மொழியாக ஆங்கிலம் காணப்படுகின்றது. இலங்கையின் யாப்பில் 3 ஆவது அத்தியாயத்தில் இடம் பெறுகின்ற மொழி எனும் பிரிவானது முதலில் அரச கரும மொழி என்ற அந்தஸ்தை வழங்கியது பெரும்பான்மை மொழியாகிய சிங்கள மொழிக்கேயாகும். இதன் பின் வந்த 1978 ஆம் ஆண்டு யாப்பின் வாயிலாகவே தமிழ் மொழியும் அரசகரும மொழி என்ற நிரந்தர அடையாளத்தைப் பெற்றுக்கொண்டது எனலாம். தமிழானது திராவிட மொழிக் குடும்பத்தையும், சிங்களமானது ஆரிய மொழிக் குடும்பத்தினையும், ஆங்கிலமானது இந்தோ - ஐரோப்பிய மொழிக் குடும்பத்தையும் சார்ந்தவையாகும். நம் நாடு இத்தகைய வேறுபட்ட மொழிக் குடும்ப மொழிகளது அறிவினைப் பெற்று மும்மொழிச் சமுதாயமாகத் திகழ்கின்றமை பெருமைக்குரிய விடயமாகும்.

இலங்கையில் தமிழ் பேசப்படும் பிரதான பகுதிகளாகக் கிழக்கு மற்றும் வடமாகாணங்களும் மலையகமும் காணப்படுகின்றன. இதிலும் தூய தமிழைக் காத்து சிறப்பித்து வரும் ஒரு தலைசிறந்த மாவட்டமாக யாழ்ப்பாணம் நோக்கப்படுகின்றது. இங்கு ஆங்கில மொழி அறிவு ஆரம்ப காலங்களில் இருந்தே காணப்பட்ட போதும் பிற்பட்ட காலத்திலேயே சிங்கள மொழியின் செல்வாக்குக்கு உட்பட்டதெனலாம். கி.பி 5ஆம் நூற்றாண்டில் ரஜரட்ட அரசின் செல்வாக்கின் காரணமாக சிங்கள மொழியானது. சிறிய எண்ணிக்கையான சிங்களவரே இங்கு காணப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி சிங்கள மொழி யாழ்ப்பாணத்தில் அதிக செல்வாக்கை ஆரம்ப காலத்தில் பெறவில்லை எனக் கூறுவதில் தவறில்லை. போர்க் காலத்தில் சிங்கள மொழியின் ஊடுருவல் அதிகம் இங்கு காணப்படாத போதும் பிற்பட்ட காலத்தில் அதன் தாக்கம் அதிகரித்துச் செல்வதை எம்மால் நேரடியாக அவதானிக்க முடிகின்றது.

எந்தவொரு தேசத்தின் குடிமகனுக்கும் தன் தாய்மொழி வாயிலாகவே எண்ணங்களை வெளியிடவும் பிறர் எண்ணங்களைப் புரிந்து கொள்ளவும் உலக அறிவு வளத்தைப் பெறவும் முடியும். இது எந்தவொரு தேசிய இனத்துக்குமான இயற்கை நீதியும், சமூக நீதியுமாகும். இதுவரை காலம் தம் தாய் மொழியாகிய தமிழ் மொழியில் தம் உரிமைகளை அனுபவித்த யாழ்.மக்கள் இன்று கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல், பொருளாதாரம், சமுதாயத் தேவை, தொழில்நுட்பம் எனப் பல தேவைகளுக்கும் சிங்களமொழியறிவுத் தேவையை வேண்டி நிற்கின்றனர். இது மட்டுமன்றி தமது தேவைகளுக்காக யாழ். வரும் சிங்களவர்கள் கூட இந்த மொழித் தேவைக்கான பிரதான காரணமாக விளங்குகின்றனர். போர் ஓய்ந்த பின்னர் அதிகளவான சிங்கள மொழிபேசும் பல்கலைக்கழக மாணவர்கள் யாழ்ப்பாணத்தினுள் நுழைந்தனர். பெரிய இடைவெளிக்குப் பின்னர் சிங்கள மொழிச் சமுதாயத்துக்கு முகங்கொடுத்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமன்றி முழுச் சமுதாயத்தினரும் சில காலம் திண்டாடினர். ஆங்கில மொழியறிவு இருவர்க்கத்தினரில் பலருக்குப் போதுமானதாகக் காணப்படாமையும் இந்த நிலைமைக்கு ஒரு காரணமாகியது. சிங்கள மொழிச் சமுதாயத்தின் தொடர்பின்றி இருந்த இந்த மக்களுக்கு இந்த மொழியறிவு இன்மை ஒரு பெருங்குறைபாடாகத் தொடங்கியது. பல்கலைக்கழக நட்பு வட்டாரத்தின் மூலம் சிலர் சிங்கள மொழி அறிவைப் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். அரசினால் குடியேற்றப்பட்டு வரும் சிங்களக் குடும்பங்கள் காரணமாகவும் இந்த மொழி யாழ்.சமுதாயத்தினுள் நுழையக் காணலாம். தற்போது ஒரே சமுதாயத்தினுள் இந்த இரு மொழி பேசும் மக்கள் வாழ்வதால் இங்குள்ள மக்களது சமுதாயத் தொடர்புதிறம்பட அமையயாழ்.மக்களிடையேசிங் கள மொழிப் பயன்பாடு தேவைப்படக் காணலாம்.

யாழ்ப்பாணத்துள் மட்டும் முடங்கிக் கிடந்த பொருளாதாரம் தற்போது விரிசலடைந்துள்ளது. யாழ்.மக்கள் பிற இடங்களுக்குச் சென்று பொருள்களைக் கொள்வனவு செய்யவும் விற்கவும் சிங்கள மொழியானது தேவைப்படுகின்றது. அது மட்டுமன்றி யாழ்.வந்து வியாபாரம் செய்யும் சிங்களவர்களது தொகையும் அதிகரித்த வண்ணமே உள்ளது. நம்மவர்களும் அவர்களது இலாபகரமான வியாபார நுட்பத்தை விரும்பி அவர்களது கடைகளில் கூட்டங் கூட்டமாகச் சென்று கொள்வனவு செய்வதைக் காணலாம். இதன்போது இடம்பெறும் மொழிப் பரிமாற் றங்கள் வாயிலாகவும் சிங்கள மொழி நம் சமுதாயத்தினரால் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

சில வருடங்களுக்கு முன்பு நமது பிரதேசங்களில் காணப்பட்ட பெயர்ப் பலகைகள் எந்த மொழிகளில் எழுதப்பட்டிருந்தன? அவை தமிழிலும் மற்றும் ஆங்கிலத்திலுமே காணப்பட்டன. இன்று அனேகமாக அந்தப் பலகைகளில் சிங்கள மொழி சேர்க்கப்பட்டுள்ளது. இந்த மொழியின் சேர்ப்புக்கு முதல் காரணம் சிங்கள மொழிச் சமுதாயத்தினரின் யாழ். வருகையே ஆகும்.

கல்வி என்ற வகையில் நோக்கின் 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையின் வாயிலாக மாணவர்களுக்கு இரண்டாம் மொழி சிங்கள அறிவு கற்பிக்கப்படுகின்றது. பின்பு 6 தொடக்கம் 11ஆம் தரம்வரை சிங்கள மொழி ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகின்றது. இதில் 10,11ஆம் தரங்களில் விருப்பத்துக்குரிய பாடமாகவே நோக்கப்படுகின்றது. பாடசாலைகளில் வழங்கப்படும் சிங்கள மொழிப் புத்தகங்களை மொழியின் அடிப்படை அறிவின்றி விளங்கிக் கொள்ள முடியாத காரணத்தாலும் சமுதாயத் தேவையின் காரணத்தினாலும் பலர் இந்த மொழி அறிவைப் பெற பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்கின்றனர். பாடசாலைகளில் சிங்கள மொழி கற்பிக்கப்படினும் 2012 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மும்மொழித் திட்டத்தின் பயனாக இன்று கட்டாயக் கல்வியாக பாடசாலைகளில் கற்பிக்கப்படக் காணலாம். இந்தச் சமுதாயத்தில் சிங்கள மொழியின் தாக்கத்துக்கு அந்த மொழிக் கற்கை நெறிகளுக்கு நாம் செலுத்தும் அதிக தொகையிலான கட்டணங்களே சான்றாகும்.

யாழ்.பல்கலைக்கழகத்தை நோக்கின் அங்கு கலைப்பிரிவில் ஒரு துறையாக மொழி யியல் கற்பிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கற்கை நெறியில் சிங்கள மொழி ஒரு கட்டாய மேலதிக பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது. அத்துடன் மொழியியலின் பிரதான பாடங்களி லும் சிங்கள மொழியானது தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுடன் ஒப்பிட்டு நோக்கப்படக் காணலாம். இதன் மூலம் மொழியறிவைப் பெற்று பல மாணவர்கள் வேலைவாய்ப்புக்களைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. போரின் போது சிங்கள சமுதாயத்தின் தொடர்பற்ற சந்தர்ப்பத்திலும் மற்றும் அந்த மொழிக்கான பயன்பாட்டுச் சூழல் ஒன்று அற்ற நிலையிலும் தாம் கற்ற மொழியறிவை தமிழ் மாணவர்களுக்கு அவர்களின் எதிர்கால தேவை கருதி யாழ்.சமுதாயத்தினர் என்ற வகையில் சிங்களமொழி அறிவினை வழங்கியது. இந்த மொழியியல்துறை என்பதை பெருமையுடன் கூறவேண்டும். மேலும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட மொழிபெயர்ப்புத் துறையும் இந்த மொழியறிவினை சமுதாயத்துக்கு வழங்கும் என்பதில் ஐயமில்லை. தமிழ் அரச சேவையில் ஈடுபடும் ஊழியர்கள் கட்டாயம் தனது சேவைக் காலத்தில் குறிப்பிட்ட வருடங்களுள் இரண்டாவது மொழிப் பரீட்சை யில் சித்திபெற வேண்டும் என அரசால் கொள்கை ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஊழியர்களது மாத வருமானத்தில் குறிப்பிட்டதொரு அதிகரிப்பையும் அரசு வழங்கி வருகின்றது. அத்துடன் இந்த ஊழியர்களுக்கான மொழி வகுப்புக்கள் தொடர்பான ஒழுங்குகளையும் மேற்கொண்டு வருகின்றது. அதன் வாயிலாகவும் சிங்கள மொழி யாழ். சமுதாயத் தில் செல்வாக்குச் செலுத்தக் காணலாம். இத்தகைய சூழலில் யாழ்.சமுதாயத்தினருக்கு சிங்கள மொழியறிவின் தேவை அதிகரித்துக் கொண்டே செல்லக் காணலாம். குறிப்பாக யாழ்.மக்களில் பலர் அன்றாடம் வேலை வாய்ப்புக்களைத் தேடி வெளி சமுதாயத்தினுள் நுழைகின்றனர். நம் நாட்டு மும் மொழிச் சூழல் ஆதலால் அத்தகைய சூழலில் வேலை செய்வதற்கான நபர்களை தேர்ந்தெடுக்கும் நேர்காணல்களில் அதிகம் மொழியறிவு எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய நிலையில் பல திறமையாளர்கள் சிங்கள மொழி அறிவின்மையால் தமது தொழில் வாய்ப்புக்களை இழக்கின்ற சந்தர்ப்பங்கள் கூட இன்று அதிகம். இன்று கல்வியறிவு இல்லாவிடினும் இணையத்தை பாவனை செய்கின்ற திறன் அதிகமானவர்களிடம் காணப்படுகின்றது. தமிழ் மொழி இணையத்தளங்கள் பல காணப்படுவதால் மொழி என்பது பெரிய சவாலாகக் காணப்படவில்லை. நம் சமுதாயத்தவர் அதிகம் தமிழ், ஆங்கில பத்திரிகைகள் மற்றும் இணையதளங்களையே பார்வையிடுகின்றனர். எனினும், இவற்றில் இடம்பெறாத பல புதிய விடயங்கள் சிங்கள பத்திரிகைகள் மற்றும் இணையத்தளங்களில் காணப்படுகின்றன. உதாரணமாக வேலை வாய்ப்புக்கள் தொடர்பான வேறுபட்ட விளம்பரங்களைக் குறிப்பிடலாம். நமக்கும் இரண்டாம் மொழி அறிவு இருப்பின் நாமும் இதன் மூலம் பயனடையலாம்.

பெரும்பாலும் நாட்டின் தென் பகுதியிலேயே தொழில்நுட்பம் சார்ந்த அதிக அளவிலான கற்கை நெறிகள் கற்பிக்கப்படுகின்றன. இந்தக் கற்றல், கற்பித்தல்களில் அனேகம் சிங்கள விரிவுரையாளரும் சிங்கள மாணவர்களும் இடம்பெறுவதால் விரிவுரைகள் ஆங்கிலத்தில் இடம்பெறினும் சிங்கள மாணவர்கள் தமது சந்தேகங்களை சிங்கள மொழியில் கேட்டுத் தீர்த்துக் கொள்வர். எனினும் நமது யாழ். சமுதாயத்தினருக்கு அங்கு அத்தகையதொரு சந்தர்ப்பம் பெரும்பாலும் இல்லாது போகின்றது. அங்குள்ள விரிவுரையாளர்களுக்கு தமிழ் தெரியாத பட்சத்தில் நாம் அவர்களைக் குறை கூறவும் இயலாத நிலை காணப்படுகிறது. நமக்கான 2 ஆம் மொழி அறிவை வளர்ப்பதன் மூலம் நமக்குப் பின்வரும் சமுதாயத்துக்கு நாம் தெளிவான கற்பித்தலை வழங்க முன்வர வேண்டும். மேலும் நம் சமுதாயத்தில் மட்டுமன்றி வெளிச் சமுதாயத்திலும் நம் தேவைகளுக்கு இந்த 2 ஆம் மொழி அறிவு அவசியம் என்பதை உணர்ந்து அதனைக் கற்றல் வேண்டும்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: எந்த வேலையையும் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். உடன் பணி செய்வோரால் இருந்து வந்த காரியத் தடை நீங்கும். மனோ தைரியம் அதிகரிக்கும். மனதில் இருந்த குழப்பம் நீங்கி திருப்தி நிலவும். பணவரவு எதிர்பார்த்தபடி வந்து சேரும்.

**இடபம்**: பயணங்கள் செல்ல நேரிடலாம். வாக்கு வன்மையால் எடுத்த காரியத்தை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பணியாள்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும்.

**மிதுனம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவர்.

**கடகம்**: குடும்பத்தில் இருந்த மனவருத்தம் நீங்கும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் நிலவி வந்து இருக்கும் போட்டிகள் நீங்கும்.

**சிங்கம்**: மனக்குழப்பம் நீங்கும். எந்த சூழ்நிலையிலும் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியத்தை சாதித்துக் கொள்வீர்கள். தடைப்பட்டு வந்த காரியங்கள் தடை நீங்கி சாதகமாக நடைபெற்று முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**கன்னி**: உடல் நலம் சீரடையும். மற்றவர்களுடன் இருந்த மன வருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக நடக்கும்.

**துலாம்**: உத்தியோகத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். வீண் அலைச்சல் குறையும். மற்றவர்கள் மூலம் உதவி கிடைக்கும். வாழ்க்கையில் சந்தோஷம் அதிகரிக்கும். துக்கமும், துன்பமும் நீங்கும்.

**விருச்சிகம்**: சுப காரியங்களில் இருந்த தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். எதிர்கால தேவைகளுக்கு சேமித்து வைக்க ஆர்வம் உண்டாகும். எதிர்கால கல்வி தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். திறமை வெளிப்படும். மனக் கவலை அகலும்.

**தனுசு**: எப்போதும் எதைப் பற்றியாவது சிந்தித்துக் கொண்டே இருப்பீர்கள். குடும்பத்தில் நிம்மதியும், சுகமும் அதிகமாகும். பலவகையிலும் பிறர் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். யாருக்கும் வாக்குறுதிகள் கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.

**மகரம்**: தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களுக்காக பொறுப்புகள் ஏற்கும்போது மிகவும் கவனமாக இருப்பது வீண்பழி ஏற்படாமல் தடுக்கப்படும். அனுபவப்பூர்வமான அறிவுதிறன் கூடும்.

**கும்பம்**: குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நன்மை தரும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். மற்றவர்கள் உதவி கிடைப்பதன் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். மிகவும் எச்சரிக்கையாகவும், கவனமாகவும் இருப்பது நல்லது.

**மீனம்**: உத்தியோகத்தில் முன்னேற்றம் காண அனுபவபூர்வமான அறிவு கைகொடுக்கும். வீண் அலைச்சல் குறையும். காரிய தடை நீங்கும். மற்றவர்கள் கூறும் குறைகளை பற்றி கவலைப்படாமல் உங்களுடைய காரியத்தைச் செய்வது நல்லது.

## நாளை

**ஆடி-06 செவ்வாய்க்கிழமை | 22.07.2014**

திதி: ஏகாதசி மு.இ.11.45 வரை
நட்சத்திரம்: கார்த்திகை மு.ப.09.44 வரை
சுபநேரம்: 10.31-12.01 வரை
இராகுகாலம்: 03.01-04.31 வரை
ஏகாதசி விரதம்

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### உயிர்களில் சிறந்தது மனிதனே!


உயிர்கள் அனைத்திலும் உச்ச நிலையில் இருப்பவன் மனிதன்; இந்த மண்ணுலகமே பெரிய உலகம் ஆகும். மனிதனை விட உயர்ந்த நிலையில் இருக்கும் ஒரு கடவுளை எம்மால் கற்பனைசெய்ய முடியாது. கடவுள் மனிதனே, மனிதனே கடவுள். முன்னேற்றம் அடைந்து உயர் நிலைக்குப் போய், மேலானதை நாம் காணும் போது மனம், உடல், கற்பனை ஆகியவற்றைக் கடந்து வியாவகாரிக நிலைக்கு அப்பால் போய் விடுகி றோம். சார்பற்றத் தனி நிலையை நாம் எய்தும் போது, நாம் இந்த உலகில் இருப்பதில்லை. எம்மால் தெரிந்து கொள்ளக் கூடிய உலகில் உச்ச நிலையில் இருப்பவன் மனிதனே. விலங்குகளைப் பற்றி எமக்குத் தெரிவது எல்லாம் ஒப்பு உவமை மூலம்தான். எமது உணர்ச்சிகளையும் செயலையும் கொண்டே அவற்றை நாம் மதிப்பிடுகிறோம்.

அறிவின் மொத்த அளவு எப்போதும் ஒரே அளவில் தான் இருக்கிறது. அது சில வேளைகளில் அதிகமாகவும் சில வேளைகளில் குறைவாகவும் வெளிப்படுகிறது. அது எமக்குள்ளேயே இருக்கிறது. அங்கு மட்டுமே அதைக் காண முடியும்.

கவிதை, ஓவியம், இசை ஆகியவை சொல், நிறம், ஓசை மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

பாவத்தின் விளைவுகளை யார் விரைவில் அனுபவிக்கிறார்களோ அவர்கள் பாக்கியவான்கள். அவர்களுடைய கணக்கு விரைவில் சரியாகி விடுகிறது! தீவினையின் பயன்களை யார் காலம் கடந்து அனுபவிக்கிறார்களோ, அவர்களின் நிலை பரிதாபகரமானது. கால தாமதத்தால் வினையின் கொடுமை அதிகமாகிறது!

## தன்னை உலகறிய வேண்டும் நடிகரின் விநோத ஆசை




கனடாவில் நடிகர் ஒருவர் தனது முகம், மண்டை மற்றும் உடம்பு முழுவதும் பச்சை குத்திக் கொண்டது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கனடாவைச் சேர்ந்த வின் லாஸ் (வயது -24) என்ற நடிகர் தனது முகம், மண்டை மற்றும் உடம்பு முழுவதும் வார்த்தைகளை பச்சை குத்திக் கொண்டுள்ளார்.

தனது 16 வயதில் ஏற்பட்டுள்ள இந்த ஆர்வம், தற்போது இவரை முகத்தில் மட்டும் 24 பச்சைகளைக் குத்தத் தூண்டியுள்ளது. பேனாவை வைத்து எழுதியுள்ளதுபோல தோற்றமளிக்கும் இந்த பச்சைகள் தனது புகழை பரப்ப உதவும் என அவர் நம்புகிறார்.

இதுகுறித்து வின் கூறுகையில்; தான் மக்களின் நடுவில் வித்தியாசமாக தெரிவதாகவும், அனைவரும் தன்னை கேள்வி கேட்பதாகவும் தெரிவித்துள்ளார்.


## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | 6 | | 3 | |
| | | 3 | 4 | 1 | | 2 | | 8 |
| | 6 | 8 | 3 | 2 | 9 | 4 | | |
| | 3 | | | | | | | |
| 1 | 8 | | 6 | | 2 | | 5 | 7 |
| | | | | | | | 2 | |
| | | 1 | 5 | 9 | 8 | 7 | 4 | |
| 6 | | | | 4 | 3 | 1 | | |
| | 4 | | 7 | | | | | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 8 | 5 | 4 | 9 | 6 | 2 | 1 |
| 2 | 9 | 6 | 7 | 8 | 1 | 5 | 3 | 4 |
| 1 | 5 | 4 | 2 | 3 | 6 | 9 | 8 | 7 |
| 4 | 7 | 3 | 8 | 9 | 5 | 2 | 1 | 6 |
| 8 | 2 | 5 | 1 | 6 | 4 | 7 | 9 | 3 |
| 6 | 1 | 9 | 3 | 7 | 2 | 8 | 4 | 5 |
| 3 | 6 | 1 | 9 | 2 | 7 | 4 | 5 | 8 |
| 9 | 8 | 7 | 4 | 5 | 3 | 1 | 6 | 2 |
| 5 | 4 | 2 | 6 | 1 | 8 | 3 | 7 | 9 |



அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 95 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்பட்ட ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய முன்றிலில் ஆரம்பமானது. (ற-23)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 21

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் 2ஆம் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

**யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.**

அவற்றில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு.

சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணிக்கும் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல்கணக்கில்வெற்றிபெற்றது.

செந்தமிழ் விளையாட்டுக்கழக அணிக்கும் செஞ்சுடர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் செந்தமிழ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ற-23)

## ஆவரங்கால் இந்து, இளவாலை மத்தி கரப்பந்தாட்டத்தில் சம்பியனாகின

யாழ்ப்பாணம், ஜூலை 21

மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் 'ஏ','பி' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் 'ஏ' பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியும், 'பி' பிரிவில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணியும் வெற்றி பெற்றுச் சம்பியனாகின.





நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மோகனதாஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற 'ஏ' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது. 5 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில்ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

சிறந்த வீரானாக ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி வீரன் ஜெனா தெரிவானார். தொடர் ஆட்ட நாயகனாக ஆவரங்கால் இந்து இளைஞர் விளை... கழக அணி வீரன் நி... னார். 'பி' பிரிவு... கான இறுதியாட்டத்தில் இள... வாலை மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழக அணி மோதியது. 5 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. சிறந்த வீரன், மற்றும் ஆட்ட நாயகனாக இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணி வீரன் பிறக்சன்தெரிவுசெய்யப்பட்டார். (ற-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 21

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இரண்டாம் சுற்று ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

5 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 21

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந் தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல் இரவு ஆட்டங்களாக இடம்பெற்று வருகின்றன. இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ற-23)



## பல்கலை வீர, வீராங்கனைகள் 117 பேருக்கு வர்ண விருதுகள்

### நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக உடற்கல்வி அலகால் நடத்தப்பட்ட வர்ண இரவுகள் நிகழ்வில் 117 விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்கு வர்ண விருதுகள் வழங்கப்பட்டன.

யாழ். பல்கலைக் கழக விளையாட்டு அவையும், உடற்கல்வி அலகும் இணைந்து நடத்திய வர்ண இரவுகள் நிகழ்வு நேற்றுமுன்தினம் பிற்பகல் 5 மணியளவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள திறந்த வெளிஅரங்கில் விளையாட்டு அவையின் தலைவர் சி.மயூரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரெட்ணமும் சிறப்பு விருந்தினராக தேசிய வலைப் பந்தாட்ட அணியின் முன்னாள் தலைவர் ஜெயந்தினி சோமசேகரம் டிசில்வாவும் கலந்து கொண்டனர்.

அத்துடன் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடத் தலைவர் பேராசிரியர் சற்குணராசா வவுனியா வளாக பணிப்பாளர் க.அருள்வேல், விளையாட்டு அவையின் ஆலோசகர் கலாநிதி பி.ஐங்கரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

பெருவிளையாட்டுக்கள், உள்ளக விளையாட்டுக்கள் மற்றும் தடகளப் போட்டிகளில் பிரகாசித்த வீர, வீராங்கனைகளுக்கு 2013 ஆம் ஆண்டுக்கான விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆண்கள் பிரிவில் 74 பேருக்கு வர்ண விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதில் 53 முழு வர்ண விருதுகளும் 21 அரை வர்ண விருதுகளும் அடங்கும்.

பெண்கள் பிரிவில் 43 பேருக்கு வர்ண விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதில் 33 முழு வர்ண விருதுகளும், 10 அரை வர்ண விருதுகளும் அடங்கும். (ற-86)

## உதைபந்தாட்டம் நாளை மறுதினம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

அரியாலை சனசமூக நிலையத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் நாளை மறுதினம் புதன்கிழமை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியும் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன. (ற-23)

# உலகக் கிண்ணத்தில் 11 புதிய சாதனைகள்




உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் ஜேர்மன் அணி வீரர் மிரோஸ்லவ் குளோஸ் தனது 16 ஆவது கோலை அடித்து புதிய சாதனை படைத்தமை தெரியும்.

ஆனால், 2014 உலகக் கிண்ண போட்டிகளின்போது நிகழ்த்தப்பட்ட ஒரே புதிய சாதனை இதுவல்ல. கின்னஸ் உலக சாதனை நூல் வெளியீட்டாளர்களின் தகவல்களின் படி இந்தத் தொடரில் நிகழ்த்தப்பட்ட சாதனைகளின் பலவற்றின் விவரம் வருமாறு:-

1) ஜேர்மன் வீரர் மிரோஸ்லவ் குளோஸ் 16 ஆவது கோலை அடித்து உலக கிண்ணப் போட்டிகளில் அதிக கோல்களை அடித்த வீரரானார்.

2) இந்தமுறை இறுதிப்போட்டியில் விளையாடிய ஜேர்மன் அணி, அதிக எண்ணிக்கை உலக கிண்ண இறுதிப்போட்டியில் (8) விளையாடிய அணியாக சாதனை படைத்தது.

3) பெல்ஜியம் அணியுடனான போட்டியின்போது, அமெரிக்க கோல் காப்பாளர் டிம் ஹோவார்ட் 16 தடவை கோல் புகாமல் பந்தை தடுத்தார். இதுவும் ஒரு புதிய சாதனையாகும்.

4) பிரேஸிலுடனான அரையிறுதியில் ஜேர்மனி 7:1 விகிதத்தில் வென்றது. உலகக் கிண்ண போட்டிகளை நடத்தும் நாடொன்று போட்டியொன்றில் அடைந்த மிகப்பெரிய தோல்வி 6 கோல் வித்தியாசம் இது.

5) கொலம்பிய கோல் காப்பாளர் பரிட் மொன்ட்ரகன் 43 வயதில் போட்டியில் பங்குபற்றினார். உலக கிண்ணப் போட்டியொன்றில் விளையாடிய மிக வயதான வீரர் இவர்.

6) இத்தொடரில் 171 கோல்கள் அடிக்கப்பட்டன. 1998 ஆம் ஆண்டின் உலகக் கிண்ண சாதனை இந்தமுறை சமப்படுத்தப்பட்டது.

7) உலகக் கிண்ண வரலாற்றில் தமது 224 ஆவது கோலை அடித்து ஜேர்மனி மற்றொரு சாதனை படைத்தது.

8) 20 ஆவது தடவையாக உலகக் கிண்ண இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றதன் மூலம் பிரேஸில் அணி சாதனை படைத்தது.

9) பிரேஸிலுடனான அரை இறுதியில் ஜேர்மனியின் டொனி குரூஸ், மிகக் குறுகிய நேரத்தில் (69 விநாடிகள்) இரு கோல்களை அடித்து சாதனை படைத்தார்.

10) ஜேர்மனி வீரர் மிரஸ்லவ் குளோஸ் இந்தமுறை கோல்களை அடித்ததன் மூலம், 4 உலகக்கிண்ண சுற்றுப்போட்டிகளில் கோல் அடித்த வீரரானார். ஜேர்மனியின் ஊவ் சீலர், பிரேஸின் பேலே ஆகியோரின் சாதனையை குளோஸ் சமப்படுத்தியுள்ளார்.

11) நெதர்லாந்து அணி இந்த முறை தனது குழாமிலுள்ள 23 வீரர்களையும் போட்டிகளில் பயன்படுத்தியது. இதுவும் ஒரு புதிய சாதனையாகும். (த)

## உலகக் கிண்ண இறுதிப்போட்டி முடிவு முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டதா?

நடைபெற்று முடிந்த உலகக் கிண்ண கால்பந்துப் போட்டிகளின் முடிவுகளை பிபா கொரப்சன் (பிபா ஊழல்) என்ற டுவிட்டர் பக்கத்தில் இறுதிப் போட்டிக்கு முன்தினம் வெளியிட்டதால் சமூக வலைத்தளங்களில் பெரும் பரபரப்புக் கிளம்பின. கோட்ஸே கோல் அடிப்பார். மேலதிக நேரத்தின் இரண்டாவது பாதியில் கோல் போடப்படும், ஜேர்மனி 1:0 என வெற்றி பெறும் என போட்டியின் முடிவுகள் குறித்து இறுதிப் போட்டிக்கு முன் தினமே பிபா கொரப்சன் டுவிட்டரில் பதிவிடப்பட்டிருந்தமை பெரும் ஆச்சரியமாக இருந்தது.

இதற்கிடையில் தீவிரமாக பரவிய 'பிபா கொரப்சன்' பக்கத்தை 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பின் தொடர்ந்ததுடன் 'பிபா கொரப்சன்' வெளியிட்ட தகவல்களை பல்லாயிரக்கணக்கானோர் பகிர ஆரம்பித்துவிட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் குறித்த டுவிட்டர் பக்கத்தில் வெளியான முடிவுகளே போலியானது இறுதிப் போட்டி முடிவுகள் தீர்மானிகப்பட்டதொன்றல்ல என்பதை 'ஸ்க்ரீன் ஷொட்' மூலம் பின்னர் பலரும் விளக்கியுள்ளனர்.

அதாவது 12ஆம் திகதி அன்று மேற்படி டுவிட்டரில் இறுதிப் போட்டி முடிவுகள் எவ்வாறு அமையலாம் என்ற அனைத்து தகவல்களை (எதிர்பார்க்கைகள்) பதிவிட்டுள்ளனர்.

பின்னர் 13 திகதி நடைபெற்ற இறுதிப் போட்டியின் முடிவுகளுடன் தாம் வெளியிட்ட 'டுவிட்கள்' (பதிவு கள்) எவை பொருந்தியதோ அவற்றை விட்டு விட்டு ஏனையவற்றை அழித்துள்ளனர்.

**இதனால் புதிதாக 'பிபா கொரப்சன்' டுவிட்டர் பக்கத்துக்கு வந்தவர்களுக்கு ஆச்சரியமும், அதிர்ச்சியும் பிரமை ஏற்பட்டுள்ளது. அதுவே அந்தச்செய்தி அதிகளவில் பகிரப்பட்டு பரபரப்பை ஏற்படுத்தக் காரணமாகியுள்ளது. இதேவேளை 'பிபா கொரப்சன்' என்ற தனது பெயரை டுவிட்டரில் 'Reign of Football' என பெயர் மாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.** (த)



## ரியல் மட்ரிட்டில் இணைந்த குரூஸ்

உலகக்கிண்ண அதிரடி இரட்டைக் கோல் வீரர் ஜேர்மனியின் டோனி குரூஸ் ரியல் மட்ரிட் அணிக்காக 6 ஆண்டுகாலம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

பேயர்ன் மியூனிச் அணிக்காக விளையாடி வந்த நிலையிலேயே அவருக்கு இந்தப் புதிய ஒப்பந்தம் கிடைத்துள்ளது.

பிரேஸிலில் நடைபெற்று முடிந்துள்ள உலகக்கிண்ண தொடரில் பிரேஸில் அணிக்கெதிரான அரையிறுதிப்போட்டியில் 24 வயதான குரூஸ் இரு நிமிட இடைவெளியில் அடுத்தடுத்து இரு கோல்களைப்போட்டு அதிரவைத்தார். அந்தப் போட்டியில் ஜேர்மனி பிரேஸிலை 7:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டிருந்தது.

இந்நிலையிலேயே உலகக் கிண்ண தொடரின் குரூஸின் சிறப்பான திறமை வெளிப்பாடு காரணமாக ரியல் மெட்ரிட் அணியிலிருந்து அவருக்கு அழைப்பு வந்துள்ளது. (த)

## கவாஸ்கர் விடுவிப்பு

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் இடைக் காலத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த சுனில் கவாஸ்கரை, அந்தப்பதவியிலிருந்து உச்ச நீதிமன்றம் விடுவித்தது. இந்த உத்தரவு கடந்த வெள்ளிக் கிழமை பிறப்பிக்கப்பட்டது. ஐ.பி.எல். சூதாட்ட குற்றச்சாட்டு தொடர்பாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் பதவியிலிருந்து விலகுமாறு சீனிவாசனை உச்ச நீதிமன்றம் கேட்டுக் கொண்டது. தொடர்ந்து, இந்திய கிரிக் கெட் கட்டுப்பாட்டு சபையின் விவகாரங்களைக் கவனிக்கும் வகையிலும்- ஐ.பி.எல். போட்டியை நடத்தவும் இடைக்காலத் தலைவராக கவாஸ்கரை கடந்த மார்ச் மாதம் நீதிமன்றம் நியமித்தது.

ஏழாவது ஐ.பி.எல். போட்டி முடிவடைந்ததைத் தொடர்ந்து, தனது பதவி குறித்து விளக்கம் அளிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து, உச்ச நீதிமன்றத்துக்கு கவாஸ்கர் கடந்த வாரம் கடிதம் எழுதியிருந்தார். இந்நிலையில், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் இடைக்காலத் தலைவர் பதவியிலிருந்து கவாஸ்கர் விடுவிக்கப்படுகிறார்' என உச்ச நீதிமன்ற நீதிபதி டி.எஸ். தாகூர் தலைமையிலான அமர்வு உத்தரவு பிறப்பித்தது. (த)

## தங்க மழையில் நனைந்த பெக்காம்





லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் சாய்ஸ் ஸ்போர்ட்ஸ் விருதுகள் வழங்கும் விழாவுக்கு விருந்தினராக சென்ற பெக்காமை தங்க முலாமில் நனைய விட்டு வரவேற்றனர். சமீபத்தில் உலகக்கிண்ண தொடரின் இறுதிப் போட்டியான ஜேர்மனி- ஆர்ஜென்ரீனா அணிகள் மோதிய போட்டியை காணச் சென்றார் பெக்காம். இந்நிலையில் சில தினங்களுக்கு முன் இந்த விருதுகள் வழங்கும் விழாவில் தனது மகன்களுடன் கலந்து கொண்டார். இந்த விழாவில் இங்கிலாந்து அணியின் முன்னாள் ஜாம்பவான் டேவிட் பெக்காம், அவரது மகன்களான குரூஸ் மற்றும் ரோமியோ ஆகியோரை மேடைக்கு அழைத்தனர். பின்னர் அவர் உதைபந்து விளையாட்டில் தங்கச் சப்பாத்துகளை வாங்கி குவித்ததை நினைவுபடுத்தும் வகையில் திடீரென யாரும் எதிர்பாராத நேரத்தில் தங்க முலாமை அவர் மீது பாய்ச்சி அடித்து அவருக்கு அதிர்ச்சி அளித்தனர். (த)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி. தனுஜா செல்வநாதன் அவர்களின் அன்புக் கணவர்

## செல்லையா செல்வநாதன்

19.07.2014 இறைபதமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைகின்றோம்.

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் ஊழியர் நலன்புரிகழகம்
யாழ்.சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.
சங்கானை

# மரண அறிவித்தல்

## பரமேஸ்வரி சிவசிதம்பரம்



காரைநகர். விளானையைப் பிறப்பிடமாகவும் தங்கோடை காரைநகரை வசிப்பிடமாகவும் இல.30/6 .3 ஆம் ஒழுங்கை கோயில் வீதி. குருமன்காடு வவுனியாவை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி சிவசிதம்பரம் நேற்று(20.07.2014) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் சிவசிதம்பரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - காசுவதிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற விநாயகசிவம் பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் சந்திரன் (இ.போ.ச. வவுனியா) அன்புத் தாயும் வசந்தியின் (ஆசிரியை. வ/விபுலானந்தா கல்லூரி. பண்டாரிக்குளம் வவுனியா) மாமியும் லவன். தேனுகா. லோஜிகா ஆகியோரின் பேர்த்தியும் உமாதேவி. பூரணம். சரஸ்வதி. தனாலசுந்தரம். புஸ்ப ராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவஞானவதி. பராசக்தி. சிவகௌரியம்மா. கற்பகவதி. சதாசிவம் (பண்டிதர்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2014) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று. பூதவுடல் தச்சனாங்குளம் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


0778730687

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## கந்தையா கிருபாமூர்த்தி

(கிருபா மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனை நிலையம், சங்கானை)



மயிலங்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கிருபாமூர்த்தி நேற்று (20.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் நளாயினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் தர்சிகா, சஞ்சிகா, தேதுகா, சர்பிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கரத்தினம், சிவனேஸ்வரி, பரமேஸ்வரி, பாலசிங்கம் (அபிராமி வேளாண் களஞ்சியம்), ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பூங்குயில் (கனடா) என்பவரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2014) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி இலங்கை வங்கி முன்பாக,
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.

(சி-15484)

தகவல்:
குடும்பத்தினர்.

# தென்னாபிரிக்க அணி வெற்றி

இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான தொடரின் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா அணி 153 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. ஆட்டத்தின் ஐந்தாம் நாளான நேற்று 9 இலக்குகள் மீதமிருந்த நிலையில் வெற்றிக்கு மேலதிகமாக 260 ஓட்டங்களையே பெறவேண்டியிருந்த இலங்கை அணி தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் இலக்குகளை அடுத்தடுத்து இழந்ததால் தோல்வியைச் சந்தித்தது.

முதலாவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி 9 இலக்குகள் இழப்பிற்கு 455 ஓட்டங்களையும்,இலங்கை அணி 292 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டன. இரண்டாவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி 6இலக்குகள் இழப்பிற்கு 206 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொள்ள இலங்கை அணிக்கு வெற்றி இலக்காக 370 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

4 ஆம் நாள் ஆட்ட நிறைவின் போது ஒரு இலக்கை மாத்திரம் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றிருந்த இலங்கை அணிக்கு 5 ஆம் நாளான நேற்று வெற்றிக்காக மேலும் 260 ஓட்டங்களே தேவைப்பட்டிருந்தன. 5 ஆம் நாள் ஆட்டம் ஆரம்பமாகி மேலும் 8 ஓட்டங்களை மாத்திரம் அணி சேர்த்திருந்த போது கௌசல் சில்வா 38 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வந்த மஹேல ஜெயவர்த்தன 10 ஓட்டங்களை மட்டும் பெற்று ஏமாற்றினார். நிதானமாக ஆடிக்கொண்டிருந்த சங்கக்காரவும் 76 ஓட்டங்களுடன் வெளியேற இலங்கை அணியின் வெற்றிக் கனவு தகர்ந்தது.

தொடர்ந்து வந்த வீரர்களும் சொதப்ப சீரான இடைவெளிகளில் இலக்குகளை இழந்து இலங்கை அணிஇறுதியில்சகலஇலக்குகளையும் இழந்து 216 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 153 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக் கொண்டது. தனித்து நின்று போராடிய அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணியின் ஸ்ரெய்ன், மோர்னி மோர்க்கல் தலா 4 இலக்குகளையும், டுமினி 2 இலக்குக ளை யும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக மொத்தமாக 9 இலக்கு களைக் கைப்பற்றிய தென்னாபிரிக்க அணியின் ஸ்ரெய்ன் தெரிவானார். இரண்டு போட்டிகளைக் கொண்ட தொடரின் முதலாவது போட்டியைக் கைப்பற்றிக் கொண்டதன் மூலம் தென்னாபிரிக்க அணி 1-0 என்ற ரீதியில் முன் னிலை வகிக்கின்றது. இத்தொடரின் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்பு எஸ். எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.


**பிரத்தியேக வகுப்புகள்**

O/L, A/L, ICT இணைந்த கணிதம் என்பன தனியாகவோ, குழுவாகவோ அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0775189259

**விற்பனைக்கு**

கிளைமொர் பம்மொடல் XI xxxx தொடர் இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக் குண்டு.

தொடர்புக்கு:- 0770878203


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சர்வதேச இந்துகுருமார் ஒன்றியத் தலைவரும் சித்தன்கேணி சிவன் கோயில் பிரதம குருவுமாகிய **“வித்யாசாகரம்” சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்களுக்கு**

யாழ். மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழுவினால் “ யாழ் விருது 2014 “வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையையிட்டு அவரை வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
ஸ்ரீகாந்தக்குருக்கள் குடும்பம்
குகதாஸ்சேஸ்வரசர்மா குடும்பம்
பிரபாகரக்குருக்கள் குடும்பம்.

# கூறுவிலை கோரல்

நாரந்தனை வடக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான கூறுவிலை கோரல் இறுதித் திகதி 25.07.2014 அன்று முடிவுறுகின்றது என்பதனை கட்டட நிர்மாண வேலை செய்பவர்களுக்கு அறியத்தருவதுடன் கீழ்க்குறிப்பிடும் மூலப் பொருள்களுக்கான கூறுவிலை கோரப்பட்டுள்ளது.

1) 3 நூல் கருங்கல்
2) 5 நூல் கருங்கல்
3) 3/4 இஞ்சி கருங்கல்
4) கண்டாவளை மணல்
5) பாலியாற்று மணல்

முடிவுத்திகதி - 25.07.2014

தொடர்புகளுக்கு
0777780479
0776054082
0773703914

சைவமகா சபை
நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

(50172)

# மரண அறிவித்தல்

## திருமதி மேரி றோசலீன் மரியநாயகம்



இளவாலையைப் பிறப்பிடமாகவும் பெரியவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி றோசலீன் மரியநாயகம் நேற்று (18.07.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.45 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலபிள்ளை - மரியம்மா தம்பதியரின் அன்பு மகளும் இன்னாசிமுத்து - விக்றோறியா பிள்ளை தம்பதிரின் மருமகளும் மரியநாயகத்தின் (மணி- சுதா பேக் ஹவுஸ்) அன்பு மனைவியும் எமில் (ராஜ் பேக் ஹவுஸ் பண்டத்தரிப்பு). நிமல் (அபி மிக்ஷர்,பண்டத்தரிப்பு), சுதா (யாழ்ப்பாணம்). டனி (ஆசிரியர். ஹென்றியரசர் கல்லூரி). ஜெனி (ஆசிரியர், பயிற்சிக்கலாசாலை. பலாலி). வினி (சுதா பேக் ஹவுஸ்). சைலு ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று 21.07.2014 இல் நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டமை தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு நாளை (22.07.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் பெரியவிளான் புனித யுவானியர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பெரியவிளான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியவிளான், இளவாலை,
தொ.பே.: 077 609 4479

தகவல்: குடும்பத்தினர்.


**வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை.**

வடமாகாணத்தின் பொதிகள் சேவை துறையின் முன்னோடிகள்



- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
- ஆகாய, கடல் மார்க்கமாக
- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
- வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்
- 3-4 நாட்களில் உலகின் எப்பாகத்திற்கும் குறித்த முகவரியில் ஒப்படைக்கின்றோம்.

இன்று நேற்று அல்ல
15 வருட அசைக்க முடியாத
நம்பிக்கையை வென்ற நாமம்

**அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்** இல.1, பிரவுண் வீதி, நாவலர் வீதிச்சந்தி, யாழ்ப்பாணம். Tel: 021 222 6113

## பட்டப்பகல் வேளை வீடு புகுந்து நகைகள் திருட்டு

சுன்னாகம், ஜூலை 21

சுன்னாகம் பழைய பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள ஒரு வீட்டில் பட்டப்பகல் வேளையில் ஜன்னலை உடைத்து உள்ளிறங்கிய திருடர்கள் சுமார் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் மற்றும் சிறுதொகை பணத்தையும் திருடிச் சென்ற சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் இடம் பெற்றுள்ளது.

நண்பகல் வேளையில் வீட்டுக்காரர்கள் அயலில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்று விட்டுத் திரும்பி வந்த வேளையில் வீடு உடைக்கப்பட்டு திருட்டு இடம்பெற்றுள்ளதைக் கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார்கள்.

இது சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-86)

## சாவகச்சேரி நகர சபைத் தலைவர் முதலமைச்சரால் கௌரவிப்பு



தென்மராட்சி, ஜூலை 21

சாவகச்சேரி நகரின் மத்தியில் சிறந்த வடிவமைப்புடன் பொன்விழா மண்டபத்தை அமைக்க பாடுபட்ட நகர சபைத் தலைவர் இ. தேவசகாயம்பிள்ளை சபையின் உறுப்பினர்கள் உத்தியோகத்தர்களால் கௌரவிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மண்டபத் திறப்பு விழா நிகழ்வில் சபையின் உறுப்பினர்கள் உத்தியோகத்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மலர் மாலை சூட்ட மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் நகர சபை தலைவருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (வ-9)

## வதிவிடச் செயலமர்வு

கரணவாய், ஜூலை 21

வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைச் சுகாதார மேம்பாடு தொடர்பான மூன்றுநாள் வதிவிடச் செயலமர்வு எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

செயலமர்வில் பாடசாலை சுகாதார மேம்பாடு தொடர்பாக பயிற்சி அளிக்கப்படவுள்ளது. எனவே இதில் ஆர்வமுடைய தரம் 10 இல் கல்வி கற்கும் இரு மாணவர்களை ஒவ்வொரு பாடசாலைகளையும் அனுப்பி வைக்குமாறும்-

வருகை தரும் மாணவர்கள் 3 தினங்களும் குறித்த பாடசாலையில் தங்கி நிற்பதற்கான ஆயத்தத்துடன் வருகை தருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விவரங்களை நாளை மறுதினத்துக்கு முன்னர் வலயத்தின் உடற்கல்விப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-108)

## நெஞ்சக் கதவை கொஞ்சம்........

### சும்மா கிடைப்பதை விடாதவர்கள்

ஓர் ஆலய அன்னதானத்தில் கலந்து கொண்ட பல்கலைக் கழக மாணவர்கள் ஐவர் 500 ரூபாத்தாள் ஒன்றை உண்டியலில் இட்டவாறு "குழையல் என்றாலும் நல்லாயிருந்தது, வயிறு புல்" என்றபடி வெளியேறினர். இதனைப் பார்த்துக் கொண்டு வந்த ஒருவர் "அன்னதானம் செய்யிறவை தங்கட பாவத்தைப் போக்கத்தானே செய்யினம். எத்தினை பேர் சாப்பிடுகினம் எண்டு கணக்குப் பார்க்காமல், இருப்பதை எல்லாம் வந்தவைக்கு வழிச்சுக் கொடுப்பதுதானாம் புண்ணியம்" என்றபடி கடலைக்காரியின் பக்கத்திலிருந்த கல்லில் குந்துகிறார். இரண்டு சொப்பிங் பைகளை ஒன்றாக்கி சாதத்தை அடைந்து கொண்டு வந்து அவர் அன்னதானத்துக்குப் பயன் கூறுகிறார். குழையல் சாதம் எந்த ஊருக்குப் பயணமாகி எத்தனை பேர் வயிறுகளை திருப்திப்படுத்தப் போகிறதோ?

சிரமதானம், இரத்ததானம், வித்தியாதானம், பூமிதானம் என்று அடுக்கிக் கொண்டே போனாலும் தானங்களில் சிறந்தது நிதானம் என்பர். "பதறாத காரியம் சிதறாது" என்பதும் இதனால் தானோ. 80 வயது முதியவர் 75 வயது மனைவியைக் கத்தியாலும் உலக்கையாலும் தாக்கினார் என்பது பத்திரிகைச் செய்தி. வாலிப வயதில் அவரது இந்த நிதானம் சமூகத்துக்கு எத்தனை பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்குமோ? நிதானம் என்பது எம்மால் இழக்கப்படும் ஒன்றாகிவிட "வாய் வாழ்த்தாவிடினும் வயிறு வாழ்த்தும்" என்பதை நலிந்தோரும் அல்லா தாரும் ஏற்றுக் கொண்டு விட இன்று, இங்கு அன்னதானம் முதலாமிடத்தைப் பெறுகிறது. ஒரு நாள் இரவில் மட்டும் பல்லாயிரம்பேர் தானம்பெற்று உண்டனராம். இலையில் போட்ட சோற்றில் பிள்ளை குட்டிகளின் முகம் தெரிய, பதுக்கி வைத்திருக்கும் சொப்பிங் பையில் அதனை அள்ளித்திணிப்பவர்களையும் நாளைக்கும் சேர்த்து இன்றைக்கு வயிற்றில் அடைய முடியாத ஆதங்கிகளையும் மட்டுமன்றி, குனிந்து சாப்பிடும்போது இடைஞ்சலாக இருக்கும் கழுத்துச் சங்கிலியை மேல்நோக்கி இழுப்பவர்களையும் "பசி வந்திடப் பத்தையும் பறக்க" விட வைக்கும் ஆளுமை மிக்கதா அன்னதானம்? சும்மா கிடைப்பதை ஏன் விடுவான் என்ற மனப்போக்குக் கொண்டோர் இன்னும் இன்னும் எங்கள் மத்தியில் உருவாகும் விதமாக வறுமை இவர்களைத் துரத்த ஆரம்பித்து விட்டதாக்கும்.

செல்வவேலாயுதம்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்

**அருந்தவம் தர்மராசா**



தோற்றம் : 17.11.1966

மறைவு : 21.06.2014

கடந்த 21.06.2014 இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய சபிண்டீகரணம் இன்று (21.07.2014) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி நுணாவில், சாவகச்சேரி. (43691)(7.6.3) குடும்பத்தினர்.

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தில் உதவி ஆசிரியர் நியமனம் வழங்கப்படாது பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி எடிசன் கல்லூரியில் இடம் பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளும் தொண்டர் ஆசிரியர்கள் 2011 ஆம் ஆண்டு ஆளுநரின் திட்டத்தின் கீழ் தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வுக்குத் தோற்றிய சான்றிதழ், மற்றும் கல்விச்சான்றிதழ் தொடர் சேவைக்குரிய கடிதம் ஆகியவற்றுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

## உரும்பிராயில் ஆயுள்வேத மருத்துவ சேவை

வலி.கிழக்கு பிரதேச சபையின் ஆயுள்வேத மருத்துவ சேவைகள் உரும்பிராயில் மீண்டும் நடைபெறுகிறது. இதன் பிரகாரம் செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாள்களில் உரும்பிராய் உப அலுவலகத்துக்கு அண்மையிலும் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் நீர்வேலி உப அலுவலகத்திலும் ஆயுள்வேத மருத்துவசேவை நடைபெற்று வருவதாக வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் க.துரைசிங்கம் தெரிவித்துள்ளார். (ஓ)

## மரண அறிவித்தல்

### திருமதி தவராணிச்சந்திரா சிவபாதசுந்தரம்



ஓடை அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், கீழ்க்கட்டளை, மடிப்பாக்கம், சென்னையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவராணிச்சந்திரா சிவபாதசுந்தரம் 17.07.2014 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராசரத்தினம்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரத்தின் அன்பு மனைவியும், அருட்செல்வம், மகேந்திரன், புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கமலவதி, வசந்தாதேவி, பரமேஸ்வரன், மண்டலேஸ்வரி, தங்கமணி, பாலபரமேஸ்வரி, நவரத்தினராசா ஆகியோரின் மைத்துனியும், தயாளினியின் உடன் பிறவா சகோதரியும், ரவின்நாத் (லண்டன்), ஜெகன்நாத்(லண்டன்), ரதிராஜ் (ஜேர்மனி), அசோக் (இந்தியா), சுவப்ணா(இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தாட்சாயினி அவர்களின் அன்பு மாமியும், ஆதியின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.07.2014 புதன்கிழமை மு.ப.10.00 மணிக்கு சென்னையிலுள்ள கீழ்க்கட்டளை இந்து மயானத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்வாய் தெற்கு,
அல்வாய்.

தகவல்:
கோபி (மகன்)

(49708)(6.4)

## நிர்வாகிகள் தெரிவு

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வு அண்மையில் கழக அலுவலகத்தில் இடம் பெற்றது.

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட இரண்டாவது உப ஆளுநர் லயன் மருத்துவர் வி. தியாகராசா முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு புதிய நிர்வாகிகளுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

கழகத்தின் புதிய தலைவராக லயன் த. இரவீந்திரனும், செயலாளராக லயன் மருத்துவர் இ.கந்தையாவும், பொருளாளராகலயன் சீமாட்டி அ.சரோஜாதேவியும் ஏனைய நிர்வாகி களும் தமது பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டனர். (வ-9)

## 11 ஆம் ஆண்டில் பரவிடும் நினைவுகள் தூயவளே துதிக்கின்றோம்!



திருமதி
**மகேஸ்வரி குஞ்சிதபாதம்**

திதி :
அபரபக்க சப்தமி
(18.07.2014)

மண்ணில்
04.09.1943

விண்ணில்
21.07.2003

(50167) (7.6.3)

அன்பே சதமென்ற
அழியாத தத்துவத்தால்
துன்பச்சுமை துணித்த
தூயவளே! துதிக்கின்றோம்!

பிரிவுத் துயரால் பெருநோயுறும்
துணைவர், பிள்ளைகள்,
மருகன், மருகிகள்,
பேரப்பிள்ளைகள் : விதுரன், திவ்யன், நித்யன், சௌமியன், சௌமியா.

சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

# உறவினராலேயே அதிகம் சிறுவர்கள் துஷ்பிரயோகம்

## உளநல வைத்திய அதிகாரி மருத்துவர் எம்.ஜே.எம்.நௌபல் தெரிவிப்பு

அம்பாறை, ஜூலை 21

சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகளவில் உறவினர்களினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவித்துள்ளார் உள நல வைத்திய அதிகாரி மருத்துவர் எம்.ஜே.எம். நௌபல்.

வீட்டுச் சூழலை மகிழ்ச்சிகரமானதாக்க, பெற்றோரது திறன் விருத்தி விழிப்புணர்வு கருத்தரங்கு அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,


"சிறுவர்கள் எல்லோரிடமும் பழக வேண்டும். அதற்காக எமது பிள்ளைகளும், பெண்களும் வாழுகின்ற சூழல் பாதுகாப்பானதாக உள்ளதா? என்பதனை முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு சூழலிலும் ஆபத்துகள் நிறைந்து காணப்படுகின்றன. அதற்கு ஏற்றவாறு பெற்றோர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும்.

16 வயதுக் குட்பட்ட அனைத்து பிள்ளைகளுக்கும், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் இதர தேவைகளை வழங்குவது பெற்றோர்களின் கடமை என்பதனை சிறுவர் பாதுகாப்புச் சட்டம் கூறுகின்றது.

இதேவேளை, பெண்கள் குடும்பப் பிரச்சினையால் பாதிக்கப்படுவதையும், துஷ்பிரயோகம் செய்யப்படு வதையும் தடுக்கும்பொருட்டு 2005ஆம் ஆண்டின் குடும்ப வன்முறைச் சட்டம் பெண்களைவலுவூட்டியுள்ளன. கணவன், மனைவி பிரச்சினைகள் மற்றும் குடும்பப் பிரச்சினைகள் காரணமாக சிறுவர்கள் அதிகம் பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றனர்.

இவ்வாறான பிரச்சினைகளே மனநோய் ஏற்படுவதற்கும் முக்கிய காரணமாக அமைகின்றது"- என்று தெரிவித்துள்ளார். (ற)



அடிக்கல் நடும் நிகழ்வு

# பாடசாலை கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

மட்டக்களப்பு மகிழூர் சக்தி வித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ள புதிய இரண்டு மாடி கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கட்டடத்துக்கான அடிக்கல்லை மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் வி.முரளிதரன், ஜனாதிபதியின் ஆலோசகர் சி.சந்திரகாந்தன், கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமல வீர திசாநாயக்க, பட்டிருப்புக் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ந.புள்ளநாயகம் ஆகியோர் நட்டனர்.

இந்தநிகழ்வில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் எம்.கோபாலரெத்தினம், களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் கு.சுகுணன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ற)

# முனைக்காடு வீரபத்திரர் ஆலய உற்சவம்

மட்டக்களப்பு, ஜூலை 21

வரலாற்று சிறப்புமிக்க பழம்பதி முனைக்காடு ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி ஆலய வருடாந்த உற்சவம் இன்று திங்கட்கிழமை திருக்கும்பம் வைத்தலுடன் ஆரம்பமாகி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பள்ளயம் கொடுத்தலும், சனிக்கிழமை காலை 10 மணிக்கு சர்க்கரை அமுது படைத்தலுடன் இனிதே நிறைவு பெறவுள்ளது.

உற்சவ காலங்களில் கதாப் பிரசங்கங்கள் கலைநிகழ்வுகள் நாட்டுக்கூத்துக்கள் என்பன நடைபெறவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)




அறுவடை விழாவின் போது

# சிறுபோக நெல் அறுவடை விழா

மட்டக்களப்பு, ஜூலை 21

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்டூர் கமநல கேந்திர நிலையம் ஏற்பாடு செய்திருந்த சிறுபோக நெல் அறுவழை விழா நேற்றுமுன்தினம் ஆனைகட்டியவெளி வயற் கண்டத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் என்.சிவலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்தவைபவத்தில், மீள் குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூரத்தி முரளிதரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அறுவடையை ஆரம்பித்து வைத்தார்.

மேலும் இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.கிரிதரன், கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின், மட்டக்களப்பு மாவட்டத்திற்குரிய உதவிப் பணிப்பாளர், ஆர. கோகுலதாசன், போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் என்.வில்வரெத்தினம், மீள் குடியேற்றப் பிரதிய அமைச்சரின் இணைப்பச் செயலாளர்கள் மற்றும் விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற)

# அனர்த்த ஒத்திகை போரதீவுப்பற்றில்



அனர்த்த ஒத்திகையின் போது

மட்டக்களப்பு, ஜூலை 21

மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மற்றும் அக்ரெட், கண்டிக்கப் இன்ரநசனல், ஒஸ்பாம், சேவ் த சில்ரன் ஆகிய அரசசார்பற்ற அமைப்புக்களுடன் போரதீவுப் பற்று பிரதேச செயலகம் இணைந்து நடத்திய அனர்த்த ஒத்திகை நிகழ்வுகடந்த வெள்ளிக்கிழமை போரதீவுப்பற்று பிரதேசத்தின் ஆனைகட்டிய வெளி கிராமத்தில் நடைபெற் றது.

ஆனைகட்டியவெளி கிரம சேவகர் ந.சத்தியநாராயணனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.இன்பராஜன், அக்ரெட் நிறுவனத்தின் மாவட்ட திட்ட உத்தியோகஸ்தர் இ.கஜேந்திரன், போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் என்.வில்வரெத்தினம், வெல்லாவெளிப் பிரதேச இர்ாணுவ பொறுப்பதிகாரி மேஜர் அரசங்க, மற்றும் கிராம பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அனர்த்தம் ஒன்று ஏற்படும் வேளையில் மக்கள் எவ்வாறு பாதுகாப்பாக வெளியேறுவது, தேடுதல்களை எவ்வாறு மேற்கொள்வது, முகாம்களை எவ்வாறு பராமரிப்பது, சுகாதார முதலுதவி செயற்பாடுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்தல் மற்றும் நிவாரண சேவைகளை மேற்கொள்வது தொடர்பான ஒத்திகைகள் இதன் போது செய்து பார்க்கப்பட்டன. (ற)

# வீதிகள் புனரமைப்பு



கோப்புப்படம்

கல்முனை, ஜூலை 21

கல்முனை மாநகரசபைக்குட்பட்ட நற்பிட்டிமுனை கிராமத்தில் உள்ள பல வீதிகள் கொங்கிறீட் வீதிகளாக செப்பனிடப்பட்டு வருகின்றது.

விவேகானந்தா குறுக்கு வீதி, பிள்ளையார் கோயில் வீதி, திருத்தனிகை வீதி, விஸ்ணு ஆலய வீதி , விஸ்ணு வீதி , விவேகானந்தா முதலாம் குறுக்கு வீதி ஆகிய வீதிகளே கொங்கிறீட் வீதிகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

கல்முனை மாநகர சபையின் ஏற்பாட்டில் நெல்சிப் திட்டத்தின் கீழ் 42 இலட்சத்து 48 ஆயிரம் ரூபா செலவில் இவை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# திடீர் சுற்றிவளைப்பில் சிக்கியது ஹெரோயின்

மட்டக்களப்பு, ஜூலை 21

மட்டக்களப்பு மதுவரி திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது 160 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிச்சநகர் லெப்பை வீதியில் நேற்றுமாலை மேற்கொள்ளப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பின் போதே குறித்த போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

போதைப்பொருள் வியாபாரி வியாபாரத்திற்குப் பயன்படுத்திய முச்சக்கரவண்டியை கைவிட்டுவிட்டு தப்பியோடியுள்ளார். முச்சக்கரவண்டியினுள்ளிருந்து போலியான அடை யாள அட்டைகள், ஒரு தொகை பணம் உட்பட வேறு பொருட்களும் மதுவரி அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பொருள்கள் அனைத்தும் இன்று மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-10)

# கல்முனை மாநகர சபை எல்லைக்குள் வீதி விளக்குகள்



கோப்புப்படம்

கல்முனை, ஜூலை 21

கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட கல்முனை தமிழ் பிரசேங்களுக்கான தெரு மின்விளக்குகள் பொருத்தும் நிகழ்வு மாநகர சபை தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கல்முனை தமிழ்ப் பிரதேசத்துக்கு உட்பட்ட உடையார் வீதி , வட்டவிதானை வீதி , குவாறி வீதி, அம்மன் கோயில் வீதி ஆகிய வீதிகளுக்கு தெரு மின்விளக்குகள் பொருத்தும் நிகழ்வு எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை அடுத்து, நான்கு உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்படும் ஒதுக்கீட்டின் அடிப்படையில் தெருமின் விளக்குகள் நான்கு வீதிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன. (ற)

## தொடர்ச்சிகள்

### எல் நினோவால்

சங்களுக்கும் அதிக வேகத்துடன் காற்று வீசக்கூடும் என்றும் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் எதிர்வரும் நாள்களில் மத்திய மாகாணத்தில் மணித்தியாலத்திற்கு 70 தொடக்கம் 80 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ற)

### வடக்கு

குறித்த செயலணி, இனிமேல் செயற்படாது என்று, அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாவட்டச் செயலகங்கள் தோறும் இயங்கி வந்த அதன் அலுவலகங்கள் கடந்த இரண்டு வருடத்துக்கு முன்னரே மூடப்பட்டிருந்தன.

ஜனாதிபதி செயலணி குறிப்பிட்ட தேவைக்காகவும், குறிப்பிட்ட காலப்பகுதிக்கும் என்றே உருவாக்கப்பட்டது என்றும், அதன் தேவை முடிவடைந்து விட்டது என்றும், ஜனாதிபதி விசேட செயலணியின் செயலராகப் பணியாற்றிய, டிதிவாரத்னவுக்கு, மீள்குடியேற்ற அமைச்சின் செயலர் ஜனக சுகததாச தெரியப்படுத்தியுள்ளார்.

அதேவேளை, குறித்த செயலணி மீள்குடியமர்வைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட போதிலும், வடக்கில் இன்னமும் 23 ஆயிரம் மக்கள் மீளக்குடியமர்த்தப்படாமல், முகாம்களிலும், உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர். (ற-5)

### விசாரணைகள்

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு அதுகுறித்து ஆலோசனை வழங்குவதற்காக, மூன்று சர்வதேச நிபுணர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளனர். நிபுணர் குழுவின் தலைவராக டெஸ்மன் டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"மிக முக்கியமான செயல் முறை ஒன்றில் பங்காற்ற நியமிக்கப்பட்டுள்ளது என்னை மிகவும் பெருமை கொள்ள வைக்கிறது. எனது சக நண்பர்கள் குறித்தும் நம்பிக்கை உள்ளது. நியாயமான விசாரணை நடப்பதை உறுதிப்படுத்த முடியும் என்று நான் நம்புகிறேன்"-என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச நிபுணர்களின் ஆலோசனைகளை ஏற்பதா இல்லையா என்பதை இலங்கை அரசே முடிவு செய்யும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (ற-5)

### மூன்று

இலங்கைக்குள் நுழைவதற்கு இலங்கை அரசு தடை விதித்துள்ள நிலையில் மேற்குறித்த மூன்று நகரங்களிலும் விசாரணைக்குழு தனது அமர்வுகளை நடத்தும். வட அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள புலம்பெயர் தமிழர்களும், தமிழர் உரிமைகள் குழுவினரும் விசாரணைக் குழு முன் முன்னிலையாகிச் சாட்சியமளிக்கவுள்ளனர். இலங்கையில் உள்ளவர்கள் தொலைபேசி, ஸ்கைப் போன்றவற்றின் மூலம் சாட்சியமளிக்கும் படியான ஏற்பாடுகள் செய்யப்படும். இலங்கையிலுள்ள மனித உரிமைகள் குழுக்களும் குறித்த இடங்களுக்குச் சென்று சாட்சியமளிக்க தயாராகவுள்ளன - என்று அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

ஐ.நா. விசாரணைக்குழுவின் முன்பாக சாட்சியமளிப்பது இலங்கையில் சட்டவிரோதமானது அல்ல. ஆயினும், ஐ.நா. விசாரணையின் போது இலங்கைக்கு எதிராகச் சாட்சியம் அளிப்பவர்களுக்கு சில அமைச்சர்கள், பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளனர் என்றும் அந்த ஊடகம் சுட்டிக் காட்டியுள்ளது.

அரச ஆதரவு குழுக்களின் அச்சுறுத்தல்களில் இருந்து சாட்சியங்களைப் பாதுகாப்பதற்காக, முன்னர் தருஸ்மன் குழுவினர் செய்தது போன்றே ஐ.நா. விசாரணைக்குழுவும் தனது சாட்சியங்களின் ஆளடையாளத்தை 20 ஆண்டுகளுக்கு இரகசியமாக வைத்திருக்க முடியும்.

ஆனால் சாட்சியத்தின் பெறுமதியை கேள்விக்குட்படுத்தும் வகையில் இலங்கை அரசு சாட்சிகளின் ஆளடையாளத்தை வெளிக்காட்டாததைச் சுட்டிக் காட்டலாம். இதையே அரசு முன்னைய தருஸ்மன் அறிக்கையிலும் செய்துள்ளது.

ஐ.நா.வின் விசாரணையை எதிர்க்கும் வகையில் இலங்கை அரசு தனது சொந்த விசாரணையை தொடங்கியுள்ளது. அதற்காக அரசு, காணாமல் போனோர் ஆணைக்குழுவின் பணி அதிகாரத்தை விரிவாக்கியுள்ளது. இதற்கமைவாக ஐ.நா. மற்றும் இலங்கை ஆணைக் குழுக்கள் சமகாலத்தில் செயற்படவுள்ளன.

ஆனால், ஐ.நா. ஆணைக் குழு, போரால் பாதிக்கப்பட்ட இடங்களில் வசிப்போர் பலரைச் சாட்சியங்களாக பெற முடியாது. இருப்பினும், இலங்கைக் குழுவின் முன்னிலையில் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து பலர் சாட்சியமளிப்பர். இதனால் இலங்கைக்குழுவின் அறிக்கைக்குக் கூடுதல் நம்பகத்தன்மை கிடைக்கும் வாய்ப்பு உண்டு. இதை வைத்துக்கொண்டு இலங்கை அரசு, ஐ.நா. விசாரணையைக் குறை கூறலாம்.

ஐ.நா. விசாரணைக் குழு, தனது பணியை முன்னெடுப்பதற்கு சொற்ப காலமே உள்ளது. அக்காலப்பகுதிக்குள் புதிய சாட்சிகளை பல்வேறு இடங்களிலிருந்தம் பெறவேண்டும், அறிக்கை எழுதவேண்டும். இலங்கை அரசின் கருத்துக்காக அதை அனுப்ப வேண்டும். ஜனவரி மாதமளவில் இறுதி அறிக்கையைக் கொடுக்க வேண்டும். அப்போது தான் அதனை 2015 மார்ச் மாதத்தில் இடம் பெறும் ஐ.நா மனித உரிமை சபைக்கு சமர்ப்பிக்கலாம்.

மறுபுறம் இலங்கைக்குழு சிக்கல் இல்லாத குறைந்த கால செய்முறை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது என்றும் அந்த ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ற-சி)

### ஆணைக்குழு

கள் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளன.

இந்தச் சந்திப்பு முடிவடைந்த பின்னர், அடுத்த மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரையில் காணாமற் போனோர் சம்பந்தமாக விசாரணை நடத்தும் ஆணைக் குழு தனது அமர்வுகளை மன்னார் மாவட்டத்தில் நடத்தவுள்ளது.

இந்த அமர்வின் போது புதிய விடயப் பரப்புக்களான போரின் போதான மனித உரிமை மீறல்கள், மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெறவுள்ளது. மனித உரிமை மீறல்கள், சர்வதேச சட்ட மீறல்கள் சம்பந்தமாகக் கொழும்பிலுள்ள ஆணைக்குழுவின் அலுவலகத்துக்கு மக்கள் கடிதம் மூலம் கூட முறைப்பாடுகளை அனுப்பமுடியும்.

இதேவேளை, காணாமற் போனோர் தொடர்பிலான ஆணைக்குழுவின் விடயப் பரப்பு விஸ்தரிக்கப்பட் டுள்ளதால், காணாமற் போனோர் தொடர்பில் சமர்ப்பிக்கவிருந்த இடைக்கால அறிக்கை கையளிப்பு பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

### தீர்க்கமான

திருக்கப் பல்வேறு சர்வதேச சக்திகள் முயற்சிக்கின்றன. சீனா, அமெரிக்கா, இந்தியா இன்னும் சொல்லப் போனால் பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கையைத் தமது தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகின்றன.

அதே சமயம் சீனாவோ அல்லது ஏனைய நாடுகளோ இலங்கையில் கால்பதிப்பது என்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகமானது என்பதை இந்தியா உணர்ந்துள்ளது. ஆனால் இலங்கை அரசு இந்தியாவை தனது கருத்துக்களுக்கு இணங்கச் செய்வதற்கு முயற்சிக்கின்றது.

#### ஈழ உணர்வு

இந்தியாவின் பாதுகாப்பு, இந்தியாவின் பொருளாதார நலன்கள் என்பவற்றுடன் - தமிழகத்தில் இருக்கும் 70 மில்லியன் தமிழ் மக்களின், ஈழத் தமிழ் மக்கள் தொடர்பான மன உணர்வுகளையும் இந்தியா கருத்தில் எடுக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது.

இதுவரை காலமும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறையை நடைமுறைப் படுத்தும் படியும் அதற்காக உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்தும்படியும் ஒவ்வொரு அரசும், இலங்கை அரசுக்குச் கூறிவந்தன. 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்று கூறிய ஜனாதிபதியும், இலங்கை அரசும் இதுவரை அவற்றை நடைமுறைப்படுத்தவில்லை என்பதை இந்தியாவும் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கின்றது.

#### முடிவு வேண்டும்

இலங்கை இனப் பிரச்சினையை எதிர்காலத்தில் எவ்வாறு கையாள்வது என்ற ஒரு கேள்விக்கும் இந்தியா தீர்க்கமான விடை காண வேண்டிய தேவையும் இருக்கின்றது. இனப் பிரச்சினை தொடர்பாக, இந்தியா சரியான கொள்கைத் திட்டமிடல்களை மேற்கொள்ளாவிட்டால், தமிழ் மக்கள் தமது பாதுகாப்பையும், தமது இருப்பையும், தமது தனித்துவத்தையும் தக்க வைத்துக் கொள்ளவும், தமக்கு உரித்தான உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளவும், தமக்கு ஆதரவளிக்கும் சக்திகளுடன் இணைந்து செயற்படும் நிலைக்குச் செல்வது தவிர்க்க முடியாததாகி விடும் என்பதை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கைத் தமிழ் மக்களின் அவசியமானதும் அவசரமானதுமான உறுதியான அதிகாரப் பகிர்வின் அடிப்படையிலான அரசியல் தீர்வை ஓரம்கட்டி இலங்கைத் தமிழ் மக்களுக்கான மனிதாபிமான உதவிகள் மூலம் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தலாம் என்ற தவறான அணுகுமுறையை இந்தியா மாற்ற வேண்டும். தமிழருக்கென இந்திய அரசால் பிரகடனப் படுத்தப்பட்ட உதவிகள் பெருமளவில் அரசால் கையகப் படுத்தப்படுவதையும் இங்கு சுட்டிக்காட்டுகின்றேன்.

#### அரசியல் தீர்வு

ஐ.நா. சபையினுடைய மனித உரிமை ஆணைக்குழுவின் மூலமாக இலங்கை மீதான போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பான விசாரணை ஒன்றை ஆரம்பித்ததன் மூலம் இலங்கை மீது அமெரிக்காவும் ஒருவகையான அழுத்தத்தைப் பிரயோகித்து வருகின்றது. இலங்கை மீது விசாரணை ஒன்று ஏற்படுத்தப்படுதை ஈழத் தமிழ் மக்கள் வரவேற்கும் அதே சமயம், விசாரணையின் அடுத்த கட்டமாக தமிழ் மக்களுடைய இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அமெரிக்கா என்ன விதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகின்றது என்றும் எதிர்பார்க்கின்றனர்.

கட்டமைப்பில்லாத கூட்டமைப்பு ஒரு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லக் கூடிய ஒரு கட்சியோ அல்லது ஒரு கூட்டமைப்போ அதுவும் மிக மோசமான ஆயுதப் போராட்ட அழிவுகளுக்குப் பின்னர், மக்களை தோல்வி மனப்பான்மையிலிருந்து மீட்டெடுத்து அவர்களை சரியான திசை வழியில் அழைத்துச் செல்ல வேண்டிய ஒரு அமைப்பு மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும், கட்டுக் கோப்புடையதாகவும் இருக்க வேண்டும். அத்துடன் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லக் கூடிய மக்கள் திரள் அமைப்புக்களை அணி திரட்டக் கூடியதாகவும் உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலிருந்தும் வரக் கூடிய சவால்களை எதிர்கொள்ளக் கூடிய மிகவும் பலம் பொருந்திய ஓர் அமைப்பாகவும் கட்டமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறு செயற்படக் கூடிய அமைப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்றதா என்பது கேள்விக்குரியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல கட்சிகளின் கூட்டாக இருந்தாலும் கூட, மக்கள் எதிர்பார்த்ததைப் போல அது ஒரு கட்டுக் கோப்பான ஒழுங்கமைக்கப்பட்ட ஓர் அமைப்பாக மாற்றம் பெறவில்லை"- என்று அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ற-5)

### தமிழக

மீனவ அமைப்புகள் கோரிக்கை விடுத்த நிலையில் மத்திய, மாநில அரசுகளின் முயற்சியால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மட்டும் விடுதலை செய்யப்பட்டனர்.

தற்போது இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஆகியோர் சந்தித்து பேசியதன் பயனாக இலங்கை சிறையில் இருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் மட்டும் விடுதலை செய்யப்பட்டனர். அத்துடன் சந்திப்பின் பின்னர் கைது செய்யப்பட்ட மீனவர்கள் விசாரணை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

நேற்று இராமேஸ்வரம் மீனவ பிரதிநிதிகளின் அவசர கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், இலங்கை சிறையிலுள்ள மீனவர்களை விடுக்க வேண்டும், படகுகளை விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி எதிர்வரும் 24ஆம் திகதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் தாம் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம் என்றும், வெள்ளைக் கொடியுடன் ஓகஸ்ட் மாதம் கச்சதீவுக்கு செல்வதென்றும் அறிவித்துள்ளனர். (ஐ-14)

### தமிழர்களின்

மாகவே அரசோடு கூடியிருக்கி றோம். தமிழர்களாகிய உங்களிடத்திலிருந்து நாங்கள் என் றுமே வேறுபட்டவர்கள் அல்லர். முஸ்லிம் சமூகமும், தமிழ் சமூகமும் ஒன்றுபடும் போது தான் இரு இனங்களின் விடுதலையும் சாத்தியமாகும். அத்து டன் இரு இனமும் இணைந் தால் மாத்திரமே இந்த இன வாத அரசை விரட்ட முடியும்.

நீங்கள் பீனிக்ஸ் பறவை போல, அழிக்க அழிக்க அந்தச் சாம்பலிருந்து மீள எழுகின்றீர்கள். உங்களிடத்தில் விடுதலை வேட்கை இருக்கின்றது. ஆனால் அது எங்களிடத்தில் இல்லை. இது தான் எமது சமூகத்தின் பலவீனம். நாம் பலவீனத்துடன் தொடர்ந்தும் பயணிக்க முடியாது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் நாங்கள் இந்த அரசுக்கு எதிராகவே பிரசாரம் செய்து அங்கு ஆசனங்களைப் பெற்றுக்கொண்டோம். அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எங்களுடன் பேச்சுக்களை நடத்தியது. நீங்கள் முதலமைச்சர் பதவியை எடுத்துக் கொள்ளுங்கள், வேண்டுமானால் எந்த அமைச்சுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளுங்கள். ஆனால் எங்களுடன் சேர்ந்து ஆட்சியமையுங்கள் என்று கோரியது.

ஆனால் , அன்று எமது தலைமை கிடைத்த ஆசனங்களைக் கொண்டு அரசுடன் பேரம் பேசியது. சில நிபந்தனைகளின் அடிப்படையில் அவர்களுக்கு ஆதரவு வழங்கினோம். மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாங்கள் இணைந்து கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைத்தால், வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு பிரச்சினை ஏற்படும் என்று எண்ணினோம். இதனால்தான் அரசுடன் இணைந்து ஆட்சியமைத்தோம். தற்போது எமது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும்

### மட்டு.

வருடைய சடலமே மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, திருகோணமலை, கோட்டை கடற்கரையில் ஆணொருவரின் சடலம் நேற்றுக் காலை கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது. திருகோணமலை, வித்தியாலய ஒழுங்கையை சேர்ந்த நாராயணபிள்ளை பாஸ்கரநாதன் (வயது-62) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் திருகோணமலையில் தனியாக வசித்து வந்தார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

(ஐ-10)

### உணவுக்கும்

ளும் வலியுறுத்தி வருவது வேதனை அளிக்கிறது. இவ்வாறு தெரிவித்தார் வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

வடமாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் காரைநகர் ஊரி கிராமத்துக்கு பவுசர்கள் மூலம் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்குத் தண்ணீர் கொண்டு வரவேண்டும் என்று அடம் பிடிப்பவர்களின் பின்னால் பெரிய அரசியல் சூழ்ச்சி மறைந்து கிடக்கிறது. உணவு உற்பத்தியை பாதிக்கும் இந்தத் திட்டத்தை எம்மால் அனுமதிக்க முடியாது.

காரைநகரில் தற்போது குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது. அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் குடிதண்ணீருக்காக வழங்கப்பட்டுள்ள நிதியும் போதாது இருப்பதால், காரைநகர் பிரதேச சபையால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. இந்த நிலையைக் கருத்தில் கொண்டு ஊரிக் கிராமத்துக்கான குடிதண்ணீர் விநியோகத்தை காரைநகர் பிரதேச சபையுடன் இணைந்து மேற்கொள்வதற்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சு முன்வந்துள்ளது. பவுசர்கள் மூலம் நாம் மேற்கொள்ளும் குடிதண்ணீர் விநியோகம் தற்காலிகமானது. ஊரிக் கிராமத்துக்கு மாத்திரம் அல்லாமல் தீவகம் முழுவதற்கும் சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ளும் வகையில் நிரந்தரமான திட்டம் ஒன்றை வடக்கு மாகாண சபை அதன் ஆட்சிக்காலம் முடிவடைவதற்குள் செய்து முடிக்கும்.- என்றார்.

இத்திட்டத்தின் மூலம் ஊரிக்கு நாள்தோறும் இரண்டு தடவைகள் பவுசர் மூலம் நீர் விநியோகம் மேற்கொள்ளப் படவுள்ளது.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்கள் பா.கஜதீபன், வே.சிவயோகன், காரைநகர் பிரதேசசபைத் தவிசாளர் வே.ஆனை முகன் மற்றும் ஊரிக்கிராம மக்களும் கலந்து கொண்டனர். (ஐ-14)

# வேலூர் சிறையில் நளினி தொடர் பட்டினிப்போர்


நளினி

வேலூர், ஜூலை.21
வேலூர் மத்திய சிறையில் ராஜீவ்காந்தி கொலை வழக்கு கைதிகளான முருகன் ஆண்கள் சிறையிலும், அவரது மனைவி நளினி பெண்கள் சிறையிலும் அடைக்கப்பட்டு உள்ளனர். அவர்கள் 15 நாள்களுக்கு ஒருமுறை சந்தித்துப் பேச அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் வேலூர் சிறையில் முருகனிடம் இருந்து பணம், கையடக்கத் தொலைபேசி பறிமுதல் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதைத் தொடர்ந்து முருகன், நளினியைச் சந்திக்க 2 வாரத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் கடந்த 12 ஆம் திகதி அவர்கள் சந்திக்கவில்லை.

கணவரைச் சந்திக்க தடைவிதிக்கப்பட்டிருப்பதால் நளினி, சிறையில் அளிக்கப்படும் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டு வருகிறார். இதனால் அவரிடம் சிறை அதிகாரிகள் பேச்சு நடத்தி வந்தனர்.

இந்தநிலையில் நளினியின் சட்டத்தரணி புகழேந்தி நேற்று முன்தினம் காலை வேலூர் பெண்கள் ஜெயிலில் உள்ள நளினியை நேரில் சந்தித்துப் பேசினார்.

பின்னர் வெளியே வந்த வக்கீல் புகழேந்தி கூறியதாவது:-

முருகனுடன் சந்திக்க மறுக்கப்பட்டதை தொடர்ந்து நளினி ஜெயிலில் 2 ஆவது நாளாக உணவுதவிர்ப்பில் இருந்து வருகிறார்.

மேலும் நளினி தன்னை விடுதலை செய்யக்கோரி உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு 22 ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது இவ்வாறு அவர் கூறினார். (வ)

# ஆஸியில் நடைபெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டம்

## தடுத்து வைக்கப்பட்டுள்ள 153 இலங்கை அகதிகளின் உண்மை நிலையை தெளிவுபடுத்துமாறு கோரி



மெல்போர்ண், ஜூலை.21
ஆஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 153 இலங்கை அகதிகளின்உண்மைநிலையை தெளிவுபடுத்துமாறு கோரி நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அகதிகளுக்காக செயற்படும் அமைப்பான, Refugee Action Coalition Sydney இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

சிட்னி டவுன் ஹோலில் இடம் பெற்ற இவ்வார்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான வெள்ளை இன மக்கள் கலந்து கொண்டனர்.

153 பேருடன் வந்த அகதிப் படகு உண்மையில் நியூசிலாந்துக்கு செல்வதாகத்தான் வந்ததாகவும் இந்த படகை அவுஸ்ரேலியா கடற்பரப்புக்கு அப்பால் சென்று 25 கிலோ மீற்றர் தொலைவில் பிடித்துள்ளனர் என்றும் அகதிகளுக்காக செயற்படும் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த அகதிப் படகைக் கைது செய்த கடற்படையினர் 200 லீற்றர் டீசல் வழங்கி உள்ளதாகவும் தெரிவித்தனர்.

தற்போது ஆஸ்திரேலிய அரசின் உத்தரவின் பெயரிலே அனைத்து தஞ்சக் கோரிக்கையாளர்களும் சுங்கத்திணைக்களத்தின் கப்பலில் அடைத்து வைக்கப் பட்டுள்ளதாக குற்றம் சுமத்தியே இந்த ஆர்ப்பட்டம் இடம்பெற்றது. (வ)

# யாழ். ஊடகங்கள் மக்களுக்கு உரிய தகவலை வழங்குகின்றன

## யாழ். அரச அதிபர் கூறுகிறார்

வலி.வடக்கு, ஜூலை 21
யாழ்.மாவட்ட ஊடகங்கள் உரிய தகவல்கள் உரிய முறையில் பொது மக்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதில் அதிக அக்கறை எடுத்து செயற்படுகின்றன என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்தார்.

இலங்கை பத்திரிகை பேரவையின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட ஊடகவியலாளர் களுக்கான பயிற்சி செயலமர்வு நேற்றுமுன்தினம் சனிக் கிழமை காலை 9 மணி தொடக்கம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே அரச அதிபர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முதல் தடவையாக நான் மட்டக்களப்பில் அரச அதிபராக இருந்த வேளையில் இலங்கை பத்திரிகை பேரவை யால் நடத்தப்பட்ட ஊடகவிய லாளர்களுக்கான செயலமர் வில் கலந்து கொண்டேன். தற்போது இரண்டாவது தடவையாக யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வில் கலந்து கொள்கின்றமை மகிழ்ச்சி யானதாகவுள்ளது.

நவீன உலகில் ஊடகத்துறையின் வளர்ச்சி ஊடாக எதனையும் நன்கு அறிந்து செயற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் தற்போது காணப்படுகின்றன. யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான இந்தப் பயிற்சிப்பட்டறை யாழ். மாவட்ட ஊடகவியலாளர்களை மேலும் வளப்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.

எங்களுடைய பணிகள் மேலும் அபிவிருத்தி அடையவும் மக்களுக்கான விவரங்களை எடுத்துக் கூறுவதிலும் இது நல்லதொரு வழிகாட்டியாகவும் பயனுடையதாகவும் அமையும். இதனை ஊடகவியலாளாகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (வ-86)

# சீனாவில், சூறாவளி உயிரிழந்தோர் 16

சீனாவின் தென் பிராந்தியத்தை தாக்கிய ரம் மாஸான் சூறாவளியால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்று அதிகாலை சீனாவின் 15 மாகாணங்களையும் தாக்கிய சூறாவளியை அடுத்து அப்பகுதியிலுள்ள சுமார் ஒரு இலட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குவெளியேற்றப்பட்டுள்ளனர். சூறாவளியால் சுமார் 3 மில்லியன் மக்கள் பாதிக்கப் பட்டுள்ளதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனால் தொலைத்தொடர்பாடல்களும் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் போக்குவரத்து நடவடிக்கைகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பிலிப்பின்ஸை கடந்த செவ்வாய்க்கிழமை தாக்கிய ரம்மாஸான் சூறாவளியால் 89 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# கைதடி இல்ல முதியவர்கள் 40 பேர் வற்றாப்பளைக்கு ஆன்மிகப் பயணம்

கைதடி, ஜூலை 21
கைதடி அரச முதியோர் இல்லத்தைச் சேர்ந்த முதியோர்கள் ஆன்மிகப் பயணமாக கடந்த சனிக்கிழமை வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்துக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

40 முதியோர்கள் இந்தப் பயணத்தை மேற்கொண்டனர். கண்ணகை அம்மன் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்ட முதியவர்கள் அன்றைய தினம் முற்பகல் 10 மணியளவில் ஆடிப்பிறப்பை முன்னிட்டு ஆலய முன்றிலில் ஆடிக்கூழ் தயாரித்து பருகினர். நண்பகல் 12 மணிக்கு பொங்கல் பொங்கி ஆலயத்துக்கு வந்த பக்தர்கள், சுற்றுலாப் பயணிகளுக்கும் வழங்கினர்.

புதுக்குடியிருப்பிலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்குரிய இனிய வாழ்வு இல்லத்துக்கு அவர்கள் சென்றனர். அங்குள்ள மாற்றுத் திறனாளிகளுடன் இணைந்து பேச்சு, நடனம், குழுநடனம் என கலை நிகழ்வுகளிலும் ஈடுபட்டனர். அத்துடன் மாற்றுத் திறனாளிகளின் தேவைகளையும் கேட்டறிந்தனர். அங்கு நீண்ட நேரத்தை செலவழித்த முதியோர்கள் இரவு 7 மணியளவில் இல்லம் திரும்பினர்.

இந்தப் பயணம் தமக்கு பெரும் ஆறுதலையும் சிறந்த அனுபவத்தையும் தந்ததாக முதியவர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். (ஓ-ரி-288)

# கப்பலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 153 தமிழரையும் கரைக்கு அனுப்புக

## ஆஸியிடம் பொதுமன்னிப்புச் சபை கோரிக்கை

மெல்போர்ண், ஜூலை.21
கடந்த மூன்று வாரங்களாக கடலிலுள்ள கப்பலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் 153 பேரையும் கரைக்கு கொண்டு வந்து கோரிக்கைகளை பரிசீலிக்குமாறு சர்வதேச பொதுமன்னிப்புச் சபை ஆஸ்திரேலிய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

புகலிடக் கோரிக்கையாளர்கள் அனைவரும் ஆஸ்திரேலியக் கப்பலில் மிகவும் கடுமையான நிலைமைகளில் கடும் பாதுகாப்புடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புகலிடக் கோரிக்கையாளர்களைத் தடுத்து வைத்திருத்தல் சட்டவிரோதமானது என்று நீதிமன்றம் அறிவிக்க வேண்டும் என்று கோரி மனு ஒன்று தாக்கல் செய்யப் பட்டது.

அந்த மனுவில், ஜன்னல்கள் இல்லாத மூடிய அறைகளுக்குள், மொழிபெயர்ப்பு வசதிகள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் இலங்கையர்களின் நிலைமை குறித்து விவரிக்கப் பட்டுள்ளது.

சர்வதேச பொதுமன்னிப்புச் சபையின் ஆஸ்திரேலிய அகதிகள் இயக்கத்துக்குரிய ஒருங்கிணைப்பாளர், கிராம் மெக்-கிரெகர் கருத்து வெளியிடுகையில், "அவர்கள் ஒரு அறையில் இருந்து மற்ற அறைக்கு செல்ல வேண்டுமானால், அதற்கு அனுமதி பெறுவது அவசியம் என்று தெரிவதாகக் கூறினார்.

ஒரு மாதத்துக்கு முன்னர் பாண்டிச்சேரியில் இருந்து படகு ஒன்றில் புறப்பட்டு வந்து கிறிஸ்மஸ் தீவிற்கு அருகிலுள்ள கடற்பரப்பில் இடைமறிக்கப்பட்ட அகதிகள் பற்றிய விபரங்களைப் பெறுவதற்கு வேறு வழி இல்லாத நிலையில், மேல் நீதிமன்றம் மாத்திரமே ஒரே வழியாக அமைந்துள்ளது. கடந்த வாரம் மெல்போர்ணில் நடைபெற்ற வழக்கு விசாரணையில், புகலிடக் கோரிக்கையாளர்கள் இருக்கிறார்கள் என்பதை முதற் தடவையாக அங்கீகரித் திருந்தது. (வ)

# மான் இறைச்சி விற்பனை செய்த பெண் கைது

கொழும்பு, ஜூலை.21
சட்டவிரோதமான முறையில் மான் இறைச்சி விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பெண்ணொருவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

பட்டியடிச்சேனை கல்மடுவைச் பகுதியைச் சேர்ந்த கணேசன் சிவரஞ்சினி என்பவரே இவ் வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

அவரிடமிருந்து ஒரு கிலோ நிறையுடைய மான் இறைச்சி பறிமுதல் செய்யப்பட்டதுடன் இறைச்சி விற்பனைக்காக உபயோகிக்கப்பட்ட முச்சக்கர வண்டியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபரை வாழச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (வ)

# இளைஞர், யுவதிகளின் தியாகமே எம்மைச் சர்வதேசமயமாக்கியது

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21
ஆயுதப் போராட்டத்தில் சில தவறுகள் இருக்கின்றன. அதனைக் காட்டிலும் மேலான தியாகம் இருக்கின்றது. இன்று அந்தத் தியாகமே, தமிழர் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்தி, ஐ.நா வரை கொண்டு சென்று விட்டிருக்கின்றது - இவ்வாறு தெரிவித்துள்ளார் ரெலோ இயக்கத்தின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 34 ஆவது மாநாடு வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது,

"இன்றைய காலத்தில் ஆயுதப் போராட்டத்தை அருவருக்கத்தக்க ஒன்றாகப் பார்க்கின்றார்கள். அஹிம்சைப் போராட்டமாக ஆரம்பிக்கப்பட்டு பின்னர் அது ஆயுதப் போராட்டமாக பரிணமித்தது. அதற்காக எமது இளைஞர் - யுவதிகள் செய்த தியாகங்களை நாம் மறக்கக் கூடாது. ஈழம் என்ற நாட்டை பெறுவதற்காக எத்தனையோ ஆயிரம் ஆயிரம் பேர் அந்த உயரிய இலட்சியத்துக்காக தமது இன்னுயிர்களை மாய்திருக்கின்றார்கள். இந்தத் தியாகம் என்பது இலகுவான விடயமல்ல.

ஆயுதப் போராட்டத்தின் காரணமாகத்தான், தமிழர் பிரச்சினை இன்று சர்வதேச மயப்பட்டிருக்கின்றது" - என்று தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன்,

"போரால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பாதுகாப்பு கொடுக்க முடியாத கையாலாகாத நிலையில் நாம் நின்று கொண்டிருக்கின்றோம். அவர்களுக்குரிய வேலைத் திட்டம் என்ன என்பது யாரும் தெரியாது. பெண்களுக்கு சமூகத்திலும் சரி, அரசியலிலும் சரி கணிசமான பங்களிப்பு வழங்கப்பட வேண்டும்.

மேலும் ஆரம்பமாகியுள்ள ஐ.நா விசாரணைக்கு சாட்சியமளிப்பதற்கு நாம் தயார்ப்படுத்த வேண்டும்"- என்று தெரிவித் தார்.

நவசமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண அங்கு உரையாற்றும் போது,

"தமிழரின் சமத்துவம், சுயாட்சி மற்றும் சுயநிர்ணய உரிமைக்காக நாம் தொடர்ந்து போராடி வருவோம். அதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எமது ஆதரவுண்டு.

எதிர்காலத்தில் நடைபெறப் போகும் தேர்தல்களில் அரசை தோற்கடிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. எனவே, தென்னிலங்கையில் நடைபெறவுள்ள எந்தவொரு தேர்தலையும் தமிழ் மக்கள் புறக்கணிக்கக்கூடாது. இந்த இனவாத அரசை தோற்கடிக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்"- என்று தெரிவித்தார். (ந-5)

# மக்களின் காணிகளைத் துப்புரவு செய்யவிடாது தடுத்த பொலிஸார்



யாழ்ப்பாணம், ஜூலை 21
கீரிமலையில் கடற்படையினரின் தேவைகளுக்காகச் சுவீகரிப்புச் செய்யப்படவுள்ளன என்று கூறப்படும் காணிகளின் உரிமையாளர்கள், நேற்றுத் தமது காணிகளைத் துப்புரவு செய்ய முயன்றபோது, பொலிஸார் அதனைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

அதனையடுத்து பாதிக்கப்பட்ட மக்கள் பொலிஸாருக்கு எதிராக, காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவுசெய்துள்ளனர்.

கீரிமலையில் கடற்படைத் தேவைக்காக சுவீகரிப்புச் செய்யப்படவுள்ள தமது காணிகளைத் துப்புரவு செய்து குடியமரப் போகின்றோம் என்று காணி உரிமையாளர்கள் கூறியிருந்தனர். திட்டமிட்டவாறு நேற்று காணிகளைத் துப்பரவு செய்வதற்காக பொதுமக்கள் திரண்டனர். பொதுமக்களுடன் வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், உதவித் தவிசாளர் எஸ்.சஞ்சீவன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் ஆகியோரும் சம்பவ இடத்துக்கு வந்திருந்தனர்.

ஆயினும் பொதுமக்கள் தமது காணிகளுக்குள் உள்நுழைய முடியாதவாறு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். இந்தக் காணிகள் கடற்படையினர் தமது காணிகள் என்று தெரிவித்துள்ளனர் என்று குறிப்பிட்ட பொலிஸார், அதனால் அதற்குள் அத்துமீறி நீங்கள் பிரவேசிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்தக் காணிகளின் உறுதிகள் எம்மிடம் இருக்கின்றன. நாம் பூர்வீகமாக வாழ்ந்த காணி. இதற்குள் நாம் செல்வதனை யாராலும் தடுக்க முடியாது என்று காணி உரிமையாளர்கள் வாதிட்டுள்ளனர். பொலிஸாரே, கடற்படையினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே குறித்த பகுதிக்கு தாம் வந்துள்ளதாகவும், அத்துமீறிச் செயற்பட்டால் கைது செய்யப்படுவீர்கள் என்றும் மிரட்டியுள்ளனர்.

அதனையடுத்து பொதுமக்கள், தமது காணிகளுக்குச் செல்வதற்கு பொலிஸாரே தடையாக இருக்கின்றனர் என்று தெரிவித்து காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். தமது காணி உறுதிகளைச் சமர்பித்து அவர்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர். (ந-5)

## மரண சகாய நிதித் திட்டம் அங்குராரப்பணம்



யாழ்ப்பாணம்.ஜூலை 21
யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் ஓட்டோ சாரதிகளின் குடும்ப நலன் காக்கும் திட்டமான மரண சகாய நிதித் திட்டம் அங்குராரப்பணம்செய்து வைக்கப்பட்டது.

அதன்படி யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஓட்டோ சாரதிகளுக்கு உயிரிழப்பு சம்பவிக்கும் போது அவர்களது குடும்பத்தின் வாழ்வாதாரத் தேவைகளுக்காக ஒரு தொகை இழப்பீட்டுத் தொகையை ஓட்டோ சங்கம் வழங்கும்.

ஏற்கனவே ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டு வரும் நிலையில் கூடிய இழப்பீட்டுத் தொகையை வழங்க பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில்கள் முயற்சி அபிவிருத்தி அமைச்சிடம் கோரியிருந்த நிலையில் இதற்கென ஒரு கோடி ரூபா நிதியை வழங்க அமைச்சு முன் வந்துள்ளது என்று தெரிவிக்கப் படுகின்றது.

ஓட்டோ சங்கத்தின் தலைவர் இராசையா மனோகரன் தலைமையில் யாழ்.இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத் தொழில்கள் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.எ.டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரிபற்குணராசா, போக்குவரத்து பொலிஸார் மற்றும் 500 இற்கும் மேற்பட்ட ஓட்டோ சாரதிகள் கலந்து கொண்டனர். (ந-14)



ஹப்புத்தளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெல்லவாயவிலிருந்து பண்டாரவளை நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் கொழும்பு பிரதான வீதியில் திடீரென் தீப்பிடித்து எரிந்துள்ளது. நேற்றுக் காலை இச்சம்பவம் ஏற்பட்டுள்ளது. பஸ்ஸில் பயணித்த பயணிகள் எவ்வித பாதிப்புமின்றி தப்பியுள்ளனர். இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இவ்விபத்து ஏற்பட்டது என்று ஹப்புத்தளை பொலிஸார் கூறுகின்றனர். (ந)

## பொலிஸை கடத்திய சந்தேக நபர்கள் கைது

கொழும்பு, ஜூலை 21
பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை நேற்றுக் கடத்திச் சென்றனர் என்று கூறப்படும் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கல்கிசை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, கல்கிசையில் அமைந்துள்ள டெம்பிலஸ் பாதையில் இரவு நேர ரோந்து சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் நேற்று அதிகாலை முச்சக்கரவண்டியில் வந்த இனம்தெரியாதோரால் கடத்திச்செல்லப்பட்டுள்ளார்.

பின்னர் கொகுவலையில் உள்ள கோவில் ஒன்றுக்கு அருகில் கொண்டுவந்து விடப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலேயே மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.(ந)

# உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு இளைய வளர்ப்பு வாழைச் செய்கை

யாழ்ப்பாணம், ஜூலை.20
வடமாகாணத்தில் வாழைச் செய்கையாளர்களின் உற்பத்தி நடவடிக்கைகளை தர முயர்த்துவதற்கு ஏதுவாக வாழைக்குலைகளுக்கு உறை போட்டு உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் விவசாயத்திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

தற்போது வாழைச் செய்கை யாளர்கள் சாதாரண உற்பத்தி நடவடிக்கையால் பழங்களை தரமுடையதாக விற்பனை செய்ய முடியாத நிலையில் உள்ளனர். அத்துடன் வாழைக் குலைகளில் ஒருவித பீடை யின் தாக்கமும் ஏற்பட்டு உற் பத்தியில் வீழ்ச்சியும் ஏற் படுகிறது.

இதனால் வாழைச்செய்கை யாளர்களுக்கு போதிய வருமானம் கிடைப்பதில்லை. எனவே வருமானத்தை அதிகம் பெறக் கூடியதாக உற்பத்தி நடவடிக்கைகளை விவசாயி கள் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

இதற்காக விவசாயிகள், வாழைக்குட்டிகளை உற்பத்தி செய்யத்தேவையில்லை. இளைய வளர்ப்பின் மூலம் உற்பத்தி செய்யப்படும் குட்டிகளை விவசாயத்திணைக் களங்களில் பெற்று பயன டைய முடியும்.

அத்துடன் இதற்கான ஆலோ சனைகளையும் விவசாயப் போதனாசிரியர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். இதனூடாக வாழைச்செய் கையாளர்கள் வெளிமாவட்டங்களிலும் சந்தை வாய்ப் பைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ஜ-14)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

விற்பனைக்கு
தரமான கொங்கிறீற் கல் (கருங்கல் சல்லியில் அறுக்கப்பட்டது) விற்பனைக்கு விலை 35/=
விநியோகம் செய்வதற்குட்பட்ட 38/= (50171) (4.6.3)
தொடர்பு: 078 615 5929, 021 320 5939

## மரண அறிவித்தல்

### முருகன் திலகேஸ்வரன்



(ராசன்.சித்தப்பா) (ராஜன் வெல்டிங் வேக் சொப் உரிமையாளர்)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் திலகேஸ்வரன் (ராசன், சித்தப்பா) (ராஜன் வெல்டிங் வேக்சொப், உரிமையாளர்), நேற்று (20.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிதம்பரம் மற்றும் இளையகுட்டி தம்பதியாரின் மருமகனும், வசந்தியின் அன்புக் கணவரும், துஷாந்தி, பகீரதன்,தேனுஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவனடியான், இராசமணி, கோபால சிங்கம், யோகேஸ்வரன், ரவீந்திரன், காலஞ் சென்றவர்களான அரியமலர், தங்கராணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (21.07.2014) மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வடக்கு எருளன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.